378

பிஸ்மில்லா ஹிர்ரஹுமா னிர்ரஹீம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1947
MADRAS

இஃது

# நஸீஹத்துல் இசுலாம்

## ஷாபியிய்யா

இட்டா. பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்,
சென்னை சக்கரவர்த்தி பிரஸ்
ரிஜிஸ்டர் காபிரைட்] 1947 [அணா 0-10-0
நெ. 189, தங்கசாலை வீதி, மதராஸ்.

Q7:332
N47
111231

பிஸ்மில்லாஹி

இஃது

# நஸீஹத்துல் இஸ்லாம்

## ஷாபியிய்யா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1947
MADRAS

இந்த புஸ்தகம் திருவாங்கூர் மகாகனம்
முஹம்மது முஹியித்தீன் பிள்ளை யவர்கள் குமாரர்
முஹியித்தீன் ஸுல்த்தான்பிள்ளை ஆலீப் சாஹிபு
அவர்களால் கோர்வை செய்யப்பட்டு,
சில ஆலீம்களால் பார்வையிடப்பட்டு
தக்க சறாத்தும் இதனுடன்
சேர்க்கப்பட்டது.

சென்னை இட்டா,

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

சக்கரவர்த்தி பிரஸ்,

நெ. 189, தங்கசாலை தெரு, சென்னை.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1947 [அணா 10.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்

இஃது

# நஸீஹத்துல் இஸ்லாம்

ஷாபியிய்யா,

Q7:33 N47

## அறபுவாக்கியம்

அஊதுபில்லாஹி மினஷ்ஷைத்தா னிற்றஹீம்

### இதன் பொருள்

எடுத்தெறியப்பட்ட ஷைத்தானுடைய தீங்குகளை விட்டும் அல்லாஹுத்தஆலாவைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன்.

## அறபுவாக்கியம்

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

### இதன் பொருள்

அல்லாஹுத்தஆலாவின் அழகிய திருநாமத்தைக் கொண்டு துவக்கம் தொடங்குகிறேன். பூலோகத்தின்கண் நல்லவர்கள் பொல்லாதவர்கள் எல்லோருக்கும் கிருபை செய்கிறவன் ஆகிறத்தில் முஃமீன்களுக்கு மட்டும் தனதாகக் கிருபை செய்கிறவன்.

மேன்மை பொருந்திய இஸ்லாமார்க்கமாவது கலிமா, தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு, ஆகிய இவ்வைந்து காரியங்கொண்டெடுக்கப் பட்டதாகவிருக்கும். ஆதலால் அவ்வைந்து காரியங்களுக்குமான அறபு வாக்கியங்களையும் பொருளுடனே தனித்தனி விளக்கமாகச் சொல்லுகின்றனம்.

## அவ்வல்க்கலிமாத் தையிபு

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி

111231

### இதன் பொருள்.

வணக்கத்துக்குரிய பாத்திரவான் யாருமில்லை அல்லாஹுத்தஆலாவைத் தவிர முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல

மாகிறவர்கள் அல்லாஹுத்த ஆலாவின் திருத்தூதராக விருக்கு மென்றும் உண்மையாக நானறிந்து ஈமான் கொண்டே னென்பதாம்.

## இரண்டாங் கலிமா ஷஹாதத்து

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹுதஹுலா ஷரீக்கலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வற சூலுஹு.

### இதன் பொருள்

அஷ்ஹது இன்னும் திடனாக நான் அறிந்து உண்மை கொண்டு சாட்சி சொல்கிறேன். (அன்லாயிலாஹ இல்லல் லாஹு) கருமமாகிறது உண்மையாக வணக்கத்துக்குப் பாத்திர வான் யாருமில்லை அல்லாஹுத்த ஆலாவைத் தவிர (வஹ் தஹு) அவன் தனித்தவன் லாஷரீக்கலஹு அவனுக்கு யாதொரு இணையுமில்லை இன்னம் திடனாக நான் சாட்சி சொல்லு கிறேன் உண்மையாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்களாகிறவர்கள் அல்லாஹுத்த ஆலாவின் அடியா ரென்றும் அவனுடைய திருத்தூத ரென்றும் உண்மையாக நான றிந்து ஈமான்கொண்டே னென்பதாம்.

## மூன்றாவது கலிமா தம்ஜீது

ஸுபுஹானல்லாஹி பல்ஹம்துலில்லாஹி வலாயிலாஹ இல் லல்லாகு வல்லாஹு அக்பற் வலாஹவ்வலாக் குல்வத்த இல்லா பில்லாஹில் அலில்யில அலீம்.

### இதன் பொருள்

ஸுபுஹானல்வாஹி - அல்லாஹுத் தஆலா துய்தானவன் வல்ஹம்துலில்லாஹி-எல்லாப் புகழும் புகழ்ச்சியும் அல்லா குத்த ஆலாவுக்காக விருக்கும் வலாயிலாஹ இல்லல்லாஹு வணக்கத்துக்குப் பாத்திரவான் யாருமில்லை. அல்லாஹுத்தாலா வைத்தவிர வல்லாஹு அக்பர்-அல்லாஹுத்த ஆலா மெத்தவும் பெரியவன் வலாஹவுலாவலாக் குவ்வத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அலீம் யாதொரு பாவத்தைவிட்டும் திரும்புதலுமில்லை யாதொரு இபாதத்தின்பேரிலும் பெலனுமில்லை வலுப்பமாகிய உயர்த்தியாகிய அல்லாஹுத் தஆலாவின் உதவிகொண்டே யொழியவென்று ஈமான் கொள்வதாம்.

## நாலாங் கலிமா தௌஹீது

லாயிலாஹ இல்லல்லாஹு வஹதஹு லாஷரீக்க லஹு லஹுல் முல்க்குவலஹுல் ஹம்துயுஹ்யீவயுமீத்து பியதிஹில் கைறுவஹுவ அலாக்குல்லி ஷையின்கதீறு.

இதன் பொருள்

## நாலாங் கலிமா ஓர்மைப்பாடுடையது

வணக்கத்துக்குப் பாத்திரவான் யாமில்லை அல்லாகுத்த ஆலாவைத் தவிர அவன் தனித்தவன் அவனுக்கு இணைதுணை யாருமில்லை இன்னம் அவனுக்கே இராஜாங்கம் அவனுக்கே புகழ் அவன்தான் சலவனுங்கலும் தரிபட்டிருக்கிறது இன்னம் அவன் எல்லா வஸ்துவின் பேரிலும் சத்துவம் உடையவ னென்றும் ஈயான் கொள்வதாம்.

## ஐந்தாங்கலிமா றத்துல் குபிர்

அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக்க மின்அன்உஷ்ரிக்க பிக் கஷைஅன் வஅன அஃலமுபிஹீ வஅஸ்தக்பிறுக்க லிமாலா அஃலமுபிஹீ, துப்த்து அன்ஹு வத்தபர்றஃத்து, மினல்குப்ரி வஷ் ஷிறுக்கி வல்மஆஸீ, குல்லிஹா வஅஸ்லம்து வஆமன்து வஅகூலுலாயிலாஹ இல்லல்லாகு முஹம்மதுர் றசூலுல்லாஹி

இதன் பொருள்

## ஐந்தாங் கலிமா குபிரை றத்துச்செய்கிற துடையது

ஆண்டவனே ஓர் வஸ்துவைக் கொண்டு உன்னை இணைவைக்கிறதை விட்டும் நான் உன்னிடம் காவல் தேடுகிறேன் இன்னம் நான் அதைக் கொண்டு அறிந்தவனாகவிருக்கினும் அறியாதவனாக விருக்கினும் சரி உன்னிடத்தில் பிழைபொறுக்கத் தேடுகிறேன். அதைவிட்டும் தௌபாச்செய்து மீளுகிறேன் இன்னம் குபிர் சிறுக்குபாவங்களடங்கலைவிட்டுப் நான் நீங்கிக்கொண்டேன் நான் இஸ்லாமாயிருக்கிறேன் ஈமான் கொண்டிருக்கிறேன். இன்னம் லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்ம துர்றசூலுல்லாஹி யென்கிற கலிமாவை நான் சொல்லுகிறேனென்று சொல்லி ஈமான் கொள்வதாம்.

இந்தக் கலிமாவை நிதமுப் ஓதிவரவேண்டும்

கலிமா ஐந்தும் பொருளும் முற்றிற்று.

———

இ தா வ து.

## அறபுவாக்கியம்.

புனியல் இஸ்லாமு அலாகம்ஸின் ஷாஹதத்தி அன்லா யிலாஹ இல்லல்லாஹூ வஅன்னமுஹம் மதர்றசூ லுல்லாஹி வஇகாமிஸ் ஸலாத்தி வயீத்தாயிஸ்ஸகாத்தி வஸவ்மிறமலான வஹஜ்ஜில் பைத்திமனிஸ்தத்தா அ இலைஹி ஸபீலா

## இதின் பொருள்களும் பயான்களும்

இஸ்லா மார்க்கம் ஐந்து காரியத்தின்பேரில் எடுக்கப் பட்டதாக விருக்கும் முதலாவது (கலிமா ஷஹாதத்து) அதாவது மேற்கூறிய விபரப்படி ஈமான் கொண்டு நாவினுலும் மொழிகிறதாக விருக்கும் இரண்டாவது (தொழுகை) இது ஒருநாள் இரவு பகலைக்கு ஐந்து (வகுத்து) தொழுகையாக விருக்கும் அதில் லுகறுத் தொழுகையாகிறது பொழுது உச்சியில் நின்றும் திரும்பிய (ஸவால்) நேரந் தொடுத்து ஓர் வஸ்துவின் நிழல் அவ்வஸ்துவுக்குச் சரியாகுமட்டுமாகவிருக்கும் (அஹ்று) த்தொழுகைக்கு நாலு (றக்ஆத்து பறுலு அந்நாலு றத்ஆத்துக்கும் கூடிய (பறுலு) ஐம்பத்தைந்தாக விருக்கும் இன்னம் எந்தத் தொழுகையிலும் பறுலு பத்தொன்பது அதின் விபரம் பின்னுல் சொல்லுவோம்.

(அஸ்றுத்) தொழுகையாகிறது மேற்படி நிழல் ஒருவஸ்துவிற்கு சரியாகிவிட்டநேரம் தொடுத்து பொழுதுமறைந்து (மக்ரிபாகு மட்டுமாகவிருக்கும் அத்தொழுகைக்கு நாலு றக்ஆத்து (பறுலு அந்நாலுறக் ஆத்துக்கும் கூடிய பறுலு ஐம்பத்தைந்தாக விருக்கும்.

இன்னம் (மக்ரிபுத்) தொழுகையாகிறது பொழுது மறைந்த நேரம் தொடுத்து செம்மேக மறையுமட்டுமாக விருக்கும் அத்தொழுகைக்கு மூன்று றக்ஆத்து (பறுலு) அம்மூன்று றக்ஆத்துக்கும் கூடிய பறுலு (நாற்பத்திமூன்ருக) விருக்கும்.

(இஷாவின்) வக்த்தாகிறது செம்மேகம் மறைந்ததுதொடுத்து மெய்வெழுப்பு வெழுக்குமட்டுமாக விருக்கும் அத்தொழுகைக்கு நாலு (றக்ஆத்து பறுலு) அந்நாலு றக்ஆத்துக்கும் கூடிய (பறுலு) ஐம்பத்தைந்தாக விருக்கும்.

ஸுபுஹுத்தொழுகையின் வக்த்தாகிறது மெய்யெழுப்பு வெழுந்தது தொடுத்து பொழுது உதயமாதும் வரையிலாக விருக்கும் அத்தொழுகைக்கு இரண்டு (றக்ஆத்து) பறுலாயிருக்கும் அவ்விரண்டு றக்ஆத்துக்கும்கூடிய பறலு முப்பத்தொன்றாக விருக்கும் ஆக ஐந்து (வக்த்து) த்தொழுகைக்கும் கூடிய பறுலாகிய றக்ஆத்து பதினேழாக விருக்கு அப்பதினேழு றக்ஆத்துக்கும் கூடிய பறுலு (இருநூற்றி முப்பத்தொன்றாக விருக்கும்) அதில் (தக்பீறு) தொண்ணூற்றி நாலு அத்தக்பீறுகளில் ஐந்து தக்பீறு (வாஜிபு) மற்ற தக்பீறுகள் அடங்கலும் ஸுன்னத்தாக விருக்கும் அதின் விபரம் ஸுபுஹுக்கு பதினொன்று மக்ரிபுக்கு பதினேழு (லுஹறு) அஸறு (இஷா) ஒன்றொன்றுக்கும் இருபத்திரண்டு அத்தஹிய்யாத்து ஒன்பது அதில் ஐந்து வாஜிபு நாலு அத்தஹிய்யாத்து ஸுன்னத்தாக விருக்கும் ஸலாம்பத்தாகவிருக்கும் அதில் ஐந்து ஸலாம் வாஜிபு ஐந்து ஸலாம் ஸுன்னத்தாக விருக்கும் தஸ்பீஹு நூற்றி ஐம்பத்துமூன்று அதில் ஸுபஹுக்கு பதினெட்டு (மக்ரிபுக்கு) இருபத்தேழு லுஹறுக்கும் அஸறுக்கும் இஷாவுக்கும் ஒன்றொன்றுக்கு முப்பத்தாறு தஸ்பீஹு ஸுன்னத்தாக விருக்கும்.

## இஸ்லாமுக்கு மூன்றாவது பறுலாகிய ஸக்காத்து

ஸக்காத்துக் கொடுப்பது பொன் வெள்ளி ஆடு மாடு ஒட்டகை நெல்லு கோதுமை முதலிய தானியங்களிலும் மனிதர்கள் முளைக்கப்போட்டுப் பயிர்செய்து தங்கரீகம் செய்து ஜீவனமாக்கிப் புசிக்கப்படுகிற மேல்கூறிய வஸ்து முதலியவைகளிலும் சகாத்தெனும் குறிக்கப்பட்டவர்களுக்கு தர்மதானஞ் செய்கிறது இஸ்லாமாகிய ஆண் பெண் அடங்கல் பேரிலும் பறுலாக இருக்கும் அதற்கு சறத்து அம்முதலை ஒருவருஷத்திற்கு உடையதனம் ஆக்கினவர்களுக் கெனவாம் ஆனால் தானியங்களில் ஒரு வருஷம் ஆகவேண்டுமென்பது ஹுக்குமில்லை எப்போது தயாராயினதோ அப்போது உமியுடன் இருக்கிறதை (10) கோட்டைஉடைய தாகினால் (1) கோட்டையும் உமியில்லாமல் அரிசியைப்போலிருக்கிறதில் அஞ்சுகோட்டை தயாரானால் அரைக்கோட்டையும் பழவர்க்கங்களில் ஈச்சம்பழம் முந்திரிப்பழத்திலும் யாபாரத்துடைய சரக்குகளிலும் புதையல் எடுத்த முதல்களிலும் ஸக்காத்து விதியாகிய பத்திப்பூண்ட பறுலாகவிருக்கும் வெள்ளியுடைய துகை

(140) களஞ்சிக்கு (3) களஞ்சி கொடுக்கவும் பொன்னுடைய துகை (20) களஞ்சிக்கு அரைக்களஞ்சி கொடுக்கவும் ஹலாலான ஆபரணத்தில் ஸகாத்து விதியில்லை ஹறுமான பொன்பாத்திரம் வெள்ளிப்பாத்திரம் இவைகளில் (2) தீனாறு நிறையிருக்கின்ற வைபோலொத்த வுடைமைகளை பெண்கள் உள்பட அலைகிறதும் புழங்கிறதும் ஹறுமாயிருப்பதுடன் அதற்கு ஸக்காத்தும் விதியாகும்.

ஆட்டின் துகை (40)க்கு ஒரு வயதுடைய ஓர் ஆட்டுக்குட்டியாகவிருக்கும் (121) க்கு இரண்டு ஆடும் (201) க்கு (3) ஆடும் (400) க்கு (4) ஆடும் இதற்கப்புறம் ஒவ்வோர் நூறுக்கு ஒவ்வோர் ஆடும் கொடுக்கிறது பறுலாயிருக்கும் மாட்டின் ஸக்காத்து (30) க்கு ஒருவயது நிரம்பி இரண்டுவயதாகும் ஓர் கன்றுக்குட்டியுக் 40) க்கு இரண்டு வயது நிறம்பி மூன்று வயதில்புகுந்த ஒரு கன்றுக்குட்டியும் (60) க்கு ஒரு வயது நிறம்பி இரண்டு வயதில் புகுந்த இரண்டு கன்றுக்குட்டியும் இந்தப்படி முப்பது அடங்களிலும் ஒரு வயதுடைய கன்றும் நாற்பது அடங்கலிலும் இரண்டு வயதுடைய கன்றுமாகக் கொடுக்கவும் ஈச்சப்பழம் முந்திரிப்பழம் ஐந்துகோட்டைக்கு அரைகோட்டையாகவிருக்கும். இன்னம் வியாபாரத்துடைய சரக்குகளில் அதின் விலையில் பத்தில் ஒன்றில் நாலில் ஒன்றுகொடுக்க வாஜிபாகும் இதின் துகை வெள்ளி பொன்னின் துகைகள் போலாம் அதில் எந்த வஸ்துவின் துகை எத்தினதோ அந்த துகைக்கு கொடுக்கலாம் புதையலுடைய முதலுக்கு ஸகாத்து வெள்ளி பொன்னுக்கு சொன்ன ஹுக்கும்களாக விருக்கும்.

## இஸ்லாமுடைய நாலாவது பறுலாகிறது

நோன்பாகவிருக்கும் அந்நோன்புக்கு பறுலாகிறது இரண்டுண்டும் அதில் ஒன்றாவது (றமுலான்) மாதம் ஒவ்வொரு நாளைக்கும் ஒருதரம் கல்புகொண்டு பிசகற நிய்யத்து வைக்கிறது இரண்டாவது கிழக்கு மெய்வெழுப்பு வெழுத்த பிறகு தொடுத்த பொழுது அஸ்தமிக்கும் வரையும் நோன்பை முறிக்கும் காரியத்தை விட்டும் தன்னை தடுத்துக்கொள்வதாம் இன்னம் பறுலான நோன்பாகவிருந்தால் அதை றமலானென்றும் கலாவாக விருந்தால் கலாவென்றும் சுன்னத்தாக விருந்தால் சுன்னத்தென்றும் அதைக்குறித்து பொழுதடைந்த நேரந்தொடுத்து (பஜற்ஸா

திரு) வரையும் அந்த நிய்யத்தை எண்ணிக்கொள்வது இது இரண்டும் ஷறுத்தாக விருக்கும் நிய்யத்தை வாயினுல் மொழி கிறது முஸ்தஹப்பென்றும் வருகின்றது.

அந்த நோன்புக்கு சிறப்பமான நிய்பத்தாகிறது
இதுவாக விருக்கும்

## அறபுவாக்கியம்

நவைத்து ஸவ்மகதின் அன் அதாயிபற்ழு றமலாமனி ஹாதி ஹிஸ்ஸனத்தி லில்லாஹித்தஆலா—இந்த வருஷத்தின் றமலான் மாதத்துடைய பறுலான நோன்பை அதாவாக நாளைப்பிடிக்க நிய்யத்துச் செய்கிறேன் அல்லாவுக்காக என்று சொல்லுகிறதாம்.

## நிய்யத்து வைத்தவுடன் ஓதவேண்டும்

அல்லாஹு லாயிலாஹ இல்லாஹுவல் ஹையுல்கய்யூம் அல்காயிமு அலாக்குல்லி நபுஸின் பிமாகஸபத்து என்று ஓதுவது ஸுன்னத்தாக விருக்கும்.

## தண்ணீரில் அல்லது ஈச்சம்பழங்களினுல் நோன்பு திறந்து பின்னுல் ஓதவும் துஆ.

அல்லாஹும்ம லக்கஸும்து வஅலாரிஸ்கிக்க அப்தர்த்து தஹபல்லமாவு வப்த்தல்லத்தில் வுறுகுவதபத்தில் அஜறு இன்ஷா அல்லாஹுத்தஆலா என்று ஓதுகிறது ஸுன்னத்தாக விருக்கும்.

## இன்னம் துஆ

அல்லாஹும்ம லக்கஸும்து வலாரிஸ்கிக்க அப்தர்த்து பத்தக்கப்பல்மின்னீ யாறப்பில் ஆலமீஸ் என்றும் ஓதலாம்.

## நோன்பை முறிக்கும்வகை

நோன்பை முறிக்கும் காரியங்களைச் செய்வது ஹறுமென்றறிந்து முரண்டாகத் தனது தவாரங்களில் கண்ணுக்குத் தெரியப்படுகிற வஸ்துவைச் செலுத்தினுலும் மனமுரண்டாகச் சத்தியெடுத்தாலும் ஜெமாவுசெய்தாலும் மற்றும் வகையினுல் மனி பிறக்கினுலும் வாயில் வஜீபனமிருக்க மெய்வெழும்பு வெழுத்துப் போனபின் அதை முழுங்கினுலும் நோன்பு முறிந்துவிடும்

(கலா)ச் செய்வது (வாஜிபாக விருக்கும் ஸூறுமா இடுவதினுல் நோன்பு முறியாதிருந்தாலும் அதைவிடுவது வரிசையாக, விருக்கும்

## இன்னம் சுன்னத்தான நோன்பாகிறது

துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பதாம் அறபாநாளிலும் முஹர்ற மாதம் பத்திலும் ஒன்பதிலும் சவ்வால் மாதம் ஆறு நாளிலும் ஹஜ்ஜு மாதம் மல்லாத்தில் (13-14-15) இதுகளிலும் வியாழம் திங்கட்கிழமைகளிலும் நோன்பு பிடிக்கிறது ஸூன்னத்து (மூஅக்கதா)வாக விருக்கும். இன்னம் அறபாவுக்குமுன் எட்டு நாளிலும் (முஹர்றமாதம் பதினென்றிலும் பிறை (28-29-30) இதுகளிலும் நோன்பு வைக்கிறது (ஸூன்னத்தாக விருக்கும் ஹஜ்ஜு செய்கிறவர்கள் அறபாநோன்பைவிடுகிறது ஸூன்னத்தாக விருக்கும் [றஜபும்] ஸஃபானும் நோன்பு பிடிக்கிறது ஏற்றமென்று வந்திருக்கின்றன.

## இஸ்லாமின் ஐந்தாவது பறுலாகிறது

இஸ்லாத்தில் ஐந்தாவது [பறுலு] ஹஜ்ஜு செய்கிறதாக விருக்கும் அந்த ஹஜ்ஜிற்காகச் செல்வதற்குக்கக்க முதலும் சரீர் ஆபியத்தும் ஏறிப்போக வாகனமும் உண்டாயிருக்கிறதுடன் வழியில் பயமும் இல்லாதிருக்கில் [ஹயாத்தில்] ஒருதடவை மக்கத்திற்குப் போயி [ஹஜ்ஜுங் உம்றுவும்] செய்ய விதியாக விருக்கும.

## அந்தஹஜ்ஜின் பறுலுகளாவது ஆறுகவிருக்கும்.

(அப்பறுலில்) ஒன்றுவது ஹஜ்ஜில் புகுத்தேனென்று இஹ்றும் கட்டுகிற நிய்யத்துவைக்கிறதாக விருக்கும் இரண்டாவது துல்ஹஜ்ஜுமாதம ஒன்பதாம் பகல் (ஸவாலுக்கும்) பெருநாளிரவு பஜ்றுக்கு மிடையில் கொஞ்சநேரமாகிலும் அறபாமலேயில் தரிக்கிறது மூன்றுவது பெருநாள் பாதியிரவுக்குப்பின் (தவாபு செய்கிறது) நான்காவது (அறபாவில்) தரிக்க போகாதிருக்கும் வரையிலும் (தவாபுல் குதூமென்னும் ஸூன்னத்தானதவாப்புக்குப்பின் (ஸபாமறுவா) என்கிற இரண்டு மலேக்கிடையில் (ஸபா) கொண்டு துடங்கி (மறவா) கொண்டு முடித்து எழுத்தம் நிட்டமாகத் தொங்கோட்டம் ஓடுகிறது அறபாவில் தரித்து விட்டால்

பறுலான முன்குறித்த (தவாபுல்) இபாலாவுக்குப் பின்னாலே ஓட வேண்டும். ஐந்தாவது தலைமுடியில் மூன்று ரோமங்களுக்குக் குறையாமல் நீக்குகிறது (ஆறாவது முன்சொல்லு ஒழுங்கின்படி தர்த்தீபாகக் கொண்டு வருகிறது.

இன்னம் (உம்றாவின் பறுலாகிறது அறபாவில், தரிப்பது தவிர மற்ற ஐந்தும் பறுலாக விருக்கும்.

## ஹஜ்ஜின் சுன்னத்தின் விபரம்

ஹஜ்ஜின் சுன்னத்துகளாகிறது இஹ்றாம் கட்டுகிறதற்கும் மக்கத்திற் புகுகிறதற்கும் (அறபாமுஸ்தலிபா) வில் தரிபடுகிறதற்கும் (அய்யா முத்தஷ்ரீ) கெனும் நாள் (11) (12) (13) லும் கல்லெரிகிறதற்கும் குளிர்க்கிறதும் இஹ்றாம் கட்ட கொஞ்சமுன்பதாக மணம் பூசிக்கொள்வதும் (தல்பிய்பத்தெனும்) லப்பைக்க அல்லாஹும்ம லப்பைக்க லாஷரீக்கலக்க, லப்பைக்க இன்னல் ஹம்து ஒன்னிஃமத்லக்க வல்முல்க்க லாஷரீகலக்க வென்று சொல்லுகிறதும் அதை எந்த நேரத்திலும் மிகுதமாக்குகிறதும் (நிய்யத்தை) வாயினால் (நதைத்துல் ஹஜ்ஜா அஹறம்து பிஹீ லில்லாஹித்த ஆலா) வென்று மொழிகிறதும் ஸலவாத்தோதுகிறதும் சுவர்க்கத்தைக் கேட்பதும் நகரத்தைவிட்டும் காவல் தேடுகிறதும் இம் மூன்று தருமமும் மிகுந்த தலங்களிலெல்லாம் ஸுன்னத்தாக விருக்கும் யாவரும் (ஸம்ஸம்) தண்ணீரில் நின்றும் குடிக்கிறது. முஸ்தஹப்பாக விருக்கும் அந்த தண்ணீரைக்காண மிகவும் ஏற்றமென்று ஹதீதுகளில் வந்திருக்கின்றன. இன்னம் அந்த (ஸம்ஸம்) கிணற்றின் மேன்மையாகிய நீரைக் கொண்டுவருகிறதும் ஸுன்னத்தாக விருக்கும்.

இஸ்லாமில் ஐந்தாவது பறுலாகிய ஹஜ்ஜின் பயான்கள்

முற்றிற்று.

ஈமாவில் ஆறுகாரியம் (பறுலா) மிருக்கின்றன அதின் விபரங்களை பயன்செய்து கூறுகின்றனம்.

ஈமானுகிறது ஆறுகாரியங் கொண்டதாக விருக்கும் அதாவது

அறபுவாக்கியம்.

ஆமன்து பில்லா ஹிவமலாயிக்கத்திஹீ வகுத்துபிஹீவறுஸ்லி ஹீவல்யவ்மில் ஆகிரிவல் கதிரி கைரிஹீவஷர் ரிஹீமினல்லா ஹித்த ஆலா.

ஒன்றுவது அல்லாவுத்தஆலா ஒருவன் அவனுடைய உள்ளமையிலும் வன்னிப்பென்னும் ஸிபாத்திலும் திருநாமங்களிலும் செயல்களிலும் இணைதுணை யில்லையென்றும் இன்னம் அவனுக்கு தனிபாடான ஸிபாத்துகள் இருபது அதில் முதலாவது (உஜூது) வெனும் உள்ளமை (கிதம்) என்னும் பூர்வீகம் (பகா) வென்னும் தரிபாடு (மூகாலபதுன்லில் ஹவாதிது) என்னும் புது சட்டங்களுக்கும் விதற்பமாயிருக்கிறது (கியாமுஹூபினப்ஸிஹீ) என்னும் அவன் தன்னைக்கொண்டு தானிலைபாடாகவிருக்கிறது (வஹ்தானியத்து) என்னும் அவன் ஒருவனென்கிறது (ஹயாத்து) என்னும் ஜீவன் (இல்மு) என்னும் அறிவு (இருதத்து) வென்னும் நாட்டம் (குதறத்து) வென்னும் தத்துவம் (ஸவ்வு) வென்னும் கேள்வி (பஸறு) வென்னும்பார்வை (கலாம்) என்னும் பேச்சு (ஹய்யுன்) என்னும் உடலன்றியே ஜீவனுடையான் (ஆலிமுன) கல்பன்றியே அறிவுடையான் (முரீதுன்) நபுஸன்றியே நாட்ட முடையான் (காதிறுன்) ஆதாரமறியே தத்துவமுடையான் (ஸமீவுன்) காதன்றியே கேள்வியுடையான் (பஸீறுன்) கண்ணன்றியே பார்வையுடையான் (மூத்தக்கல்லிமுன்) நாவன்றியே பேச்சுடையான் இந்த இருபது (ஸிபாத்தும் அவனுக்குடையதுவாம் இதன் கீழ் எழுதும் இருபது (ஸிபத்துகளும் அவனுக்கு அறவே இல்லாத முஸ்த்தஹீலத்தான) ஸிபத்துகளாம். அதாவது இல்லாமை, புதிது, அழிவு, ஒப்பு பிறாளவில் தேள்வை, இணை, சாவு, மடமை நாடாதிருக்குதல், ஏலாமை, செவிடு, குருடு, ஊமை, இறந்தவன், மடையன், நாடாதவன், ஏலாமையானவன், செவிடன், குருடன், ஊமையன், ஆக இந்த இருபது எழுதப்பட்டதில் ஒன்றேயாவது அவனுக்கு

உண்டென்று சொன்னால் உடனே காபிராவர்ன் நவூதுபில்லாஹி மின்ஹா.

இன்னம் அல்லாஹுத்த ஆலாவுக்கு உண்டாயிருக்குதலும் இல்லாதிருக்குதலும் ஸமமாயிருக்கும் ஜாயிஸானஸி பாத்துக ளாவது முன்சொன்ன இருவகை ஸிபாத்துகளையும் தவிர உள்ள ஸிபாத்துகளாக விருக்கும் அதாவது படைக்கிறது அழிக்கிறது இரணம் கொடுக்கிறது நேர்வழி காட்டுகிறது நேர்வழி காட்டா திருக்கிறது, பிரயோசனம் செய்கிறது தங்கடம் செய்கிறது கொ டுக்கிறது விலக்கிறது படைக்கிறவன் அழிக்கிறவன் இரணம் கொ டுக்கிறவன் நேர்வழிகாட்டுகிறவன் நேர்வழி காட்டாதிருக்கிறவன் பிரயோஜனம் செய்கிறவன தங்கடம் செய்கிறவன் கொடுக்கிற வன் விலக்கிறவன் இவைபோலொத்த ஸிபாதுகளாகவிருக்கும் இன்னம் மாதா பிதா மனைவி மக்கள் இல்லையென்றும் ஊன் குடிப்பு உறக்கம் மறதி அழுகை சிரிப்பு நசல்ஸுவாத்தியம் பல நிறம் பலகுணம் நீளம் அகலம் கட்டை நெட்டை ஆண் பெண் இதுபோலுள்ள மட்டு திட்டங்கள் அடங்கலை விட்டும் தூய்தான வனென்றும் அறிந்து ஈமான் கொள்கிறதாம்.

## இரண்டாவது அவன் மலக்குகளைக் கொண்டு ஈமான் கொள்வதாயிருக்கும

அதாவது இந்த மலக்குகள் அல்லாஹுத்த ஆலாவின் படைப்பெண்ணும் ஆணுமில்லை பெண்ணுமில்லையென்றும் அவன் ஏவலுக்கு மாறு செயயாமல் ஏவினபடியே நடப்பார்களென்றும் அவர்களுக்கு ஊணும் குடிப்புமாகிறது (தஸ்பீஹும் தஹ்மீதும் தக்பீறும் தஹ்லீலும் மூமினான பேர்களுக்காக அல்லாஹுத்த ஆலா இடம் துஆகேட்கிறதும் பிழைபொறுக்கத் தேடுகிறதுமாக விருக்கும். இன்னம் அவர்களுடைய எண்ணிக்கையும் வலுப்பங் களையும் அல்லாஹுத்த ஆலாவே யல்லாது யாரும் அறியார்கள் அவர்களடங்களிலும் ஏற்றமானவர்கள் நபிமார்கள் ஸமூகம் வஹி அறிவிக்கிறது கொண்டு சாட்டப்பட்ட (ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் பின்பு (றூஹு) வாங்குதல் கொண்டு சாட்டப்பட்ட (இஸ்றுயீல் அலை ஹிஸ்ஸலாம்) பின்பு காற்றை கொண்டு சாட்டப்பட்ட (இஸ்றுபீல் அலைஹிஸ்ஸலாம்) என்றும் அறிந்து ஈமான் கொள்வ

## மூன்றாவது அவனுடைய வேதங்களைக்கொண்டு ஈமான் கொள்வது.

அதாவது அவனுடைய வேதங்கள் (ஸுஹ்பி)கள் அடங்கலும் உண்மையானதென்றும் இன்னம் வேதமாகிறது நாலென்றும் அதில் முந்தினது (தவ்றாத்து) அதாவது (அபுறானியாப் பாஷையில) நபி மூசா அலைஹிஸ்ஸலா முக்கென்றும் (ஸபூறா) வேதம் யூனானியாப் பாஷையில் நபிதாவூது அலைஹிஸ்ஸலா முக்கென்றும் (இன்ஜீல்) வேதம் (ஸுரியானியாப் பாஷையில் (நபி ஈசா (அலைஹிஸ்ஸலாத்துக்கென்றும்) புறுகான் வேதம் அலபிய்யாப் பாஷையில் நம்முடைய நபினார் நாயகம் முகம்மது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுக்கு இறக்கிவைக்கப்பட்டதென்றும் இன்னம் நூறு (ஸுஹ்பு) உள்ளத்தில் ஆதம் நபி அலைஹிஸ்ஸலாமுக்கு பத்தும் (சீதுநபி அலைஹிஸ்ஸலாமுக்கு அன்பதும் (இதுரீஸ்) நபி அலைஹிஸ்ஸலாமுக்கு முப்பதும் (இப்றாஹீம்நபி அலைஹிஸ்ஸலாமுக்கு பத்தும் இறக்கிவைக்கப்பட்டதென்றும் இது களடங்கலும் அல்லாஹுத்த ஆலாவின் திருவசனமென்றும் படையுண்ணப்பட்ட தல்லவென்றும் ஸத்தமும ஓசையுமில்லாத தென்றும் உண்மையான தென்றும் நமது புறுகான் வேதத்துக்கு பின்னால் மற்றுண்டாவாகிய வேதங்களும் ஸுஹ்புகளும் அதிலுண்டாவாகிய கட்டளைகளடங்கலும் மாற்றம்பட்டுப் போச்சுதென்றும் புறுகானுடைய கட்டளைகள் கியாமமெனும் முடிவு பரியந்தம் வரை மாற்றப்படாமல் தரிபாடாய் நடக்குமென்றும் ஈமான் கொள்வதாம். ஆனால் ஒரு சூறத்தையாகிலும் ஒரு ஆயத்தையாகிலும் காரிகன் ஒற்றுமையாகிய ஒரு கலமையாவது ஒரு ஹறுமையாவது அல்லத்தட்டினாலும் கூட்டினாலும் உடனே முறத்தத்தாவான். என்றறி நஊதுபில்லாஹிமின் ஹா.

## நாலாவது றசூல்மார்களைக்கொண்டு ஈமான் கொள்வது.

அதாவது அவனுடைய தூதர்களான றசூல்மார்க ளடங்கலும் நபிப்பட்டத்திற்கு முன்னும் அதற்கு பின்னும் பெரும்பாவம் சிறுபாவம் அடங்கலைவிட்டும் காக்கப்பட்டவர்களாய் ஆண்பிள்ளைகளாய் நாட்டாமக்களாய் மேனிகளில் ஏதும் குறைவில்லா

தவர்களா யிருக்கிறார்கள். ஒரு ஹதீதின்படி ஒரு லக்ஷத்தி இரு பத்திநாலாயிரம் நபிமார்கள் அதில் முந்நூற்றி பதிமூன்று முற சல்கள் அவர்களில் ஊலுல் அஸ்மி ஆதம் நூஹு இப்ருஹீம் மூஸா ஈஸா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் (அஜ் மயீன்) இவர்களாயிருக்குமென்றறிந்து ஈமான் கொள்வதாம்.

## ஐந்தாவது ஒடுக்கத்து நாளைக்கொண்டு ஈமான் கொள்வது

அதின் பிரிவாவது மௌத்தாகி கப்றில் அல்லது எந்தவிதங் கொண்டுள்ள தலத்திலாவது ஆனவுடன் முன்கர் நக்கீறு இரண்டு மலக்குகள் வந்து அவர்களையும் எழுப்பி கேள்வியுங் கேட்டு இவன் (ஸாலிஹாக விருந்தால்) கபுறுக்குள்ளாக சுவர்க்க வாசலைத்திறந்து இன்பத்தை அனுபவிக்கவும் (பாவியாயிருந் தால்) நகரவாசலைத்திறந்து துன்பத்தை அனுபவிக்கவும் செய்து போனதின் பிறகு பின்னால் (சூறாதி சகல கல்குக்களும் அழிந்து மலைகளெல்லாம் தவிடுபொடியாகி பூமியும் செம்புத் தரையாகிச் சிலகாலத்தின் பிறகு அல்லாஹுத்த ஆலா நாடியபடி இரண்டாம் (சூறாதி) கல்க்குகளடங்கலையும்) எழுப்பி மஹ்ஷரென்னும் வெளி யில் நிறுத்தி முவுமினனவாகளுக்கு வலதுகையில் நன்மைப் பட் டோலையும் காபிறகளுக்கு இடது கையில் தின்மைப் பட்டோலை யும் கொடுத்து தடங்களுடைய அமலும் (மீஸானில்) நிறுத்துக் கேள்வி கணக்குக்கேட்க நாடிய சகலரையும் மேட்டு நன்ஸம மூர்க்கமானவர்களை விருத்தல் முஸ்தகிம்) என்கிற பாலத்தில் மின்வெட்டி மறைந்ததுபோல் கடத்தி ஹவ்லுல்கவ்தற் என்கிற ஆற்றின் தண்ணீரிலும் குடிப்பாட்டிலிவாவுல் ஹமதுவென்கிற கொடி நிழலும் அறுஷின் நிழலும் பெற்று சுவர்க்கம் புகுதுவார் கள் பாவிகளில் மிகுதிபேருக் : நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் 2 தலத்தில் நின்று மண்டாடும் ஷபா அத்து கருறுவில் சிலரெல்லாம் கலாஸு பெறுவார்கள், தின்மை மூர்க்கமானவர் கள் அப்பாலம் தாண்டமுடியாமல் நரகமடைவார்கள் கடைசி யில் ஷபா அத்துக்கு புருவில் ஷபா அத்துக்கு அவசியமான மிகுதிபேர்களெல்லாம் கலாஸு பெறுவார்கள் அதாவது கல்பில் ஆர்ப்புமட்டும் ஈமானுள்ளவர்கள் காலாகாலம் அந்நகரத்தில் தரி படுகிறதுமில்லை காபிர்கள் ஒருக்காலும் நரகம்விட்டு நிவாரண மாகிறதுமில்லை. நபிமார்களுக்கும், உலமாக்களுக்கும் ஷுஹ

தாக்களுக்கும் ஷபா அத்து கொடுக்கப்பட்டு அவர்களும் அவர்கள் நாடின சிலபேர்களுக்கு ஷபா அத்துச் செய்வார்கள் என்றும் அறிந்து ஈமன் கொள்வதாம்.

## ஈமானிலுள்ள ஆறுவது பறுலாகிறது.

நன்மை தின்மை நயம் நஷ்டம் இன்பம், துன்பம், ஈமான் பிருர். இதுவெல்லாம் அல்லாஹுத்தஆலா இடத்தில் நின்றும் உள்ளதென்றும் அவன் கட்டளைப்படி நடக்குமென்றும் ஈமான் கொள்வது நன்மையைப் பொருந்தவானே யல்லாது தின்மையைப் பொருந்தமாட்டா னென்றதில் அவன் நாட்டமன்றியே, தின்மை செய்யவும்; நன்மை செய்யவும், ஏலுவா என்று கேட்பது மெய்தான், பின்னடக்கிற காரியம் இன்னதென்று அவன் நமக்கு அறிவித்து தரவில்லை அவன் நமக்கு அறிவித்து தந்ததெல்லாம் ஏவலும், விலகலுந்தான ஆனதால் அறிந்ததை யெடுத்துத் தொண்டு அறியாததில் யோசனைசெய்ய வேண்டியதில்லை நாயன் ஏவல்விலகலை நமக்கு அறிவித்துத் தந்திருப்பதால் அதைபிடித்து நடப்பதுவே கடமையல்லாது வேறில்லை அவன் நாட்டத்தையே பிடித்து பேசி இபுலீஸைப்போல் வழிகெட்டு போறது சரியில்லை

ஈமானில் ஆறு முற்றிற்று.

—.

## (பஸில்) தொழுகைகளின் சறுத்துகளை பயான் செய்யுதல்

தொழுகை தொடக்குமுன் வேண்டுமான ஷுறுத்துகள் பத்தாகவிருக்கும் அந்த பத்துஷுறுத்தும் தொழுதுமுடியுமளவும் உண்டாகியே யிருக்கவேண்டும் ஒன்றாவது இஸ்லாமாக விருக்குதல் இரண்டாவது தம்மீனென்னும் வகை விபரம் எத்துதல் மூன்றாவது பெருந்துடக்கென்ற ஜனாபத்துஹைலு நிபாஸைவிட்டும் சிறு துடக்கமென்ற ஒலூவு முறித்தலைவிட்டும் தூய்தாக விருக்கிறது. நாலாவது உடுபுடவையும் தொழுந்தானமும் பொறுக்கப்படாத நஜீஸை விட்டும் துப்புரவாகவிருப்பது. ஐந்தாவது ஔமான காட்டாமகளுப் பயலும் வெள்ளாட்டியும் தொப்புழ்தொடுத்து முழந்தாள்வரையும் காட்டாமகள் முகமும்மணிக்கட்டு வரையில் இருமுன்கையும் தவிர மற்றச் சரீரமெனும் மேனியடங்கலும் ரோமக்கால் நகம் உள்ளங்காலுள்பட மறைத்துக்கொள்வது ஆறாவது பயங்கரம் கடிசானநேரத்தில் ஸகலதொழுகையும் ஆமானஸபரில் ஸுன்னத்துத் தொழுகையும் தவிர மற்றும் தொழுகைகளில் கிபுலாவை முன்னோக்கிறது ஏழாவது தன்பேரில் தொழுகை பறுலென் றறிகிறது. எட்டாவது ஹாஸிறத்தான தொழுகையின் வக்தை அறிகிறது. ஒன்பதாவது தொழுகையின் பங்குபரிசை யறிகிறது. பத்தாவது பறுலை ஸுன்னத்தைவிட்டும் பிரித்தறிகிறது இந்தபத்து ஷுறுத்தில் ஒன்றாவது தப்பினால் தொழுகை கூடாது அதெவ்விதமெனில் தொழும்போது முறுத்தத்தாகிற நினைவை வருத்தினாலும் நினைவு மாறினாலும் ஹைலு கண்டாலும் நஜீஸானது உடலில் உடையில் தலத்தில் விழுந்து உடனே நீங்காவிட்டாலும் உடுமானம் அவற்றை விட்டு நீங்கி உடனே மறைக்காவிட்டாலும் வக்கத்துக் முந்தி தொழுதுவிட்டாலும் கிபுலாவைவிட்டு நெஞ்சுகொண்டு சறுகினாலும் தொழுகை கூடாது அறிவில்லாத ஆமிரானவன் பறுலை ஸுன்னத்தென்றும் அல்லது அடங்கலும் ஸுன்னத்தென்றும் எண்ணினால் அப்படி தொழுத தொழுகையும் கூடமாட்டாது.

## (பாபுல் உலூ) உலூவைப் பேசுகிற பாடம்

உலூவின் பறுலு ஆறாகவிருக்கும் ஒன்றாவது நிய்யத்து அதாவது "உலூவின் பறுலை இறக்குகிறேன்." என்று நிம்மத்துச் செய்

யுதலெனும் எண்ணங்கொள்கிறது. இரண்டாவது அந்த நிய்யத்துடன் முகம் கழுவுகிறது முகமாகிறது நீளத்தால் தலையில் முடி முளைக்கும் தலத்துக்கும் தாடிக்குழிக்கும் அகலத்தால் இரண்டு காதுக்கு மிடையிலுள்ள ரோமம் மேனி அடங்கலையும் கழுவுகிறது. மூன்றாவது இருகையும் முழங்கையுள்படக் கழுவுகிறது. நாலாவது தலையில் சிலதை மஸ்ஹு செய்கிறது. ஐந்தாவது இரண்டு காலையும் பரண்டை யுள்படக் கழுவுகிறது. ஆறாவது முன்சொன்ன ஒழுங்கின்படி முன்பின் வராமல் தொண்டுவருகிறது. ஆக இந்த ஆறும் பறுலாக விருக்கும்.

## இன்னம் உலுவின்ஸுன்னத்துபத்தாக விருக்கும்

ஒன்றாவது பிஸ்மில் சொல்வது இரண்டாவது முன் கைகழுவுதல் மூன்றாவது வாய்க்குத் தண்ணீர் செலுத்தல் நாலாவது நாசிக்கு வாயுடன் தண்ணீர் செலுத்தல் ஐந்தாவது தலையில் காலிலொருபங்கு மஸ்ஹு செய்தல் ஆறாவது இருகாதும் மஸ்ஹு செய்தல் ஏழாவது தாடி கால்விரல் இதுகளை குடைந்து கழுவுதல் எட்டாவது வலதுபாகம் முந்திகழுவல் ஒன்பதாவது கிபுலாவை முன்னோக்கிக்கொள்வது பத்தாவது உறுப்புக்களை மூன்றுவிடுத்தம் கழுவுகிறது இந்தப் பத்தும் ஸுன்னத்தாக விருக்கும்.

## உலுவை முறிக்கும் வகைகள்

உலுவை முறிக்கும் கருமம் ஐந்தாக விருக்கும், ஒன்றுவது முன்பின் துவாரத்தினால் மனியைத்தவிர யாதொன்று புறப்படுகிறது. இரண்டாவது சமைந்த இருப்பன்றி உறங்குவது, மூன்றுவது அபத்தில் அகங்கைப்படுதல், நான்காவது தன்னை மறந்து போதக் கேடாகுதல் ஐந்தாவது தனக்குக் கொள்ளத்தக்கதான மாதரைத் தொடுகிறது இந்த ஐந்துமாக விருக்கும்.

## முழுக்கை வாஜிபாக்கிவைக்கும் கருமங்கள்

முழுக்கு விதியாகும் வகைகள் ஆறாகவிருக்கும் ஒன்றுவது கத்ந வரைமட்டில் அபத்துக்குள் மறைகிறது அதுபின் துவாரமாயிருக்கிலும் சரிதான் இரண்டாவது மனி வெளியிடுகிறது, மூன்றுவது மவுத்து நிட்டமாகிறது பிஸபீல் மௌத்தைத்தவிர நான்காவது ஹைலுபைத் தருகின்றது ஐந்தாவது பிள்ளை பூபேரின் துடக்கெனும் நிபாஸு பத்தறுகிறது, ஆறுவது பிள்ளை பெறுகிறது ஈரமில்லாதிருக்கிலும் சரியே.

## முழுக்கின் பறுலு இரண்டாக விருக்கும்

அப்பறுலில் ஒன்றுவது பெருந்துடக்கையான் நீங்குகிறேனென்று நிய்யத்து வைத்தல். 2-வது அந்த நிய்யத்துடனே சரீரமடங்கலையும் துப்புறவாக்குகிற தண்ணீரால் நனைப்பதுவுமாயிருக்கும்.

## முழுக்கின் ஸுன்னத்து ஆறுகவிருக்கும்

அந்த ஸுன்னத்தில் ஒன்றுவது பிஸ்மில் சொல்லுகிறது, 2-வது முன்கை கழுவல், 3-வது உலுச்செய்தல், 4-வது துடர்க்கையாகக் குழித்தல், 5-வது சரீரம்தேய்த்தல், 6-வது வலது பாகம் முந்திக்கொள்ளுதல் இந்த ஆறும் ஸுன்னத்தாக விருக்கும்.

## ஜுனுபாளிக்கு ஹறும் ஐந்து

முழுக்கு விபாதியாகிய ஜுனுபானவர்களுக்கு ஐந்து காரியம் ஹறுமாயிருக்கும் தொழுகிறது குறுஆன் ஓதுகிறது அதைத் தொடுகிறது பள்ளியில் தரிக்கிறது மக்கம் கவுபாவைத் தவாபு செய்கிறது இந்த ஐந்துமாக விருக்கும்.

## மாதர்கள் ஹய்லானல் (8) காரியம் ஹறும்

மேற்கூறும் ஐந்து காரியமும் இன்னும் முழந்தாள் தொப்புளுக்கு மிடையில் கையிணக்கமும் சேர்க்கையும் நோன்பு பிடிக்கிறதும் இந்த மூன்று கருமமுமாக விருக்கும்.

## உலுவில்லாதவர்களுக்கு மூன்றுகாரியம் ஹறும்

ஒன்றுவது குறு ஆனைத் தொடுகிறது, 2-வது தொழுகிறது மூன்றுவது தவாபு செய்கிறது, இந்த மூன்றுமாக விருக்கும்.

## தொழுகைக்கு பறுலு பத்தொன்பதுவா யிருக்கும்

1-வது நிய்யத்து அதாவது அவ்வல் தக்பிறுடன் சேர்த்து நிய்யத்து வைக்கிறது. 2-வது அவ்வல் தக்பீற் 3-வது நிலையில் நிற்கிறது 4-வது பாத்திஹா ஓதுகிறது 5-வது றுகூவு செய்கிறது 6-வது அதில் தரிக்குதல் 7-வது இஸ்த்திதால் என்னும் நிமிர்ந்து நிற்கிறது 8-வது அதில் தரிக்குதல் 9-வது முந்தின ஸுஜூது செய்கிறது 10-வது அதில் தரிக்கிறது 11-வதுஇரண்டு ஸுஜூதுக்கிடையி லிருக்கிறது. 12-வது அதில் தரிக்குதல் 13-வது இரண்டாம் ஸுஜூது செய்கிறது. 14-வது அதில் தரிக்கிறது 15-வது பிந்தின அத்தகிய்யாத் திருப்பு 16-வது அத்தஹிய்யாத் தோதுகிறது 17-வது ஸலவாத் தோதுகிறது 18-வது ஸலாம் சொல்லுகிறது 19-வது இந்த ஒழுங்கின்படி தற்த்தீபாகக் கொண்டு வருகிறது ஆகக்கூடிய பறுலுகள் சுருக்கத்தில் 19-ஆக விருக்கும்.

## தொழுகையை முறிக்கும் கருமங்கள்

தொழுகையை முறிக்கும் கருமங்கள் பத்தாகவிருக்கும் ஒன்றுவது கலாம் தொழுகையில் பொருள் விளங்கும்படிக்குள்ள ஒரு ஹறுபு அல்லது தொடர்பிடியாய் இரண்டு ஹறுபு கொண்டாவது மொழிந்தாலும் முறியும். இன்னம் தொழுகையில் மறந்து பேசினலுந் தொழுகையில் பேசினல் முடியுமென்றறியாமல் பேசினலும் இதுவெல்லாம் அறியாவிதத்தில் கொஞ்சமாக நாவினல் முந்தி விட்டதென்ருல் முறியமாட்டாது. 2-வது மூன்று செயல் தொடராகச் செய்கிறது அதாவது மூன்று எட்டு வைக்கிறது மூன்று அடி அடிக்கிறது கையை மூன்று விடுத்தம் உசுப்புகிறது மூன்று விடுத்தம் சொறிகிறது. இனி பொறுக்க முடியாத சொறிச்சலில் கையை மிருதமாய் உசுப்பிகிறது கொண்டு

தொழுகை முறியாது 3-வது நோன்பை முறிக்கும் வஸ்துவைப் பரிமாறுகிறது. அதாவது தீன்குடிப்பைப்போல் ஒருவனுடைய வாயில் எள்ளுப்போல வொத்தது உண்டாயிருந்து அதை முழுங்கினாலும் அல்லது காறலை முழுங்கினாலும் அல்லது பேதகமான உமிநீரை முழுங்கினாலும் தொழுகை முறியும் பேதகமில்லாத கலப்பற்ற உமிநீரை முழுங்கினால் தொழுகை முறியமாட்டாது 4-வது சிறுதுடக்கு பெருந்துடக்கு உண்டாய் விடுகிறது, ஐந்தாவது தொழுகையில் நஜீஸ்வுண்டாகிறது, கையைக்கொண்டு நஜிஸை உதறினால் தொழுகை முறியும் இன்னம் உலர்ந்த நஜீஸும் விசயமாகி தன்னாலே விழுந்திட்டாலும் மூட்டைபோலொத்ததை நசித்திட்டாலும் தொழுகை முறியாது ஆருவது கெஞ்சை கிபுலாவை விட்டும் திரும்புகின்றன. ஏழாவது அவ்ரத்தை நீக்குகிறது இனி பிடவையை காத்து நீக்கி உடனே மறைத்துக்கொண்டாலும் பிடவை அவிழ்த்து உடனே அதை மீளவைத்துக் கொண்டாலும் தொழுகை முறியாது. எட்டாவது நிய்யத்தை பிசகுப்படுத்துகிறது தொழுகையைவிட்டு புறப்பட்டேன் என்று நிய்யத்து வைத்தாலும் அல்லது தொழுகையை முறிக்கிறதை நாடினாலும் அலலது தொழுகையை விட்டுப் புறப்படலாமோ தொழலாமோவென்று இருமனது கொண்டாலும் தொழுகை பத்திலாய், ஒன்பதாவது நித்தத்தெனும் குமிரை உருத்தும் கருமம் உண்டாக்கினாலும் அ ஆதனல்லாகு மின்ஹா பத்தாவது செயலளவில் சேர்ந்த பறுலை அதிகப்படுத்துகிறதும் இஃதிதாலில அலலது இரண்டு ஸுஜூதுக் கிடையிலிருக்கிற இருப்பில் தரிபடுகிறது போலொத்த பறுலை விடுகிறதும் தொழுகையை முறிக்குமெனபதாம்.

## தொழுகையின் சுன்னத்துகளை விரிவாக விவரமாய்க் கூறுகின்றனம்

தொழுகையின் சுன்னத்துகளாகிறது இரண்டு வகையாகவிருக்கும் அதில் ஒருவகை ஹைஹாத்து சுன்னத்தென்றும் ஒருவகை அப்ஆலு சுன்னத் தென்றுமாக் விருக்கும். அந்த ஹைஹாத்து சுன்னததுகளின் விவரமாவது தொழுகையைத் துவற்சம் செய்யும்போது இஃறாமுடைய தக்பீறு கட்டுதலில் பில்லாஹித்தஆலாவெனும் அதின்பொருள் அல்லாவுக்காக வேண்டும் என்று அல்லாகுத்தஆலா அளவில் அந்த நிய்யத்தைச் சேர்த்துக்

கொள்கிறதும், இபுலாவை முன்னேக்கினவனாகத் தொழுகிறேன் யென்று எடுத்துக் காட்டும் சொல்லைக் கொண்டு வருதலும் இத் தனை றக்அத்துவென்று யெடுத்துச் சொல்வதும் அதாவாக யிருந்தால் அதாவென்றும் கலாவாகவிருந்தால் கலா வென்று சொல்லிக்கொள்கிறதும் அதாகிறது முன் அதாவுக்கு ஒப்பாகிய தொழுகை கலாவில்லையானாலும் சரி, நிய்யத்துச் செய்ததுபோல் வாயினால் மொழிந்து கொள்வதும் இன்னம் நிலையில் நிற்கும் போது கொஞ்சம் தலையை முன்பக்கத்தில் சாய்த்தவனாக அவன சுஜூது செய்யும் தானத்தை நோட்டமிடுவதும் இஹ்றாமுடைய முதல் தக்பீறு கட்டு மப்போது இவன் இரண்டு கைகளையும் தோள்புயத்துக்கு நேராலே பிடவையோ அல்லது மற்றதோ கொண்டு மறைந்திராமல் மவளியாக்கினவனாக அதை உயர்த்து கிறதும் றுக்கூவில் நின்றும் கிளம்பும்போதிலும் அப்படியே இர ண்டு கையையும் உயர்த்திக்கொள்கிறதும் இன்னம் முந்தின அத் தகிய்யாத்தில் நின்றும் எழும்பும்போது அப்படி உயர்த்திக்கொள் கிறதும் அவன் நெஞ்சுக்கு கீழாலே இடது கையை வைத்து அதின்மேல் வலது கையை வைத்து மணிக்கட்டு உள்பட பிடித் துக் கொள்கிறதும் அவன்கால் இரண்டையும் ஒட்டைச்சாண் அகலம் இடையிருப்பதாக நிலையிலே பிரித்து வைத்துக்கொள்கிற தும் அவூது ஒத முன்னாலே இடம்பாடாக விருக்குமானால் இர கசியமாக வஜ்வஹ்த்து வென்றதை ஒதிக்கொள்கிறதும் இடம் பாடென்றது என்னவென்றால் தொழுகை கலாவாக போகுது அல்லது இமாம் றுகூவுக்கு குனிந்திட்டார் இப்படிப்பட்ட கரு மங்கள் இல்லாதிருக்கில் தான் அதை ஓதுகிறது அல்லது இமாம் அத்தகிய்யாத்திற்கு இருக்கிறார்கள் இவனும் அவருடன் போயி ருந்திட்டானே யானாலும் அந்த இபுத்தித் தாஹெனும் வஜ்ஜஹ் த்து விழுந்துவிடும் ஓத வேண்டியதில்லை அந்த வஜ்ஜஹ்த்து வாகிறது.

## அறபுவாக்கியம்

வஜ்ஜஹத்து தஜஹியலில்லதீ பதறஸ்ஸமாவாத்தி ஒல் அறல ஹனீபன் முஸ்லிபன்வமா அனமினல் முஷ்ரிக்கீன் இன்னஸ் ஸலாததிவனுஸ் கீவமஹ்யாயம் மாத்தீலில்றாஹிறப்பில் ஆலமீன் லாஷரீக்கலஹு வபிதாலிக்க உம்ரித்துவமா அனமினல் முஸ்லி மீன்) பின்பு அவூது ஓதுவான் அந்த அவூதாகிறது எல்லாறக்

அத்திலும் இரகசியமாக ஓதுகிறதும் இன்னும் பிஸ்மில்லா (அல் ஹம்து) இதுகள் ஓதுகிறதாக விருந்தால் அது அதுகளுக்கு வக்புச்செய்து நிற்பாட்டியிருக்கும் ஆயத்துகளிலெல்லாம் நிற்பாட்டலெனும் வக்புச் செய்து கொள்ளுகிறதும் (இன்னம்) அன் அம்த அலைஹிம்) என்ற விடத்தில் வக்புச்செய்கிறதை மக்றூஹாக்கப்படும் பாத்திஹா முடிந்த பின்பு லேசானசத்தாக ஆமீன் கூறுவது இமாமுடைய ஓதல்களைக் கேட்பார்களேயானால் அந்த (மவுமூ) மென்னும் அவரைத துடரப்பட்டவர்கள் அடங்கலும் இமாம் ஆமீன் சொல்லாமல் விட்டுவிட்டாலும் இவர்கள் சொல்லிக்கொள்வதும் சுன்னத்தாக விருக்கும்.

நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள் இமாமானவர் ஆமீன் சொல்வாரேயானால் அவருடனே, மவுமூங்களும் ஆமீன் சொல்லிக்கொள்ளுங்கள் என்றூர்கள். இன்னம் அந்த இமாமுடைய ஆமீனும் மவுமூமுடைய ஆமீனும் ஒத்துமையாக சப்திக்கப்பட்டுதானல் மலாயிக்கத்துமார்களும் அதுடன் ஆமீன் கூறுவார்கள். அப்படிக் கூறப்பட்டால் உடனே அவர்கள் அடங்களுடைய முன்செய்த பாவமும் பின்செய்யும் பாவமும் பொறுக்கப்படு மென்று நாயகம் நபிமுகம்மது முஸ்தபா றசூலுல்லாகிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளினூர்கள்.

## புகாரியயிறலியல்லாஹு அன்ஹூவும் இன்னம் முஸ்லிம் றலியல்லாஹு அன்ஹூவும் ரிவாயத்துச் செய்திருக்கிறூர்கள்.

பின்பு குறுஆனில் நின்றும் கொஞ்சத்தை ஓதுகிறதும் அதாவது சூறத்தாயிருக்கினும் அல்லது ஆயத்தாயிருக்கிலும் போதுமையாகும் ஆயத்து ஓதுகிறதாக விருநதால் பாத்திஹா ஓதின பின் மூன்று ஆயத்தாகச் சேர்த்து ஓதலைக்கேட்ட மவுமூமல்லாதவன் பாத்திஹாவுக்கு பின்னலே முந்தின இரண்டுறக் அத்திலும் சூறத்துகளோ ஆயத்துகளோ ஓதிக்கொள்வதும் அந்த ஓதல்களிலோ அல்லது இமாமுடைய ஓதல்களிலோ (மஃனவென்னும்) பொருள்களையும் அது தெரியாவிடில் அதின் கருத்துகளையும் நன்றாய் விளங்கிக்கொள்வதும் இன்னும் அந்த ஓதல்களை இமாமுடன் நடர்ந்தவனுக யிருக்கும்போதில் இரைந்தவனுக சததத்துடன் ஓதுவது 'மக்றூஹாகவிருக்கும் சிலர்களுக்கு சூறத்துகள்

அல்லது ஆயத்துகள்பாடமில்லாதிருந்தால் பாத்திஹாவைத்தான் மீளவும் இரண்டு தரமாய் மடக்கி ஒதிக்கொண்டாலும் சுன்னத் தண்டாகும் குறுஆனில் சில ஆயத்துகளை ஒதுகிறதைக்காணவும் ஒரு கிரப்பமாகிய சூறத்தை ஒதுகிறது வரிசையானதாக விருக் கும் (தறுவீஹாத்) தொழுகையில் அப்படிக்கல்லி இன்னம் இரண்டு சூறத்துகளை ஒதுகிறதில் தடர்பிடியாக அடுத்ததுக் கடுத்ததாக விருக்கிறது அந்த சூறத்தில் இரண்டாம்றக் அத்தில் ஒதுமென்னத் தக்கதாகிய சூரத்து முக்கினறக்அத்தில் ஒதின சூரத்தைக் காணவும் கொஞ்சம் சிறுசாக விருக்கிறதும் இன்னம் குறுஆனி லுண்டாகிய தற்தீபுப் பிரகாரம் மூக்தினதை மூக்தியும் பிந்தினதை பிந்தியும் ஒதுகிறதும் இன்னம் வெள்ளிக்கிழமை (சுபுஹு)த்தொழுகையில் (அலிபுலாமீம்தன்கீல்) சூறத்தையும் (ஹல்அதா) சூறத்தையும் ஒதுகிறதும் இன்னம் அந்த ஜும்ஆ உடைய இரவு இஷாத்தொழுகையிலும் பகல் ஜும்ஆத் தொழு கையிலும் (யுஸப்பிஹுலில்லாஹிசூறத்தும்) (இதாஜா அக்கல்மூனு பிகூன்) சூறத்தும் அல்லது (ஸப்பிஹிஸ் மறப்பிக்கல் அஃலா சூறத்தும்) (ஹல் அத்தாக்க) சூறத்தும் ஒதுகிறதும் அந்த ஜும் ஆமகரிபுத்தொழுகையில் (குல்ஹுவல்லா) சூறத்தும் (குல்யா அய்யுகல் காபிறூன்) சூறத்தும் இன்னம் முஸாபிறென்னும் சபர் போறவர்களும் சுபுஹில் அப்படியே ஒதிக்கொள்வதும் வெள்ளிக் கிழமையைவிட்டு சனிக்கிழமை மக்ரிபில்) மூ அவ்வதத்தைதனி என்று சொல்லும் (குல அவூது பிறப்பில் பலகு) (சூறூவும்) குல் அவூதுபிறப்பின்னுஸ் சூறூவும்) ஒதிக்கொள்வதும் இன்னம் சத்த மிட்டு ஒதும் தானங்களில் சத்தமிட்டு ஒதுகிறதும் இரகசியமாக ஒதும் தானங்களில் இரகசியமாக ஒதிக்கொள்வது சுன்னத்தாக விருக்கும்.

இன்னம் குனிகிறது கிமிர்கிறது அதுகள் அல்லாததுகளடங் கலிலும் திக்றுகள் தக்பீறுகள் சொல்லுகிறதும் அந்த திக்றிலுண் டானமஃனவைம் அதின் கருத்துகளையும் ஆராய்ந்துக் கொள்கிற துடன் ஒதலிலும் (ஸுஜூது றுகூவில்)சொல்லும் தஸ்பீஹுகளி லும் சவர்சேர்பேசுகள் விட்டுபோய் விடாமல் அதுகளைச் சொல் லிக்கொள்கிறதும் அன்னம் (அல்லாஹு அக்பர்) என்று சொல் கிறதும் (சமிஅல்லாஹுலிமன் ஹமீதாவென்று சொல்கிறதும் ஒருபறுவில் நின்று திரும்பி மறுபறுவில்போயி சேர்கிறவரை நீட்

டிச் சொல்லிக்கொள்கிறதும் (ருகூவில்) அவனுடைய உள்ளங்கை
இரண்டையும் இரண்டு மூட்டிலும் வைக்கிறதும் முதுகு பிடரி
யும் சரியாக ஒன்றுக்கொன்று தாழ்த்தி உயர்த்தி இல்லாமல் நிற்
கிறதும் இன்னுமந்த (ருகூவில்) மூன்றுதடவை (ஸுபுஹானறப்
பியல் அலீம் ஒபிஹம்திஹீ) என்று சொல்கிறதும் அதில் நின்றும்
உயர்ந்து வரும்போது (சமியல்லாஹு லிமன்ஹமீதா) வென்று
சொல்கிறதும் பின்பு நிமிர்ந்து (இஹ்த்திதாலி) னிலையில் (றப்ப
னலக்கல் ஹம்துமில் அஸ்ஸமாவாத்தி ஒமில் அல்அறுலி ஒமில்
ஆம' ஷிஃத்தமின் ஷைய்யின் பஃது) வென்று சொல்கிறதும்
இன்னம் குனூத்து ஓதலில் தோள் புயத்திற்கு நேராலே அவன்
இரண்டு கையையும் உயர்த்திக் கொள்கிறதும் இமாமாகவிருந்தால்
அந்த குனூத்தில் ஓதல்களை விரைந்து ஒடுவதும் இன்னும் மவு
மூங்கள் அந்த இமாமுடைய குனூத்தைக் கேட்டார்களேயானால்
அதிலுண்டாவாகிய துஆக்களுக்காக ஆமீன் கூறுகிறதும் இன்னம்
அதில் நபிசல்லாஹு அலைஹிவசல்லமீதில் சலவாத்துச் சொல்
லுகிறதும் அந்த சலவாத்தில் அவாகளுடைய பிச்செளமாகிய
(ஆலின்) பேரில் (ஆலிஹி) என்று சொல்லிக்கொள்கிறதும் இன்
னம் இமாமானவர் குனூத்துடையது ஆமோ அத்தஹிய்யாத்தி
லுண்டாவாகிய துஆக்களோ ஓதுகிறதாக இருந்தால் (ஜெம்வு)
வென்று சொல்லும் மத்தமவுமூங்களுக்கும் சேர்த்து ஓதிக்கொள்
கிறதும் அதுவகிறது எவ்விதமானால் (அல்லாஹும்மஹ்தினா)
வென்று ஓதவேண்டும் அப்படிக்கல்லாமல் (அல்லாஹும்மஹ்தினீ)
யென்றோதினால் அதின் பொருள் நாயகனே என்னை நேர்வழி
காட்டுவென்றாகுது எங்களை என்று வரவில்லை. தன்னுடைய நபு
சுக்கு பட்டுந்தான் அந்த துஆவாகுது ஆதலால் தன்னுடைய நபு
சுக்கு மட்டும் (இமாம்) ஓதுகிறது மக்றூஹாகவிருக்கும். இன்னம்
சுஜூதிலும் அத்தஹிய்யாத்துக்கு யிருக்கிறபோதிலும் அவனு
டைய மூட்டுக் கால்களை ஒரு ஒட்டைச்சாணுடைய அளவு விரித்
ததாக வைத்துக் கொள்கிறதும் இன்னம் அவனுடைய இரண்டு
கைகளையும் சுஜூதில் பிடவையோ வல்ல மற்ற வஸ்துக்களோ
மறைக்காமலும் கைவிரல்களைப் பொத்திக்கொள்ளாமலும் அந்த
விரல்களை விரலோடு விரலாய் சேர்த்தவனாக தோள் புயத்துக்கு
நேராலே கிபுலா பாகமாகத் தரையில் வைத்துக்கொள்வதும்
பின்பு நெற்றியுடனே மூக்கையும் தரையில் வைப்பதும் அவன்
கால் இரண்டையும் அதின் விரல்கள் புறங்கால்கள் கிபுலா

பாகத்தை சேர்ிட்டதாக வைப்பதும் அதில் விரல்கள் நட்டப் பட்டதாகவும் ஒட்டைச்சாண் அகலமாக இரண்டு காலையும் விரிக் கப்பட்டதாக வைப்பதும் அந்த கால்களுக்கு முந்தாணிப் பிட வையோவல்லது மற்றவைகளோ விழுந்து மறைத்துக்கொள்ளாமல் திறக்கப்பட்டதாக விருப்பதும் இன்னும் (சஜூதிலேசு புஹான றப்பியல் அஃலாஓபிஹமதிஹி) என்று மூன்று விடுத்தம் சொல் கிறதும் அந்த சுஜூதில் ஆண்பிள்ளையாக இருந்தால் தன்னுடைய கொடுங் கைகளைத் தன் விலாப்புறத்தை விட்டும் இடை யிட்ட தாக வைத்துக்கொள்வதும் அவன் வயற்றை அந்த (சுஜூது) செய் யும் தானத்தில் வெளியிட்டதாகத் தொடைக்கு மேலில் வைத்துக் கொள்ளாமல் புறத்திப்படுத்திக் கொள்வதும்.

இன்னும் றுகூவிலும் அப்படியே வைத்துக் கொள்வதும் பெண்பிள்ளையாக யிருந்தால் மேல்சொன்னதுக்கு மாற்றமாக அவள் கொடுங்கை முதலியவைகளை அவள் விலாப்புறத்தில் தானே சேர்த்து வைத்துக்கெள்ாவதும் இன்னம் (இபுத்திருசு டைய இருப்பு இருக்கிறதும்) அதாவது இரண்டு சுஜூதுக்கிடை யில் இருக்கிற இடையிருப்பில் வலதுகாலை நாட்டி இடது காலின் பேரில் ஹனபிமதுகபுக் காரர்கள் அத்தஹிய்யாத்து முதலியவை களில் யிருக்கிறது போல் இருக்கிறதும் அந்த இடை இருப்பில் இரண்டு கைகளையும் முட்டுக்கு முடுகினதாகவும் விரல்களை பரத் தினதாகவும் தொடையின் மேல் வைப்பதும் இன்னம் (அவ்விருப் பில் றப்பிக்பர்லீ) என்ற மூன்று தரம் சொல்வதும் ஒருதரம் (வருஹம்னீ வஜ்புறனீ வற்பருனி வறுஸ்குனீ வஹதினீ வஆபினீ) என்று சொல்வதும் சுஸாஜூத்துக்குப்போய் நிமிர்ந்து நிலையில் போறபோது (இஸ்த்திருகத்து) இருப்பு இருக்கிறதும் கையை ஊன்றி சுஜூதுக்குப் போகிற போதும் அங்கிருந்து (குலூதென் னும்) இருப்புகளுக்கு வருகிறபோதும் அதில் நின்றும் எழும்பி நிலையிற் போகும்போது அவனுடைய உள்ளங்கையை பொத்திக் கொள்ளாமல் பூமியில் ஊன்றுதல் பிடித்துக் கொள்கிறதும் கடைசி அத்தஹிய் யாத்தில் (தவர்றுக்) குடைய இருப்பென்று சொல்லும் வலதுகாலை நாட்டினவனாக இடதுகாலை வலதுபாகத் தில் தெரியும்படியாக மற்ற முன்சொன்ன இருப்பைப்போல் காலின்பேரில் இராமல் பித்தட்டைத் தரையில் வைத்தவனாகத் தானே இருக்கிறதும் அதாகிறது பின்பு ஸஜதா சஹ்வுசெய்ய

வேண்டிய சங்கதிகள் இருந்தால் அப்படி யிராமல் அவன் காலின்
பேரில்தா னிருக்கவேணும்.

இன்னும் இரண்டு அத்தஹிய்யாத்திலும் அவனுடைய இட
துகையைப் பொத்தாமல் விரல்களைப் பரத்தினவனாக அவன்முட்
டுடைய அருகின்பேரில் வைக்கிறதும் இன்னும் அவனுடையது
வலதுகையின் விரல்களை அறபிகள் ஐம்பத்தி மூன்றிலக்கத்திற்கு
அடையாளமாகக் காட்டுவார்களே அதுபோல் சிறு விரல் அதற்
கடுத்த விரல் நடுவிரல் இவைகள் மூன்றையும் பொத்திக் கலிமா
விரலைமட்டும் நிமிர்த்திப் பெருவிரலைக் கலிமாவிரலின் அடிமூட்
டில் தவத்தவனாக இருக்கிறது அப்படி அத்த ஹியயாத்தி
லிருந்து ஓதும்போது (இல்லல்லா) ஹென்று வருமே அந்தத்
தானத்தில் முதல்அலிபை நாவில் உச்சரிக்கும்போது கலிமா
விரலை யுயர்த்திவைக்கிறதும் அந்த விரலானது கொஞ்சங்குனிந்த
தாக விருக்கிறதும் இன்னும் அவ்விரலை முதல் அத்த ஹிய்யாத்
தானால் நிலையளவிற் போகிறவரையிலும் அல்லது இரண்டாம்
அத்தஹிய்யாத்தானாலும் அல்லது (சுபுஹு போலொத்தநி
லுண்டான அத்தஹிய்யாத்தானாலும் சலாமூட்டுகிற வரையிலும்
அந்த விரலை அப்படியே உயர்த்தப் பட்டதாகவே வைத்துக்
கொள்வதும் இன்னும் அந்த விரலை (இல்லல்லா) ஹென்ற விடத்
தில் இஷாறுவாக வுயர்த்தப்பட்டதே இந்நேரந்தொடுத்துக்
கடைசிவரையிலும் பார்வையை அதைவிட்டுங் கடக்காமல் அதன்
பேரிலேயே நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறதும் இரண்டு அத்த
ஹிய்யாத்தை யோதுகிறதிலும் கீழ் எழுதுகிறதுபோல் நிரப்ப
மான அத்தஹிய்யாத்தாக வோதுகிறதும் அந்த அத்த ஹிய்யாத்
தாகிறது (அத்தஹிய்யாத்து அல்முபறக்காத்து அஸ்ஸலவாத்து
அத்தையி பாத்துலில்லாஹி அஸ்ஸலாமு அலைக்கஐயு ஹன்ன
பிய்யு வறஹ்மத்துல்லாஹி வபறக்காத்துஹூ அஸ்ஸலாமு அலை
னாவஅலா இபாதில்லா ஹிஸ்ஸாலிஹீன் அஷ்ஹது அன்லா
இலாஹ இல்லல்லாஹூ வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர்ற
சூலுல்லாஹி அல்லாஹூம்ம ஸல்லில் அலா முஹம்மதின்) என்றும்
பின்பு கடைசி அத்தஹிய்யாத்தில் நபிஸல்லல்லாஹூ அலைஹிவ
ஸல்லமவர்கள்மீது ஸலாவாத்துகளில் நிரப்பமான ஸலாவாத்தாக
மேலே யோதியதுடன் (வஅலா ஆலிமுஹம்மதின் கமாஸல்லைத்த
அலா இபுறாஹீம வஅலா ஆலியிபுறாஹீமவபாரிக் அலாமுஹம்ம

தின் வஅலா ஆலிமுகம்முது கமா பாறக்த்தஅலா இபுறூஹீம வஅலா ஆலி யிபுறூஹீம் இன்னக கஹமீதுன்மஜித்) என்றேதிப் பின்பு ஹதீதில் வந்திருக்கிற துஆவையும் வோதவேண்டும். அதாவது (அல்லாஹும்மக்பிற்லீ மாக்கத்தம்து வமா அக்ற்த்து வமா அஸ்றற்த்துவமா அஃலன்து வமா அஸ்றபுத்துவமா அன்த அஃலமு பிஹீமின்னீ அன்தல் முகத்திமு வஅன்தல் முஅக்கிறு லாஇலாஹஇல்லா அன்த அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மின் அதாபிலகப்ரி வமின் அதாபின்னாரி வமின் பித்னத்தில் மஹ்யா வல்மமாத்திவமின் பித்னத்தில் மஸீஹித்தஜ்ஜால் அலலாஹும்ம இன்னீல்லம்து நபுஸீ ளுல்மன் கதீறன் கபீறன் பக்பிற்லீ மக்பிறத்தன் மின் இன்திக்க இன்னக்க அன்தல் கபூறுர் றஹீம் அல்லாஹும்ம யாமுகல்லி பல் குலூபி தப்பித்குலூபனு அலாதீனிக்கவதா அத்திக்க வஈமானிக்க யாஅல்லாஹு) என்றேதி (அஸ்ஸல்லாமு அலைக்கும் வறஹமத்துல்லாஹி) என்று சொல்லி சலாம் வாங்கிறதும் இதில் இரண்டுசலாமில் முந்தின சலாமில் முகத்தை வலது பக்கத்தில் திருப்புகிறதும் இரண்டாவது சலாமில் முகத்தை யிடது பாகத்தில் திருப்புகிறது அவன் திரும்பும் அவன் சொல்லும் சலாமை மலாயிக்கத்து மார்கள்பேரிலுமாக நிய்யத்துச் செய்துகொள்வதும் இமாமானவர் சலாம் சொல்வதில் ஒரு சலாமை மேற்சொன்னது போலும் இரண்டில் ஏதாவதொரு சலாமை அவர் நிய்யத்துச் செய்து நாடுவாரேயதை மஃமூங்கள் பேரிலுமாக நிய்யத்துச் செய்து சொல்லிக் கொள்வதும் அந்த மஃமூங்களும் அவன் நாடின சலாமிலொன்றை இமாமானவர் பேரில் நிய்யத்துச் செய்து சொல்லிக் கொள்வதும் அந்த சலாமைத் தொடர்பிடியாக நீட்டுதலன்றியே அதிலுண்டான ஹறுபுகளைப் பேணினவனுகத் திருத்தமாகச் சொல்லிக்கொள்வதும் இன்னும் முந்தின சலாம் சொல்லும் போதிலேயே தொழுகையை விட்டும் புறப்படுகிறேனென்று நிய்யத்துச் செய்துகொள்வதும் இவைகளடங்கலும் ஸுன்னத்துகளாக விருக்கும், இன்னும் இதின் கீழெழுவதும் ஸுன்னத்துகளுக்குப்பேர் (அப் ஆலு) ஸுன்னத்தென்று சொல்லப்படும். அதில் ஒன்றையாவது ஒருவன் விடுவானேயானல் அவன் ஸஜதா ஸஹ்வு செய்யவேண்டும்.

## தொழுகையில் நின்றும், அல் ஆலுஸுன்னத்துகளின் பாடம்.

அந்த அப்ஆலு ஸுன்னத்துகளாகிறது முந்தின அத்தஹிய்யாத்து ஓதுகிறதும், அதற்காக இருக்கிறதும், அதில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் ஸலவாத்து சொல்லுகிறதும் பின்பு கடைசி அத்தஹிய்யாத்திலும் நாயகமவர்களின் கிளையாராகிய ஆல்கள் பேரிலும் ஸலவாத்துச் சொல்லிக்கொள்வது.

இன்னம் ஸுபுஹுத் தொழுகையில் கடைசி இஃதிதாலென்னும் ஒடுக்கத்து றக்கூவில் நின்று எழும்பி நிற்கும் நிலையில் குனூத்தென்னும் துஆவை ஓதுகிறதும் இன்னும் றமலான்மாதம் பாதிக்குமேல் கடைசிப் பாதியாகிய அரைவாசி நாட்களில் வித்ரு தொழும்போது அதில் குனூத்து ஓதுகிறதும் அந்தக் குனூத்தாகிறது (அல்லாஹும் மஹ்தினீ பீமன் ஹதைத்த வஆபினி பீமன் ஆபைத்த வத்த வல்லனீ பீமந்த வல்லைத்த வபாரிக்லீ பீமா அஃத்தைத்தவகினீ ஷர்றமாக் கலைத்த பஇன்னக்கத் தக்லீ வலாயுக்லா அலைக்க வஇன்னஹு லாயதில்லு மன்வாலைத்த வலயஇஸ்ஸுமன் ஆதைதத தபாறக்த றப்பன்ஹ வத்த ஆலைத்த பலக்கல் ஹம்து அலாமாக்கலைத்த வஅஸத்தக் பிறுக்க வஅத்தூபு இலைக்க) என்று ஓதுவது கொண்டு அந்த ஸுன்னத் துண்டாகிவிடும.

இன்னம் அந்தக் குனூத் தோதுவதில் அவன் நாடுவானேயானல் குறுஆனில் நின்று முள்ள துஆவுடைய ஆயத்துகளில் ஒரு ஆயத்தை யோதினும் போது மாகும் அல்லது கலப்பறுதலான ஒரு துஆவை யோதினும் போதுமாகும் அல்லது ஹதீதில் வரப்பட்ட ஒரு துஆவை யோதினும் அந்த ஸுன் துண்டாகிவிடும் என்றுலும் முன்னெழுதிய குனூத்தை யோதுகிறது வரிசையானதா யிருக்கும்

இன்னமந்த (அப் ஆலு) ஸுன்னத்திலுண்டான தாகிறது அந்த குனூத்தை யோதுகிறதற்காக நிலையில் நிற்கிறதும் அந்த குனூத்தின் கடைசியில் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மீது ஸலவாத்தை யோதுகிறதும் அஃதுடனே அவர்களின் கிளையாராகிய ஆல்கள் பேரிலும் ஸலவாத் தோதிக்கொள்வதும் இன்னும் துஆக்களுடைய துவக்கத்திலுங் கடைசியிலும் ஸல

வாத் தோதவேண்டுமென்று வந்ததில் இந்தகுனூத்துடைய துஆ வில் மட்டும் துவர்க்கத்தில் ஸலவாத்தை யோதவேண்டும். இந்த (அப் ஆது) ஸுன்னத்துகளில் நின்றும் ஒன்றை யொருவன் விட்டுவிட்டானேயானாலும் அதை விட்டது மனமுரண்டாகவானா லும் அல்லது விட்டோமோ விடவில்லையோவென்று சந்தேகமா யிருந்தானாலும் தொழுகைக்குப் பின்னும் சலாமுக்கு முன்னு மாக ஸுன்னத்தான இரண்டு ஸஜதாக்கள் செய்யவேண்டும்.

இன்னம் அந்த ஸஜதாச்செய்கிற வகைகளாகிறது யாராகிலு மொருவன் தொழுகையில் ஒருசெயலை மனமுரண்டாகச் செய் தானேயானால் அச்செயல் தொழுகையைப் பாத்திலாக்கிவிடுமே அப்பேர்க்கொத்த ஒரு கருமத்தை மறந்து செய்தானேயானாலும் அல்லது சுருக்கமான இடையிருப்பு இஹுத்தி தாலிவைப்போல் கட்டையாகிய பறுலுகளியொன்றை மறதியாக நீளமாக்கினனே யானாலும் அதிலொன்றை விட்டுவிட்டோமோ என்னவோ வென்று சந்தேகம் வைத்தானே யானாலும் அல்லது மறதியாகக் கொஞ்சம் பழக்கம் பேசினனே யானாலும், அல்லது கொஞ்சந் தின்றுனே யானாலும், அல்லது செயலினல் சரீரத்தாற் செய்யும் பறுலுகளிலொன்றை மடக்கி யிரண்டு விதத்தஞ் செய்தானே யானாலும் அல்லது சொல்லினல் ஓதலாலுண்டான பறுலுகளி லொன்றை அவைகளுடையதான மல்லாத தானத்தில் மறந்து ஓதினனே யானாலும் அஃதெவ்வித மெனில் அத்தஹிய்யாத் தோதுந்தானத்தில் பாத்திஹா சூறத்தை யோதுகிறது போலும் நிலையில் பாத்திஹா சூறத்தை யோதுகிறதானத்தில் அத்த ஹிய்யாத்தை யோதுகிறதுபோலும் ஒன்றை யோதவேண் டிய தானத்தில் மறதியாகாமற் றென்றை யோதினனே யானாலும் அல்லது அவைகளிலே ஓதினேமே வோதவில்லையோ வென்று சந்தேகம் வைத்தானேயானாலும் அல்லது அவன் தொழுத தொழுகையில் தொழவேண்டிய றக் அத்துகளுக்கு அதிகமாகிவிட்டதென்று தன்மனதில் சந்தேகத்திற்கு இடம் பாடானுனேயானாலும் முன்சொன்னது போலிரண்டு சஜதாச் செய்வான்.

## தொழுகையிற் புகுகிறதற்கு முன்னுண்டான ஸுன்னத்துக்களின் விபரம்

தொழுகையிற் புகுகிறதற்கு முன்னுண்டான ஸுன்னத் துகளாவன-பான்கு சொல்லுகிறதும் இகாமத்துச் சொல்கிறது

மாயிருக்கும் அதை யவனல்லாத வேறேயொரு மனிதன் பான்கு சொல்லுகிறதை யவன காதினாற் கேட்டிருந்தானேயானாலும் சரி ஆண்பிள்ளைகளுக்கு பறுலுத் தொழுகைக்குமுன் இவ்விரண்டு ஸுன்னத்தாக்கப்படும் பிள்ளைகளுக்கு இகாமத்துச் சொல்கிறதை மட்டும் ஸுன்னத்தாக்கப்படும் இன்னமந்தப்பான்கையும் இகாமத்தையுஞ் சொல்லும்போது ஒருவன் குர்ஆனோதிக்கொண்டிருந்தாலும் அல்லது உளூச் செய்துகொண்டிருந்தாலும் சரியே அவன் காதிற் கேட்டானேயானால் அவைகளை நிறுத்திவிட்டு அந்தப்பான்கு இகாமத்துகளுக்கு ஜவாபு சொல்லுகிறதும் அவன் பேரில் ஸுன்னத்தாக்கப்படும் அதாவது அதுபோலோதிக்கொள்வதுடன் (ஹைய அலஸ்ஸலா) வென்று சொல்லும்போதும் (ஹைய அலல்பலா) வென்று சொல்லும்போதும (லாஹவ்லவலாக்குவ்வத் இல்லாபில்லாஹில் அலிய்யில் அலிம்) என்று அந்நான்கு தடவைகளிலும் ஓதுகிறதும் ஸுன்னத்தாகவிருக்கும் இன்னம் (அஷ்ஹது அன்ன முகம்மதற்றசூலுல்லா) வென்று கேட்டால் அவ்விரண்டிடத்திலும் (மறுஹபன் பிஹபிபீவகுர்ரத்திஐனீ ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம்) என்று சொல்லி இரண்டுகையின் பெருவிரலை முத்திக்கொண்டு இரண்டு கண்ணில் தடவிக்கொள்கிறது முஸ்த்த அப்பாயிருக்கும் இன்னும் ஸுஹுபவக்தில் (ஸதக்த்த வபரிற்த்தவபில்ஹக்கி நதக்த்த) வென்றோதுகிறதும் ஸுன்னத்தாகவிருக்கும் இன்னமந்தப் பான்கும் இகாமத்துஞ் சொல்லு முடிந்தபின்னால் இந்த துஆவை யோதுவதும் ஸுன்னத்தாக விருக்கும்,

## பான்கு இகாமத்துடைய துஆ

அல்லாஹும்மஸல்லி அலாஸெய்யிதினா முகம்மதின்வஅலா ஆலிஸெய்யிதினாமுகம்மதின் அல்லாஹும்மறப்ப ஹாதிஹித் தஃறத்தித் தாம்மா? வஸ்ஸலாத்தில் கயிமா? ஆத்திஸெய்யிதனா முகம்மதனில் வஸிலத்த வல்வளீலத்தவத்றஜத்தர் றபீ அததல்ஆலியத் தவ்ஷரீடத்தவப் அதுஹுமகாமன்மஹ்மூக தானில்லாதீ அத்தஹுவறுஸுக்னாஷபர் அத்தஹு வஅவ்வரித்னா ஹவ்லஹு யவ்வல் கியாமத்தி யின்னக்கலாத்தகுலிபுல் மீஆத் வஸல்லல்லாஹு வஸல்லம் அலாஸெய்யிதினா முஹம்மதின் றஆலிஹி வஸஹ்பிஹீ அஜ்மஈன்: என்றோதுவதும் ஸுன்னத்தாக விருக்கும்.

## ஹதீது

நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திரு வுளமானதாக புகாரியீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ரிவா யத்துச் செய்திருக்கிறார்கள் அதாவது நீங்கள் தொழுகைக்கு ஹாலிருனீர்களேயானல் உங்களில் நின்று மொருவர் பாங்கு சொல்லிக் கொள்ளுங்களென்று.

இன்னம் இபுனுல் புகாரியி றலிஹல்லாஹு அன்ஹவர்கள் அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹவர்களைத் தொட்டம் நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமான தாகச் சொல்கிறார்கள் மூன்றுகரும மாகிறது அதிலே யுண்டான வரிசையையும் கைறையும் பறக்கத்தையும் அறிவார்களேயானல் அந்தக் கருமத்தின் தவாபை அபேட்சித்தவர்களாக, நான் செய் வேன்? நான் செய்வேனென்று வொருவர்க்கொருவர் முந்துவார் கள் பின்பு அக்கருமத்தைக் குறித்துச் சீட்டுப்போட் டெடுக்கப் படும்.

அதாகிறது தொழுகைக் காகப்பாங்கு சொல்லுவம்? ஜமா அத்துடனேதொழ ஆயத்தமாகிறதும்? முந்தின ஸப்புலே நின்று தொழுகிறதுமாகிய இம் மூன்றுமா யிருக்குமென்று.

## ஹதீது

இபுனு அபீசைபா றலியல்லாஹு அன்ஹு அவர்களும் பைஹகீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஸல்மானுல் பாரி ஸிய்யி றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் (மஃகூபான) ஹதீதாகச் சொல்லுகிறார்கள் அதாவது நாயகம் முஹம்மது மஸ் தபா றசூல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானர் தள் ஏதாகிலும் பூமியில் யாராகிலுமொரு மனிதன் (இகாமத் துச்) சொல்லித் தொழுவானேயானல் அவனுக்குப் பின்னலே மஃமூமாகத் தொடர்ந்து இரண்டு மலாயிக்கத்துமார்கள் தொழு வார்கள் இன்னும் யாராகிலுமொரு மனிதன் பாங்கும் இகாமத் தும்) சொல்லித் தொழுவானேயானல் அவனுக்குப் பின்னலே மஃமு மாதம் தொடர்ந்து இத்தனையே றெண்ண வொண்ணுத மலாயிக்கத்து மாகள் அவனுடைய கண்பார்வைக் கெத்துந் தொலை தூரத்திற்கு மதிகமான தொலைதூரம் வரையிலும் கூட் டங் கூட்டமாகக் கூடி ஸப்பு ஸப்பாக நின்று தொழுமார்கள்

இன்னமவன் (றுகூவு) செய்யும்போது அவர்களும் (றுகூவு) செய்வார்கள அவன் (ஸுஜூது) செய்யும்போது அவர்களுஞ் (ஸுஜூது) செய்வார்கள். இன்னமவனுடைய துஆ வுக்காக அவர்களடங்கலும் ஆமீன் கூறவுஞ் செய்வார்களென்று என்று

## ஹதீது

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளினதாக அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களும், முஸ்லிம் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் சொல்லுகிறார்கள் அதாவது (முஅத்தின்) பாங்குசொல்வதை நீங்கள் கேட்டீர்களே யானல் அவன் சொல்வதைப்போலே நீங்களும் சொல்லுங்கள் பின்பு என்பேரில் ஸலவாத்துச் சொல்லுங்கள் நிடளுகை யாராகிலு மொருவன் என்பேரில் ஒரு ஸலவாத்துச் சொல்வானே யானல் அவன் பேரில் அல்லாஹுத்தஆலா பத்து ஸலவாத்துச் சொல்வான் பின்பு அல்லாஹுத்தஆலாவிடத்தில் எனக்கு வஸீலாவைக் கேளுங்கள் அதாகிறது சுவர்க்கலோகத்தில் நின்றும் ஒரு தானமாகவிருக்கும் அந்தத்தானமோ எனக்கேயல்லாது அல்லாவுடைய அடியார்களில் நின்றும் மொருவருக்கும் பாத்திபமாக மாட்டாது. இன்னுமந்தத்தானத்தில் நான் ஆயிருக்க ஆதரவுவைக்கிறேன் ஆகையால் யாராகிலுமொருவன் எனக்காக வேண்டி அந்த வஸீலவென்கிற தானத்தை அல்லாஹுத்தஆலாவிடத்தில் கேட்டானே யானல் அவனுக்கு கியாம நாளில் அல்லாஹுத்தஆலாவிடத்தில் (ஷபாஅத்) தென்னு மன்றுட்டஞ் செய்கிறது என்பேரில் (வாஜி) பாகவுங் கடமையாகவுமாயிற்று, என்று ஆகைபாலெனது சகோதரர்களே! அந்த வஸீலாவைக் கேட்கிற துஆ வாகிறது பாங்கு சொல்லி முடிந்தவுடன் ஓதுகிற நஆவின் பேரிலடக்கி யிருக்கிறது. ஆதலாலந்த துஆவை மறதியாக விட்டுவிடாமல் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் (ஷாபஅத்தை) யாதரவு வைத்தவர்களாக பாங்கு சொல்லி முடிந்தவுடன் அந்த துஆவை யோதி வருவீர்களாக

## ஹதீது

யாராகிலு மொருவன பாங்கு சொல்லும்போது தன்யாவுடைய பேச்சைப் பேசுவானே யானல் அவனுடைய ஈமானுகிறது அவனை விட்டும் நீக்கிப் போகிறதின் பேரில் பயந்து கொள்

ளட்டு மென்கிறதாக நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமானதாக ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

## ஹதீது

யாராகிலு மொருவன் பாங்கு சொல்லும் போதில் துன்யாவுடைய பேச்சைப் பேசுவானேயானால் அவனுக்கு மவுத்து நேரத்தில் அவனுடைய நாவு தட்டழிந்து தடுமாறிப் போகுமென்று நபிநாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னும் தொழுகைக்காகப் பரிவட்டமணிகிறது, தலைப்பாகை கட்டுகிறதும், தொழுகை யளவில் நிற்கிற விஷயத்தில் மிஸ்வாக்குச் செய்கிறதும் ஸுன்னத்தாக விருக்கும் இன்னும் புகாரீ றலியல்லாஹு அன்ஹு அவர்களும், முஸ்லிம் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். உங்களி லொருவன் தொழுகிறதாக விருந்தால் அவனுடைய கழுத்தின் பேரில் ஒரு வஸ்து மில்லாதிருக்க ஒற்றைப்பிடவையால் தொழவேண்டா மென்று நாயகம் திருவுளமானார்க ளென்று.

இன்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானதாக இபுனு அஸாக்கிறது றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள், யாராகிலு மொருவன் பறுலுத் தொழுகை யானாலும், அல்லது ஸுன்னத்துத் தொழுகை யானாலுஞ் சரியே, அதற்காகத் தலைப்பாகை கட்டிக்கொண்டு தொழுவரான யானால் அவன் தொழுததுபோல் இருபத்தைந்து தொழுகையுடைய (கதற்) தவாபுண்டா யிருக்கிறது. இன்னும் அவன் (ஜும்ஆ) நாளையில் தலைப்பாகையுடனே தொழுவானே யானால் தலைப்பாகை யில்லாமல் தொழுகிறதைப் பார்க்கிலும் எழுபது (ஜும்ஆ) வுடைய வரிசை யுண்டா யிருக்கிறது என்று.

இன்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமானதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது அதாவது என்னுடைய வும்மத்துகள் பேரில் வருத்த மில்லாமலிருக்குமேயானால் நானவர்களுக்கு மிஸ்வாக்குச் செய்கிறதைத் தொழுகை படங்கிலும் பறுலாக ஏவி விடுவே னென்று திருவுளமானார்க ளென்று இன்னும் மிஸ்வாக்குச் செய்து தொழுகிற வொரு தொழுகையானது மிஸ்வாக்குச் செய்யாமல் தொழும் எழுபது

தொழுகையைப் பார்க்கிலும் வரிசையானதா யிருக்குமென்று
இபனு ஸஞ்சனிய்யா சொன்னார்கள். அதை ஹாக்கிம் றலியல்
லாஹு அன்ஹு அவர்கள் (ஸிஹ்ஹத்) தாக்கி வைத்திருக்
கிறார்கள். இன்னும் (நவவீ) றலியல்லாஹு அன்ஹு அவர்கள்
(வஜ்முஉ) என்கிற கித்தாபில் சொல்லுகிறார்கள். யாராகிலுமொரு
வன் தொழுகிறதாக விருந்தால் அவன் கழுத்தில் ஏதாவதொரு
பிடவையை ஆக்கிக்கொள்கிறது ஸுன்னத்தாக விருக்குமென்
றும் பிடவை யில்லாதுபோனால் அவன் கழுத்தின் பேரில் ஒரு
கயிற்றை யாகிலும் எடுத்துப் போட்டுக்கொள்ள வேண்டுமென்றும்
அந்தக் கழுத்திலாவது அல்லது தோளிலாவது ஒரு வஸ்துமில்
லாமலொழிந்திருக்கக் கூடாதென்றும் அவ்விதம் கழுத்திலாவது
தோளிலாவது ஒரு வஸ்துவுமில்லாமல் தொழுகிறது (மக்றூ)
ஹென்று சொல்லி யிருக்கிறார்கள். இன்னுந் தலையைத் திறந்தவ
னாகத் தொழுகிறதும் அப்படிப் போலவே (மக்றூ) ஹாகத்தா
னிருக்கு மென்றுஞ் சொல்லுகிறார்கள் நம்முடைய ஷெய்காகிய
இமாம் இபனு ஹஜறு றஹ்மத்துல்லாஹி அலைஹி யவர்கள்
சொல்லுகிறார்கள். திடனாகத் தலைப்பாகையும், மிஸ்வாக்கையும்
ஸுன்னத் தாக்கப்படும் அவைகளை யொருவன் தொழுகையிற்
புகுந்திட்டானே யானாலும் அவைகளுக் கிடம்பாடுண்டாயிருந்
தால் அப்படிப்பட்டதாய் கொஞ்சச் செயலைக் கொண்டு செய்
துக்கொள்ளவும் அதெப்படிப் போலெனில் அவனுக்கு மூன்று
செயல் தொடர்ச்சியா யில்லாமற் செய்து முடிக்கவேண்டும் இன்
னும் ஒரு (ஸுத்ரா) வென்னுந் திரையை முன்னாலாக்கிக் கொள்
வதும் ஸுன்னத்தாக விருக்கும் அதாவதெப்படியெனில் தொழு
கிறவன் அவன் தொழுகிறதற்காக நிற்கிற தலத்தில் நின்றும்
மூன்று முழத்திற் கப்புறம் உயர்வாகிய ஒருவஸ்துவை வைத்துக்
கொண்டு தொழுகிறதும், அதில்லாதிருக்கில் முஸல்லா போட்
டுக் கொள்கிறதும், அது மில்லாதிருக்கில் அவன் முன்னாலே நீள
மாக வொருவரையை வரைந்துக்கொள்கிறதும் ஸுன்னத்தாக்
கப்படும் இன்னம் அகல் பாலிகான யாராகிலுமொருவன் அந்த
வரையுடனே நடந்தானே யானால் அவனைத் தட்டிக் கொள்ளவும்,
இன்னமந்நேரத்தில் அவ்விதமாக நடக்கிறது ஹறாமாக விருக்கு
மென்று.

இன்னம் (ஷறஹுஸ் ஸுன்னா) வென்கிற கித்தாபில் (பக்வீ)
றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் இமா

மாகிறவர் அவர் நிற்கிற தானத்திற்கு முன்னால் மூன்று முழத்திற்கப்பால் ஏதாவதொரு அடையாளம் வைத்தாரே யானாலும், அல்லாதவருடைய ஆஸாவையோ மற்றொன்றையோ நட்டு வைத்தாரே யானாலும் மஃமூங்களுக்கு அப்படி யடையாளம் வைக்கத் தேவையில்லை இமாம்வைத்த அடையாளமே போதுமானதாக விருக்குமென்று இன்னம் (அபூதாவூது) றளியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் உங்களிலொருவன் தொழுதானே யானால் அவனுடைய முகத்திற்கு நேராலே ஒரு வஸ்துவை யாக்கிக்கொள்ளவும், அல்லது ஆஸாவை நட்டிக்கொள்ளவும் அல்லது ஆஸாவுமில்லையானால் அவனுக்கு முன்னாலேயொரு கீற்றைக் கீறிக்கொள்ளவும் பின்பு அதற்கு முன்னாலே யொருவன் நடந்தானே யானால் தங்கடஞ் செய்யமாட்டாதென்று, இன்னம் ஷெய்காகிய) புகாரீ றளியல்லாஹு அன்ஹு அவர்களும், முஸ்லிம் றளியல்லாஹு அன்ஹு அவர்களுஞ் சொல்லுகிறார்கள் உங்களில் நின்று மொருவன் ஒரு வஸ்துவை (ஸுத்றா) வாக வைத்துத் தொழுதானே யானால் அதைக் கடந்து போகிறதற்கு ஒருவனாரம்பித்தால் அப்பொழுதவனைத் தட்டவும் அந்தத் தட்டுதலுக்கு மவன் விலகவில்லை யானா லவனை வெட்டுகிறதினால் யாதொரு குற்றமுமில்லை இன்னுமவன் ஷெய்த்தானாக விருக்குமென்றுஞ் சொன்னார்கள்.

இன்ன மவ்விருவர்களுஞ் சொல்லுகிறார்கள் (ஸுத்றா) வைத்துத் தொழுகிறானே யவனுக்கு முன்னால் நடக்கிறதைப் பார்க்கிலும் நாற்பது வருஷமானாலும் மறுபக்க மொதுங்கித் தரிபட்டு ஒரே நிலையாக நின்று விடுகிறது நலமென்று அப்படியே நின்று விடுவார்களென்று. இன்னம் (தபுறானியு) றளியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் இமாமானவர் (ஸுத்றா) வைத்திருந்தாரே யானால் அவருக்குப் பின்னின்று தொழுகிறவர்க ளடங்கலுக்கும் அந்த [ஸுத்றாவே]போதுமென்றும் இன்னம் யாராகிலு மொருவர் தொழுகை யளவிலே நிற்க நாடுவாரேயானால் அதற்கு முந்தி (தஸ்பீஹு என்னும் ஸுபுஹானல்லா) ஹென்று 10-விடுத்தமும் (தஹ்மீ) தென்னும் [அல்ஹம்து லில்லாஹி]யென்று பத்து விடுத்தமும் (தக்பீ) றென்னும் [அல்லாஹு அக்ப]றென்றுபத்து விடுத்தமும் [தஹ்லீ] லென்னும் [லாஇலாஹ இல்லல்லா] ஹென்று பத்து விடுத்தமும் [இஸ்திக்பா] றென்னும் [அஸ்தக்

பிறல்லாஹில் அலீ] மென்று பத்து விடுத்தமுஞ் சொல்லுகிறது ஸுன்னத்தாக விருக்குமென்று மூத்தரவு செய்தார்கள்.

## கிபுலாவின் றிசையை மூன்னோக்கி நின்று இருகை களையு முயர்த்தித் தக்பீறு கட்டுகிறதின் மொழிதல்களில் விபரம்.

### ஸுபுஹுக்கு ஸுன்னத்தானல்

உஸல்லி ஸுன்னத்தஸ் ஸுபுஹி றக்அத் தைனிலில்லா ஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

### ஸுபுஹின் பறுலானல்

உஸல்லி பறுலல் ஸுபுஹி றக் அத்தைனி லில்லாஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

### ளுஹறுக்கு ஸுன்னத்தானல்

உஸல்லி ஸுன்னத்தல் ளுஹ்றி றக்அத் தைனி லில்லாஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

### ளுஹறின் பறுலானல்

உஸல்லி பறுலல் ளுஹ்றி அறுபஅ றக் அத்தின் லில்லா ஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

### அஸ்றுக்கு ஸுன்னத்தானல்

உஸல்லி ஸுன்னத்தல் அஸ்றி றக்அ த்தைனி லில்லாஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

### அஸ்றின் பறுலானல்.

உஸல்லி பறுலல் அஸ்றி அறுபஅ றக் அத்தின் லில்லாஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

### மக்ரிபுக்கு ஸுன்னத்தானல்

உஸல்லி ஸுன்னத்தல் மக்ரிபி றக்அத்தைனி லில்லாஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

### மக்ரிபின் பறுலானல்

உஸல்லி பறுலல் மக்ரிபிதலாதா றக்அத்தின் லில்லா ஹித்த ஆலா அல்லாஹு அக்பர்.

## இஷாவுக்கு ஸுன்னத்தானால்.

உஸல்லி ஸுன்னத்தல் இஷா இறக்அத்தைனி லில்லாஹித்த ஆலா அல்லாஹு அக்பற்.

## இஷாவின் பறுலானால்.

உஸல்லி பறுலல் இஷாஇ அறுபஅ றக்அத்தின் லில்லாஹீத்த ஆலா அல்லாஹு அக்பர் என்பதாக விருக்கும்.

## அந்தத் தொழுகையிலுண்டான மக்றூஹுகளின் விபரம்.

தொழுகையி லுண்டான மக்றூஹுகளாகிறது 1-வது (இஹ்றூ) முகடய தக்பீறு கட்டுகிற போதிலோ அல்லது (ஸுஜூது) செய்கிற போதிலோ இரண்டு கைகளையுந் திறக்கப் பட்டதா அல்லது மேலே யணிந்திருக்கும் பரிவட்டங்களைக் கொண்டோ மூடினதாக விருக்கிறதும் 2-வது இரண்டு கால்களை யுஞ் சேர்த்துக் கொள்கிறதும் 3-வது இரண்டி லொருகாலை முன்னதாக வைத்துக் கொள்கிறதும் 4-வது நிலையில் நிற்கிற போது ஒற்றைக் காலின்பேரில் ஊன்றுதல் பிடித்ததாக நிற்கிற தும் 5-வது இரகசியமாக ஓதுந் தானங்களில் சத்தமிட்டோதுகிற தும் 6-வது சத்தமிட்டோதுந் தானங்களி லிரகசியமாக வோதுகிற தும் 7-வது (றுகூவு)செய்யும்போது தலையைத் தூங்கு தலையாக்கித் தாழ்த்திக் கொள்கிறதும் 8-வது மேலே சொல்லிய ஸுன்னத்து களுக்கு விகற்பஞ் செய்கிறதும் 9-வது ஸுஜூதுக்குப் போகிற போது உறுப்புகளை வைக்கிறதில் விகற்பஞ் செய்கிறதும் 10-வது [ஸுஜூது] செய்யும் போது இரண்டு முளங்கைகளையும் பூமியிற் கிடத்திக் கொள்கிறதும் 11-வது அந்த [ஸுஜூது] செய்வதில் மூக்கைப் பூமியிற் படாமற் செய்கிறதும் 12-வது ஆண்பிள்ளையாக விருந்தால் (றுகூவிலே) இரண்டு கொடுங்கைகளையும் நீக்கிறதை விட்டுஞ் சேர்த்துக் கொள்கிறதும் 13-வது (அஊது) ஓதுகிறதை விடுகிறதும் 14-வது ஸூறத்து ஓதலை விடுகிறதும் 15-வது ஒரு பறுவில் நின்று மறு பறுவில் திரும்பும்போது (அல்லாஹு அக்ப றென்று) தக்பீறு சொல்கிறதை விடுகிறதும் 16-வது (றுகூவு) (ஸுஜூது) செய்கிறதில் கொஞ்சம் (தஸ்பீஹை) விடுகிறதும் 17-வது (இஹத்திதாலிலுங்) இரண்டு ஸுஜூதுக்) கிடையிலும் இடையிருப்பிலும் சொல்கிற திக்றுகளை விடுகிறதும் 18-வது பின்

தின அத்தஹிய்யாத்தின் கடைசியில் ஓதுகிற துஆவை விடுகிறதும் 19-வது தொழுகையை மொத்தத் தீபரமாக முடிக்கிறதும் 20-வது இமாமானவர் துஆ வோதுகிறதில் தனக்கு மாத்திரம் சொந்தமாக ஓதிக்கொள்கிறதும் 21-வது இமாமானவர் இஸ்திருஹத்திருப்பை விட்டுவிட்டாரானல் மஃமூமானவன் அவருடனே யெழும்பிவிடாமல் அதற்காக இமாமை விட்டுவிட்டு இருக்கிறதும் 22-வது தாடியில் அல்லது ரோமங்களிற் கை யிடுகிறதும் 23-வது பிடவையை மண்ணுகிறதும் அல்லது நீக்கிவிடுகிறதும் அல்லது தூசிபோலுள்ளவைகளில் நின்றும் முகத்தைத் தடவுகிறதும் 25-வது முன்னாலேயாகிலும் அல்லது வலது புறத்திலாகிலும் எச்சிலுமிழ்கிறதும் 26-வது சங்கதிக்காக அல்லது வர்த (கலக்கு கள் விளங்கிக் கொள்வதற்காக ஓர் இஷாருக் காட்டுகிறதும் 27-வது கொட்டாவி யிடுகிறதும் 28-வது இருப்பில் இடது கையைக் கொண்டு இடுப்பி லூன்றுதல் பிடித்ததாக இருக்கிறதும் 29-வது இரண்டு ஸலாமூட்டுகிறபோதும் இரண்டு கைகளையும் மலத்துகிறதும் இவைகளெல்லா மக்ரூஹாக விருக்கும்.

## தொழுகையில் ஹறாமான சங்கதிகள்

தொழுகையில் நிற்கும்போது திரும்பிப் பார்க்கிறது ஹறாமாக விருக்கும், இன்னம் செஞ்சைத் திருப்புகிறதுகொண்டு தொழுகை பாத்திலென்றும் வருகிறது மூத்த வலீய்யு றலியல்லாஹு அன்ஹு அவர்களும், ஹாலீமிய்யி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் சொல்லுகிருர்கள். (ஸுஜூது) உடைய தானத்தை விட்டு அவனுடைய பார்வையை யுயர்த்துகிறதும் ஹறாமாகுமென்று, இன்னம் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமாயிருக்கிறதாக (அது றயிய்யி) றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிருர்கள். யாராகிலுமொருவன் தொழுகையிலே திரும்பிப் பார்த்தானேயானல் அல்லாஹுத்தஆலாவாகிறவன் அவனுடைய தொழுகையை அவன் பேரிற்றானே பிட்டி விடுவானென்று நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லாமவர்கள் திருவுளமா யிருக்கிருர்களென்று.

## ஹதீது

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானதாக (தபுருனிய்யு) றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்

துச் செய்திருக்கிறார்கள். ஒரு கூட்டத்தாருடைய ஹாலென்ன அவர்கள் தொழுகையில் வானத்தளவிற் பாய்கிறவர்களாக இருக்கின்றார்களேயென்று ஆகையாலவர்களுடைய சொல்லானது அச் செயலின்பேரில் கடிதானதாக வாயிற்று. இன்னு மப்படிப் பார்வையை யுயர்த்துகிறதை விட்டும் விலக்கினார்கள். அல்லது அவர்கள் அவ்விதம் பார்வையை யுயர்த்துவார்களேயானால் அவர்களுடைய கண்கள் குருடாகப்போகட்டு மென்றதாகச் சொல்லுகிறார்கள். இன்னும் (புகாரிய்யு) றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள் திடனாக (யூஸுபுநபி) அலைஹிஸ்ஸலா மவர்களுக்கும் அவர்களுடைய தகப்பனாராகிய (யஃகூபுநபி) அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு மிடையில் சில துன்பங்களைக்கொண்டு சோதிக்கப்பட்டதாவது (நபியஃகூபு) அலைஹிஸ்ஸலா மவர்கள் தொழுதுக்கொண்டு நிற்கும் போதில் மகன் (யூஸுபுநபி அலைஹஸ்ஸலா மவர்கள் நித்திரை செய்துக்கொண்டிருக்கையில் அவர்கள் பேரிலுள்ள பிரியத்தாலும், மஹப்பத்தாலும் தொழுகையை விட்டும் திரும்பிப் பார்த்து விட்டார்களே ஆதலால்தான் அவர்களிருவர்களுக் கிடையில் வெகுகாலமாகப் பிரிக்கப்பட்டுப் போய்விட்டதென்று ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

## தொழுகையில் மக்றூஹுத்தஹ்ரீமாகிய வக்த்துகளைப் பேசுகிற பாடமாகவிருக்கும்

தொழுகையிலுண்டான மக்றூஹுத் தஹ்ரீம்களாகிறது ஜும்ஆ நாளைத்தவிர மற்ற நாட்களில் பொழுதானது மதியமென்னும் உச்சியிலிருக்கும்போது தொழுகிறதும், ஸுபுஹுத் தொழுகைக்குப் பின்னாலேயும் அஸ்றுத் தொழுகைக்குப் பின்னாலேயுந் தொழுகிறதும், பொழுதாகிறது உதித்தெழும்பும் போதிலும் அது அடையும்போதிலும் தொழுகிறதுமாம். அதானது பிந்தப்பட்டதல்லாத ஸபபுடைய தொழுகையாயிருந்தால் அப்படிக் கல்லைத் தொழலாம் அதேதுபோலெனில்(தஹய்யத்துல் மஸ்ஜிது) இரண்டு றக்ஆத்தைப்போலும், அல்லது (உலூ) வுடைய தொழுகையைப்போலும், அல்லது களாவாகத் தப்பிப்போன தொழுகையில் இவன் மேற்சொன்ன வக்த்தில்தான் தொழவேண்டுமென்று நாடவில்லையே அந்தத் தொழுகையுந் தொழுதுக் கொள்ளலாம் இன்னும் (ஜனாஸாத்) தொழுகையுந் தொழுதுக்கொள்ளலாம்,

## தொழுகையில் மக்றாஹ¬த் தன்ஸீஹ¬களை விபரிக்கிற பாடமாக விருக்கும்.

தொழுகையி லுண்டான மக்றாஹ¬த் தன்ஸீஹ¬களாகிறது, மலபாதை ஜலபாதை (விருத்) தென்னும் காற்று இவைகள் முடுக்கிறபோது அவைகளை யடக்கி வைத்துக்கொண்டு தொழுகிறதும்? வஜீபன முதலிய ஆகாரங்கள் தயாராக விருக்கும்போது அவைகளிலிவன் ஹாஜத்தாக விருந்தும் அவைகளை யிவன் புசிக்காமல் தொழுகிறதும்? கட்டிடங்கள்? பள்ளிவாசல்கள்? வீடு முதலியவைகளில் ஆள்கள் போக்குவரத்தான வழியிலோ அல்லது அவைகளுடைய வாசல்களிலோ தொழுகிறதும்? இன்னும் கபுறுகளின் மேலும் அதன் கீழும் வலபாகம் இடபாகமாக இவைகளிலும் தொழுகிறது மக்றாஹ¬த் தன்ஸீ ஹாகவிருக்கும்.

## தொழுகையின் வரிசைகளைப் பேசும் பாபமாக விருக்கும்

பறுலான தொழுகையின் வரிசைகளாகிறது அல்லாஹ¬ ஸ¬புஹானஹ¬ வுத்த ஆலா குற் ஆன் ஷரீபில் திருவுளமாயிருக்கிறான் திட்டமாகத் தொழுகை யாகிறது முஃமீன்கள் பேரில் வக்த்துக் குறிக்கப்பட்ட பறுலாக வாகிவிட்டது அதைவிட்டும் விற்படுத்தவுங்கூடாது. முற்படுத்தவுங் கூடாதென்றும், இன்னும் வலுப்பமாகிய குற்ஆன் ஷரீபில் ஹக்ஸ¬பு ஹானஹ¬வத்த ஆலா திருவுளமாயிருக்கிறான் ஈமான் கொண்டவர்களே! உங்களுடைய முதல்களும் மக்களும் அல்லாவுடைய திருறை விட்டும் உங்களைப் பராக்காக வத்துத் தொழுகையை விட்டும் பராக்காக வாக்கி வைத்திடவேண்டா மென்பதாம். இன்னும் யாராகிலு மொருவர் அப்படிப் பராக்காக ஆயிருந்திட்டார்களேயானால் அவர்களாகிறவர்கள் துன்யாவிலும்? ஆகிறத்திலும் நஷ்டவாழர்களாக விருப்பார்களென்றும் அல்லாஹ¬த்த ஆலா திருவுளமாயிருக்கிறான்.

### ஹதீது

நபிஸல்லல்லாஹ¬ அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானதாக (இபுனுவுமறு) றலியல்லாஹ¬ அன்ஹ¬மா அவர்களைத் தொட்டும் (ஹக்கீம்) றலியல்லாஹ¬ அன்ஹ¬ வெளிப்படுத்தினார்கள் அதாவது என்னுடைய வும்மத்தின் பேரில்துவக்கத்தில் அல்லாஹ¬த்த ஆலா பறுலாக்கினதாகிறது ஐந்துவக்த்துத் தொழுகை

யாக விருக்கு மென்றும், இன்னும் அவரவர்களுடைய அமல்க ளில் நின்றும் துவற்கத்தில் அல்லாஹுத்த ஆலாவினளவிலே உயர்த்தப் படுகிறதும் அந்த ஐந்து வக்த்துத் தொழுகையாக விருக்கு மென்றும் இன்னும் ஆகிறு லோகத்தில் முதலாவது கேள்வி கேட்பார்களே அந்த அமலானதும் அந்த ஐந்துவக்த்துத் தொழுகையாக விருக்குமென்றும்.

இன்னும் உயர்த்தியாகிய அல்லாஹு ஸுபுஹானஹு வத்த ஆலா கியாமநாளில் மலாயிக்கத்து மார்களுக்கு உத்தரவு செய் வான் என்னுடைய அடியானில் நின்றும் பறுலுத்தொழுகைகளில் யாதொன்றை பழுதாக்கிப் போட்டானேயானால் அவன் தொழும் ஸுன்னத்துகளை நீங்கள் நோட்டமிடுங்கள் அவனுடைய பறுலுத் தொழுகையி லுண்டான குறைகளுக்கு அந்த ஸுன்னத்துத் தொழுகையைக்கொண்டு நிரப்ப மாக்குங்கள். இன்னும் றமலான் மாதத்தில் பறுலான நோன்புகளில் ஒன்றையாவது பழுதாக்கி யிருக்கிறானென்று நோட்டமிடுங்கள் அப்படிப் பழுதாக்கியிருந் தானேயானல் அதிலுண்டான குறைகளுக்கு அவனுடைய ஸுன் னத்தான நோன்பைக்கொண்டு நிரப்பமாக்குங்கள். இன்னும் என் னுடைய அடியானுடைய பறுலான ஸக்காத்தை நோட்டமிடுங் கள் அதிலுங் குறைகளுண்டாயிருந்தால் அவன் ஸுன்னத்தான ஸதகாக்கள் செய்திருப்பானேயானல் அவைகளைக் கொண்டு நிரப்பிவையுங்களென்றும் அல்லாவுடைய றஹ்மத்தைக்கொண் டும் அவனுடைய நீதத்தைக்கொண்டும் அந்த பறுலுகளுக்குப் பகரமாக இந்த ஸுன்னத்துகளை யெடுத்துக்கொள்ள உத்தாவு செய்வானென்றும்.

பின்பு மீஸானில் வைக்கப்படும் அமல்களில் அவனுக்குமேல் மிச்சமாகிய மூர்க்கத்தைத் திராசில் மலாயிக்கத்துகள் கண்டார் களேயானல் சந்தோஷமாக அவனை நோக்கி நீ சுவர்க்க லோகத் திற் புகுதென்று சொல்வார்கள். அப்படி யவனில் நின்றும் ஒரு வஸ்தையும் காணப்படவில்லை யானல் உடனே ஸபானியாக்க ளென்னும் நரகலோகத்து மலாயிக்கத்துமார்கள் வசம் பிடியென் பதாக ஏவப்படும் அப்போதவர்கள் அவனுடைய கைகளையும் கால்களையும் பிடித்திழுத்து நரகத்தில் தானே யெறிந்து விடு வார்க ளென்றார்களென்னு.

## ஹதீது

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமானதாக (ஜபிறு) றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் (முஸ்லிம்) றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் ஐந்து வக்துத்தொழுகைக்கு உவமையாகிறது உங்களுடைய வீட்டுவாசலருகில் இன்பமாகிய ஓர் ஆறு ஓடுகிறது போலேயாயிருக்கும் அவ்விதமாயோடுகிற ஆற்றில் ஒருநாளொன்றுக்கு நீங்கள் ஐந்துதடவை முழுகினால் உங்களுடைய சரீரத்திலுள்ள ஊற்றைகளை அந்த ஆற்றுத்தண்ணீரெவ்விதமாய் துப்புரவாக்கிச் சுத்தப்படுத்துமோ அவ்விதமாகவே நீங்கள் ஐந்துவக்த்து தொழுகையையுந் தொழுது வந்தீர்களானால் அந்தத் தொழுகையானது உங்களுடைய பாவங்களடங்கலையும் அழைத்துப் பரிசுத்தமாக்கி விடுமென்று.

## ஹதீது

(அபிதர்று) றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் (அஹ்மது) றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லுகிறார்கள் நிடனுக நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒரு காலத்தில் வெளியிற் புறப்பட்டார்கள் அப்போது ஒருமரத்தில் நின்றுமுள்ள ஒரு கொம்பைக் கையிலெடுத்து அதை யசைத்தார்கள். அந்தக் கொம்பிலுள்ள இலைகளடங்கலு முதிர்ந்து விட்டது உடனே (அபாதர்றே) என்றழைத்தார்கள் அதுகேட்டு (அபாதர்று) லப்பைக்கயாறசூலல்லா வென்று சப்தங் கொடுத்தார்கள் அப்போது நாயகமவர்கள் திருவுளமானார்கள் இந்த மரத்தின் இலைகளெல்லாம் எவ்விதமா யுதிர்ந்துவிட்டதோ இதுபோலவே ஒரு முஸ்லிமான அடியான் அல்லாவுடைய முகத்தை நாடித் தொழுவானே யானால் அந்தவுடனேயே அவனுடைய பாவமடங்கலு முதிர்ந்துவிடுமென் றருளினார்களென்று.

## ஹதீது

இபுனு உமறுறலியல்லாகு அன்ஹவர்களைத் தொட்டும் பய்ஹகியும் தபறானிறலியல்லாகு அன்குமா அவர்களும் சொல்கிறார்கள் நிடனுக ஓர் அடியானிறைவன் தொழுகைக்காக நின்றானேயானால் அவன் செய்தபாவம் அடங்கலையும் கொண்டுவந்து அவனுடைய தலையிலும் அவன் தோள்களிலும் வைக்கப்படுமென்

றம் அவன் குனிந்து றுகூவுக்குப் போகிறபோதும் சஜூதுக்குப் போகிறபோதும் அந்தப் பாவம் அடங்கலும் விழுந்து விடுமென் றும் நபிநாயகம் திருவுளமானதாகச் சொன்னூர்கள்.

## ஹதீது

உதுமான் றலியல்லாகு அன்ஹுவர்களைத் தொட்டும் நாயகம் சல்லல்லாகு அலைஹிவசல்லம் திருவுளமானதாக முஸ்லிம் றலியல்லாகு அன்கு சொல்லுகிறூர்கள் ஒரு முஸ்லீமான ஆண் பிள்ளை இல்லை அவனுபிறவன் பறுலான தொழுகைக்கு ஹாஸிருகி ஒலுவும் அழகாகச் செய்த பயக்காத்துடனே றுகூவும் சஜூதும் செய்தானே யானுல் அவன் பெரும்பாவம் செய்யாமலிருக்கும் காலமெல்லாம் அவன் பாவம் அடங்கலுக்கும் அந்தத் தொழுகை யாசிறது தெண்டகுற்றமாக ஆயேயொழிய வில்லை யென்றும் அதின்முறுவது பாவம் அடங்கலும் தீர்ந்து போகுமெனச் சொன்னூர்களென்று.

இன்னம் நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் திருவுளமானதாக அனகு றலில்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் பய்ஹகிய்யி சொல்லுகிறூர்கள். அல்லாஹுத்தஆலா இடத்தில் மனிதருடைய தொழுகைகளைக் கொண்டு போவார் களே அந்த இரண்டு மலக்குமாகிறவர்கள் இல்லை அந்த மலக் கிடத்தில் அல்லாஹுத்தஆலா அந்த அடியானுடைய பிழையைப் பொறுத்தேனென்று சொல்லி அவர்கள் இரண்டு பேரையும் ஷாஹிதுவைத்தே யொழியவில்லை யென்று சொன்னூர்கள். இன் னம் (ஸவாஜிறென்கிற) கிதாபில் நமது செய்குனு காத்திமத்துல் முஹியித்தீன் ஹுஹமதிபுனு ஹஜமறுல் ஹைதமிறலியல்லாஹு அன்ஹுவர்களைத் தொட்டும் சொல்லப்படுகிறது ஹதீதுடையவர் களில் சிலர்கள் சொன்னூர்கள் யாராகிலும் ஒருவன் அஞ்சொகுத் துத் தொழுகையைப்பேணி வருவானே யானுல் அஞ்சுகருமத் லதைத் தொட்டும் அல்லாஹுதஆலா அவனைச் சங்கையாக்கிவைப் பான் அதில்முன் தினது மஹ்றசிய்யத்தென்னும் கிருபாகத்துடைய கிட்டுமையை அவனில் நின்றும் நீக்கிவிடுவான் அவனுடைய பட் டோலையை அவன் வலது கையில் கொடுப்பான். மின் வெட்டு கிறது போல சிறுத்தல் முஸ்தகிம்மெனும் பாலம் கடத்தாட்டு வான்.

கேள்விகணக்குக்கூட கேட்காமல் சொர்க்கலோகத்திற் புகுத்தாட்டி வைப்பானென்று இன்னம் தொழுகையை விட்டும் பொடுபோக்காக யிருந்திடுவானே அவனுக்கு அல்லாஹுத்தஆலா, பதினைந்து கருமத்தில் வேதனை செய்வான் அதில் துன்யாவிலே உண்டாகும் வேதனை யாகிறது. ஆறாகயிருக்கும் அவன் மவுத்தில் உண்டாகிறது மூன்றாக விருக்கும். அவன்கபுறில் உண்டாகிறது மூன்றாகவிருக்கும் அந்தக் கபுறில் நின்றும் அவனை எழுப்பும்போது கியாமத்திலுண்டாகிறது மூன்றாக விருக்கும் அதில் துன்யாவிலே உண்டாகிறதில் நின்றும் முந்தினதாகிறது அவன் வாணாளில் நின்று முண்டாவாகிய பறக்கத்தை அல்லாஹுத்தஆலா எடுத்து விடுவான் இன்னும் இரண்டாவது அவனுடைய முகத்தில் நின்றும் ஸாலிஹீன்களுடைய அடையாளத்தை அழித்து விடுவான், மூன்றாவது அவன் வேறே என்ன அமல் செய்திருந்த போதிலும் அந்த அமல்களடங்கலுக்கும் கூலியே கொடுக்கமாட்டான், நாலாவதாவது அவனுடைய துஆக்களை வானத்தளவிலே உயர்த்தப்படாது அஞ்சாவதானது ஸாலிஹீன்கள் முஸ்லிமானவர்களைத் தொட்டம் அல்லாஹுத்தஆலா இடத்தில் கேட்குறார்களே அந்த துஆக்களில் அவனுக்கு பேரேகிடையாது. ஆறாவது அவனுடைய றிஸ்கில் நின்றும் பறக்கத்தை அல்லாவுத்தஆலா உயர்த்திவிடுவான் முந்தவிருந்த போதிலும் இவன் விசாரப்பட்டவனாகவும் துக்கப்பட்டவனாகவும் தானே யிருப்பான் இன்னம் மவுடத்திடத்தில இவனுக்கு பிடிக்கிற கருமத்தில் முந்தினதாவது அக்தொழுகை யில்லாதவன் மெத்தத் தாழ்மையானவனாகத்தானே சாவான் அதில் இரண்டாவது ரொம்பவும் பசித்தவனாகவே சாவான் அதில் மூன்றாவதாகிறது கடுசானதாகத் துடையவனாகவும் துன்னியாவில் உண்டாவாகிய கடல்தண்ணீர் ஆற்றுத்தண்ணீர் குளத்துத் தண்ணீர் அடங்கலையும் அவன் வாயில் புகட்டினாலும் தாகம் தீரமாட்டாதே அப்பேர்ப்பட்ட தாகத்தையுடையவனாகவே அவன் இறப்பான் அறிந்துகொள்ளுங்கள் அவன் கபுறிலக்கிடைக்கு மென்னத்தக்கதாகிய வேதனைகளில் முந்தினதாவது அந்த கபுறுதானே அவனை வலது புறத்து விலாயெலும்பு இடது புறத்தில் வரும்படியாகவும் நெருக்கும் அந்த நெருக்குதலில் அவன் எலும்புகள் முளக்கடங்கலும் நெறந்து நெறுநெறனெ ஸப்திக்கும்படியாக வேதனைப்படுவான் இரண்டாவதாவது அவன் கபுறில் இரவு பகலடங்கலும் பெரியபெரிய கங்குகளாக நெருப்பு

கள் எரிந்து கொண்டேயிருக்கும் அதில் அவனைவிட்டு புரட்டுவார்கள் அதிலும் அவன் மட்டிலடங்காத வேதனைப்படுவான் அதில் மூன்றாவதாகிறது. ஒரு ஆங்காரமான பாம்பை அவன் கபுறின்பேரில் சாட்டப்பட்டும் அதின் பேராகிற ஸுஜாவுல அக்ரஹ் அதின் கண்ணாகிறது நெருப்பில் நின்றுமாக விருக்கும் அதின் நகங்களாகிறது இரும்பில் நின்றுமாக விருக்கும்.

அந்த நகங்களின் நீளமாகிறது ஒருநாள் வழித்தலை தூரவாக விருக்கும் அந்தப் பாம்பாகிறது மய்யித்துடனே பளக்கமென்னும் வார்த்தைகள் பேசும் கண்ணை புருட்டி பார்வையிட்டு கோடைகாலங்களில் இடிகள் முழங்கும் பரிசாகதாகிறது ஸுஜாவுல் அக்றஹ்வென்னும் பாம்பாகவிருக்குமென்று ஓர் சத்தம் போட்டதாக இரைந்து செல்லும் நீபோகிறவன் ஸுபுஹுத் தொழுகையைப் பழுதாக்கி விட்டாயே அதற்காக உன்னை பொழுது உதிக்கிறமட்டும் அடிக்கிறதற்கு என்னிடத்தில் அல்லாஹுத்த ஆலா ஏவியிருக்கிறானென்றும் இன்னம் முஹறுத் தொழுகையைப் பழுதாக்கி விட்டதுக்காக அஸ்றுவரையில் உன்னை அடிக்க ஏவியிருக்கிறானென்றும் அஸறுத் தொழுகையைப் பழுதாக்கி விட்டதுக்காக உன்னை மக்ரிபுவரை அடிக்க ஏவி இருக்கிறானென்றும் மக்ரிபை பழுதாக்கிவிட்டதுக்காக இஷாவரை உன்னை அடிக்கவும் ஏவியிருக்கிறானென்றும் இஷாவைப் பழுதாக்கி விட்டதற்காக பஜறெனும் ஸுபுஹுவரையில் உன்னை அல்லாஹுத்தஆலா என்னைக்கொண்டு அடிக்க ஏவியிருக்கிறானென்றும் சொல்லிக்கொண்டு தானே ஓர் அடி அடிக்கும் அந்த அடியால் அந்த தொழாதகேடன் பூமியில் எழுவது முழம் தாழ்ந்து விடுவான்.

இப்படியே கியாமம் வருமளவும் அந்தப் பாம்பாகிறது அடித்தும் கடித்தும் ஒரு நேரங்களும் இடைவிடாமல் ஓரேகடிசாவாகிய அதபாக அதாபுசெய்யுமென்றும் இன்னும் கபுரில் நின்றும் புறப்பட்ட நேரத்தில் உண்டாகும் அதாவது அவனை கியாமம் நிலைநிற்கும்போது கேள்வி கணக்குகள் கேழ்க்கிறதில் மெத்தகடிசான கேள்வியாகவும் இன்னம் நாயனுடைய கோபமும் அவனுடைய முனிவும் அடங்காத மட்டிடக் கூடாத விதத்தையுடைய சர்வ அதாபுகளிலும் மெத்த ஆபாரித்த அதாபுகள் அதுவேயாகவும் இன்னம் இந்த தொழாதவனை நரகலோகத்தின்கண்

ஊழி ஊழிகாலம் கடின அதாபாக அதாபுசெய்யப் பாத்தியப்பட்டவன் இவனே என்று நேமிதம்செய்து அந்நரகலோகத்தில் இவனைப் புகுதும்படியாக்ச் செய்து வைக்கிறதுமாக விருக்கும்.

## வேறே ஒரு ரிவாயத்து

திடனுக அந்தத் தொழுகையில்லாதவன் கியாமநாளில் அவன் முகத்தின்பேரில் மூன்றுவரி எழுதப்பட்டவனுக வருவான் அதில் முந்தின வரியில் எழுதும்வசனம் என்னவென்றுல் அல்லாவுடைய ஹக்கைப் பழுதாக்கினவனே என்றும் இரண்டாவதாகிய வரியில் அல்லாஹுதஆலாவுடைய கோபத்துக்குச் சொந்தமானவனே என்றும் மூன்ருவது வரியில் அல்லாஹுதஆலாவுடைய ஹக்கை துன்யாவில் பழுத்தாக்கினயே அதுபோல் இக்காலயில் அல்லாஹுதஆலாவுடைய றஹ்மத்தை விட்டும் நீயாகிறவன் நத்துதல் கெட்டவனுக யிருக்குமென்றும் எழுதப்பட்டிருக்குமென்று ரிவாயத்து வந்திருக்கிறது

## ரிவாயத்து

கஹன்ன மென்கிற நகரத்திலே ஓர் ஓடை உண்டாயிருக்கிறது அந்த ஓடைக்கு லம்லம் என்கிறதாக பேர் சொல்லப்படும் அதிலே மிகுந்த பாம்புகள் உண்டாயிருக்கிறது அந்தப் பாம்புகளின் கழுத்துகளாகிறது பெரிய ஒட்டகையுடைய கழுத்துகளைப்போலும் அதுகளின் நீளங்களாகிறது ஒரோர் மாதங்களுடைய வழிதூரம் உடையதாக ஆயிருக்கும் அந்தப் பாம்பாகிறது இந்தத் தொழுகையி ளந்தவனைக்கொட்டும் இதின் விஷமென்னும் நஞ்சாகிறது இவன் சரீரத்தில் எழுபது வருஷக்காலமாக கொதிப்புடனே ஏறும் பின்பு இவன் சரீரம் அடங்கலிலும் உண்டாவாகிய இறைச்சிகள் மாமிசங்கள் முழுவதும் இத்து இத்து விழுந்து விடும்.

## ரிவாயத்து

பனி இசுருயீலக் கிளையில் நின்றும் ஒருபெண் பிள்ளையானவள் மூஸாநபி அலைஹிஸ்ஸலாமவர்களிடம்வந்து அல்லாவுடைய நபியே நானுகிறவள் ஓர் வலுப்பமான பாவத்தைச் செய்துவிட்டேன் அதற்கு அல்லாஹுதஆலாவிடத்தில் தவுபாச் செய்தேன் தாங்களும் எனக்காக வேண்டி நாயனிடத்தில் துஆச்

செய்து என் தவுபாவை கபூல் செய்யும்படி யாகவும் என் பாவங் களைப் பொறுக்கும்படியாகவும் கேளுங்கள் என்று சொன்னாள்.

உடனே மூஸாநபி அலைஹிஸ்ஸலா மவர்கள் அவளிடம் நீ என்னபாவஞ் செய்தாய் சொல்லு என்றார்கள் நபி அல்லாவே நானுகிறவன் வினைச்செய்து ஒரு பிள்ளை பெற்றேன் அப்பிள் ளையை கொலைசெய்து விட்டேன் என்று சொன்னாள் உடனே மூஸாநபி அலைஹிஸ்ஸலாமவர்கள் உன்னைக் கறிக்கிறதுக்கு வான லோகத்தில் நின்றும் நெருப்பு இறங்கிறது எங்களையும் கறித்துப் போடும் இப்பேர்ப்பட்ட பாவத்தைச் செய்துகொண்டா இவ் விடம் வந்தாய் கெட்டவனே சீக்கிரம் புறப்பட்டுவிடு என்னு துரத்திவிட்டார்கள். அவள்.

கல்பு வருத்தப் பட்டவளாகவும் வியாகூலத்தை யுடையவ ளாகவும் புறப்பட்டுவிட்டாள் உடனே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் ஒஹிகொண்டு வந்தார்கள் முசாவே என்று கூப்பிட்டு வலுப்பமாகிய அல்லாஹுத்த ஆலா சொல்கிறாள் உம்மிடத்தி தவுபாச் செய்கிறதற்கு வந்த பெண்பிள்ளையை நீர் என் துரத்தி விட்டீர் அவளில் நின்றும் சர்ருகிய மெத்த தீங்காகிப பாவத்தை யுடையவர்களை நீர் காணவில்லையா என்று நாயன் தாங்கட்கு சொல்ல உத்தரவு செய்தானென்று ஒஹி அறிவித்தார்கள்.

உடனே மூஸா அலைஹிஸ்ஸலாம் அவள் பாவத்தைக் காண வும் கடுசானபாவம் வேறே எந்த பாவமாயிருக்கு ஜிபுரீலே என்று கேட்டார்கள். உடனே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சொல்லு வார்கள் யாராகிலும் ஒருவன் மனமுரண்டாகத் தொழுகையை விட்டுவிட்டானே அவனுடைய பாவம்தான் அதில் நின்று மகா கடிசானது என்றும் அறிவித்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

## ஹதீது

நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானதாக அஹ்மது றலியல்லாஹு அன்ஹு அவர்களும் இபுனுஹப்பான் றலி யல்லாஹு அன்ஹும் அவர்களும் வெளிப்படுத்தினார்கள். யாராகிலு மொருவன் தொழுகையைப் பேணுதலாகக் கொண்டு வந்தானேயானால் அவனுக்கு கியாமநாளிற் பிரகாச மென்னும் ஒளிவும் திட்டாந்தரமாகிய அத்தாட்சியும் இன்னம் ஈடேற்றமும் உண்டாயிருக்கிறதென்றும் யாராகிலுமொருவன் அதைப்பேணுத

லாகக்கொண்டு வரவில்லையானால் அவனின்பேரில் ஒளிவும் உண்டாயிருக்கமாட்டாது அவனுக்கு ஈடேற்றமும் உண்டாயிருக்க மாட்டாதென்றும் இன்னும் அவன் கியாமநாளில் ஆயிருப்பான் காறூனுடனேயும் பிரவூனுடனேயும் ஹாமானுடனேயும் உபய்யி புனுகலபுடனேயுமாக ஆயிருப்பானென்று நாயகம் திருவாய்மலர்ந்தருளினதாகச் சொன்னார்கள் ஆதலால் எனதன்பாகிய பிறவிகளே தொழுகையை விட்டுவிடாமல் நன்றாய்ப் பேணிக்கொள்ளுங்கள்.

## ஹதீது

முஸ்லிம் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அபூதாவூது றலியல்லாஹு அன்ஹு அவர்களும் திர்மதி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் இபுனு மாஜ்ஜா றலியல்லாகு அன்கு அவர்களும் ஜாபிறு றலியல்லாகு அன்குவைத் தொட்டும் சொன்னார்கள் மனிதனுடைய இடையிலும் குபிருடைய இடையிலும் (பறுலாகிறது) தொழுகையை விடுகிறதாக விருக்குமென்றும் இன்னம் திர்மதி றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள் குபிர்க்கிடையிலும் ஈமானுக்கிடையிலும் வித்தியாசமாகிறது தொழுகையை விடுகிறதாக விருக்குமென்றும் இன்னம் அபூதாவூது றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள் ஓரடியானுக் கிடையிலும் குபிருக் கிடையிலும் பறகுசெய்கிறதெல்லாம் தொழுகையை விடுகிறதாக இருக்குமென்றும் சொன்னார்கள்.

இன்னம் அஹ்மதும் திர்மதிறஹமகுல்லா அவர்களும் நசாயி அவர்களும் இபுனு மாஜஜா அவர்களும் இபனு ஹப்பான் அவர்களும் ஹாக்கிம்றலி யல்லாகு அன்கு அவர்களும் புறைத்தது றலியல்லாகு அன்கு அவர்களைத் தொட்டும் சொன்னார்கள் நபிநாயகம் திருவுளமானார்கள்.

நமக்கிடையிலும் அந்த காபிரீன்களுக் கிடையிலும் உறுமானமாகிறது தொழுகையாக விருக்கும் ஆராகிலும் ஒருவன் அதை விட்டுவிடுவானே யானால் திட்டமாக காபிராக விருக்குமென்று திருவுளமானார்கள் என்று சொன்னார்கள்.

## ஹதீது

தபுறூளிய்யி றலியல்லாஹு அன்ஹு அவர்கள், சொல்கிறார்கள் யாராகிலும் ஒருவன் மனமூரண்டாகத் தொழுகையைவிட்டு

விடுவானேயானால் அவனாகிறவன் பிரசங்கமாகக் காபிராக விருக்கும் இன்னும் ஓர் ரிவாயத்திலே அதற்கு அழகான ஸனதுண்டாயிருக்கிறது இஸகலாமுடைய பிடிகயிறும் இன்னம் இஸ்லாமுக்கு தூணாகிறதும் மூன்றாகவிருக்கும் இஸ்லாமை அதின் பேரில்தான் அடித்தளமிடப்பட்டதென்றும் அதில் நின்றும் ஒன்றைவிடப்பட்டதானால் அந்த விடப்பட்டவன் இதைக்கொண்டு தாபிறாக் விருக்கு அவனைக் கொள்கிறதும் ஹலால் ஆதில் முந்தினதாகிறது ஷஹாதத்து கலிமா இரண்டாவதாகிறது தொழுகை மூன்றாவதாவது பறுலான நோன்புமாக விருக்கும் என்கிறதாக வருகின்றன.

## வேறே ஒரு சனத்தாகிய சொல்லில்

மேல் கூறும் கருமம் மூன்றில் ஒன்றையாவது யாராகிலும் ஒருவன் விட்டுவிடுவானே யானால் அவனாகிறவன் அல்லாவின் பேரில் சத்தியமாக காபிறாகயிருக்கும் அவனில் பறுலாகிய அமல்கள் வேறே ஏதாகிலும் உண்டாயிருந்தாலும் சுன்னத்தாகிய அமல் ஏதாவது உண்டாயிருந்தாலும் அதுகளைக் கபூல் செய்யவே கூடாது என்றும் திடனாக அவனுடைய ரெத்தம் ஹலாலென்றும் அதின் பொருள் அவனைக் கொல்லலாம் என்றும் அவனுடைய முகல்களும் ஹலாவென்றும் அதின் முறாவது அவன் முதலைப் பறித்து எடுத்துக்கொள்கிறது ஹலாலென்றும்சொல்லப்படுகிறது.

திருமதியிற ஹுமஹுல்லா சொல்கிறார்கள் நபிநாயகம் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களின் அசுஹாபிமார்களா யிருந்தவர்கள் அமல்களில் நின்றும் ஒரு அமல்களையும் விட்டவர்களை குபீரென்று காணுகிறதில்லை தொழுகையே யொழியவென்றும் சொன்னதாகச் சொல்லுகிறார்கள்.

இபுனு அபீசைபாவும் காரிறலியல்லாஹு அன்ஹும் அலிறயல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் தாரீகென்ற கிதாபிலே சொல்லுகிறார்கள் ஒருவன் தொழுகவில்லையானால் அவன் காபிறாகவருக்குமென்றும் இன்னம் முஹம்மதிபுனு நசறு றலியல்லாஹு அன்ஹு இபுனுபு அப்துல் பாறு றலியல்லாஹு அன்ஹுயவர்களும் ஜாபிறு றலியல்லாஹு அன்ஹுவைத் தொட்டும் சொல்கிறார்கள். நாயகம் திருவுனமானதாக யாராகிலும் ஒருவன் தொழுகவில்லை யானால் அவனாகிறவன் காபிறென்று முன் சொன்னதுபோலே அவர்களும் சொல்லுகிறார்கள்.

## ஹதீது

முஹம்மதிபுனு நசறு சொல்லுகிறார்கள் இசஹாக்கிபுனுறாக வைகி றலியல்லாஹு அன்ஹுவர்களிடத்தில் நான் கேட்டேன் ஸஹ்ஹாக நபிசல்லல்லாஹு அலைகிவசல்மைவர்களைத் தொட்டும் ஹதீதுவந்து விட்டது திட்டவட்டமாக தொழுகையை விட்டுவிட்டானே அவனாகிறவன் காபிறாக விருக்குமென்றும் இன்னம் இபனுஹஸ்மு றலியல்லாகு அன்ஹு சொல்லுகிறார்கள் திடனாக உமது கத்தாபு றலியல்லாஹு அன்ஹுவர்களைத் தொட்டும் நாயகம் திருவாய் மலர்ந்தருளினதாக ஹதீது வந்துவிட்டது.

யாராகிலு மொருவன் ஒரு ஒகுத்துத் தொழுகையை அதினுடைய ஒகுத்து புறப்படுகிறவரையிலும் விட்டுவிட்டானேயானால் அவனாகிறவன் காபிறாக விருக்குமென்றும் இன்னும் முறுத்தத் தென்றும் சொல்லப்பட் டிருக்கிறது.

அல்லாஹுத்த ஆலா நம்மனைவர்களையும் தொழுகையில் ஒரு ஒகுத்தையாவது விட்டுவிடாதவர்கள் கூட்டத்தில் சேர்த்து இரக்ஷிப்பானாகவும் ஆமீன்.

## தம்பீஹு என்னும் உணர்ச்சிபடுத்தல்

நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் அன்ஹாபிமார்களில் நின்றும் சில வலுப்பமாகிய அஸ்ஹாபிமார்களும் இன்னும் தாபியீன்களில் நின்றும் சிறிதுபேர்களும் இன்னும் அவர்களுக்கு பின்னாலே உண்டானவர்களில் சில பேர்களும் தீர்மானித்திருக்கிறார்கள் தொழுகையை விட்டவன் காபிறென்றும் அவன் ரெத்தத்தை ஓட்டிவைக்கிறது ஹலாலென்றும் அதின் முறுது அவனைக் கொல்லுகிறது ஆகுமென்றும் தீர்மானமாகச் சொன்னார்கள் அவர்களில் நின்றும் (உமறிபுனு கத்தாபு) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (இபுனு மஸ்ஊது) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (அப்துர் றகுமானிபுனு அவ்பு) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (மஆதிபுனுஜெபல்) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அபூகுறைறா றலியல்லாஹு அன்ஹு அவர்களும் அபுத்தறுதா றலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் அஜாபிறிபுனு அப்துல்லா றலியல்லாஹு அஹ்ஹுவர்களும் இன்னும் அஸ்ஹாபிமார் அல்லாத்தவர்கள் இமான்களில் நின்றும் (அஹ்மதிபுனுஹம்பல்) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (இஸ்ஹாகிபுனுறாஹவைகி றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (அப்துல்லா

இபுனுல் முபறாக்) றலியல்லாகு அன்ஹு அவர்களும் (நபவிய்யி) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (ஹாக்கிமிபுனு உமைய்னா) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (அய்யூபுஸ்ஸகீத்தானிப்பி.) றலியல்லாஹு அன்ஹு அவர்களும் [அபூதாவூதுத்தயாலிஸிய்யி] றலியல்லாஹு அன்ஹு அவர்களும் (அபூபக்கரிபுனு அபிசைபா றலியல்லாகு அன்கு அவர்களும் ஓஸஹீரிபுனுஹ்றுபு ஹலியல்லாஹு அன்ஹு அவர்களும் [இபுனுஹ்றபீபு] றலியல்லாஹு அன்ஹு அவர்களும் தொழுகையை விட்டவனை திடனாக காபிரென்று சொன்னார்கள்.

இன்னும் ஷாபியிய்யி இமாம் றலியல்லாஹு அன்ஹு அவர்களும் வேறே சிலரும் சொன்னார்கள். தொழுகையை விடுகிறதை ஹலா:ல் என்றானே யானாலும் அல்லது வாஜிபை அல்லத் தட்டினானே யானாலும் அவன் திடனாக காபிறென்றும், அவனை கொல்லலாமென்றும், இன்னும் ஜெய்வுடைய ஒருத்து பிறப்படமட்டும் ஒரு தொழுகையை விடுவானே யானால் வாளைக்கொண்டு அவன் கழுத்தை வெட்டலாமென்றும் இன்னும் அவனை றவுபாச்செய்யச் சொன்னால் அவன் தவுபாச் செய்ய வில்லையானால் [கீல்] இவ்விதம் சொல்லப்படுகிறது முழுக்கை இறுக்காதவனை அடிக்கிறது போல் ஆசாவைக்கொண்டு அடிக்க வேண்டுமென்றும் இன்னும் ஒரு சொல்லில் இரும்பினாலே உண்டாவாகிய சீப்புகளைக் கொண்டும் அவன் சரீரத்தைச் சீவிச்சீவி வேதனைசெய்ய வேண்டுமென்றும் அவன் தொழுகிறவரை யப்படிச் செய்யவும் தொழவில்லையானால் அவன் மவுத்தாகிறவரை அப்படியே சீவி அவனைக் கொல்லலாகு மென்றும் சொல்லப்படுகிறது.

இன்னம் கஸ்ஸாலி இமாம் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள். ஒருவன் அல்லாஹுத்த ஆலாவுக்கும் அவனுக்கு இடையில் ஓர் ஹால் உண்டாயிருக்கிறது. ஆதலா லவனை விட்டும் தொழுகை வந்துவிட்டதுஎன்று சொல்லுவானேயானால் உடனே அவனைக் கொல்லுகிறதற்கு யாதொரு சக்கில்லை அவனைப் போல் உண்டானவனைக் கொல்லுகிறது நூறுகாபிறைக் கொல்லுகிறதைக் காணவும் மெத்த வரிசையானதாக விருக்குமென்று சொன்னார்கள்.

அஹமதி புனுஹம்பல் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள் தொழுகையில்லாதவனுடைய நிர்காஹு வஹ்ஹதாகத்

TAMIL NADU ARCHIVES EGMORE, MADRAS 14231

மாட்டாது இன்னம் நம்முடைய மதுஹபுகளில் தொழுகையை விட்ட பெண் பிள்ளைகளை நிகாஹூ செய்கிறதைக் காணவும் திம்மிக்காபிர்ப் பெண்ணை நிகாஹூ செய்து கொள்கிறது மெத்தவும் ஏத்தமாக விருக்குமென்று சொல்லுகிறார்கள். ஆதலால் பேணிக் கொள்ளவும்.

## இஸ்திக்பாறு

அஸ்தக்பிறுல்லா ஹல்அலீம் (3) தரம் அல்க்கரீம் அல்க்கதீம் அர்றஹீம் அல்லதீலா இலாஹ இல்லல்லாஹூ வல்ஹயயுல்கய்யூம் மின்குல்லி தன்பன் வகத்தீயத்தின் ஓஅத்தூபு இலைஹிஓ அல் அலுஹூத்பவுபா அல்லாஹூம்ம அந்தஸ்ஸலாம் ஓமின்க ஸ்ஸலாம் இதுலைக்க எறுஜி உஸ்ஸலாம் ஹையினாறப்பனாபிஸ்சலாம் ஓஅத்கிலனா மஅஹூம்பிறஹூமத் திரக தாறஸ்சலாம் தபாறக்த றப்பனா ஓத்தஆலைத் தாயாதல் ஜாலிஓல் இக்றாம் லாஇலாஹ இல்லல்லாஹூ வஹூதஹூலா ஷாக்கலஹூ லஹூல் முல்க்கு ஓலஹூல்ஹம்துயுஹயீஓயுமீத்து பியதிஹில்கைறு ஓஹூவ அலாக்குல்லிஷையின்கதீறு என்று இந்தக் கலிமாவை பத்துவிடுத்தம் சொல்லுகிறது பிறகு ஓபிலைகில்மசிற்ஹூலல் அவ்வலுஓல் ஆகிறு ஓல்லாஹிறு ஓல்பாத்தினு ஓஹூவபிகுல்லிஷையின் அலீம்லைஸகமித்லி இஷைவுன் ஓஹூவன்சமீவுள்பசீறுஹூல் புனல்லாஹூ நிஃமவகீல நிஃமல்மவுலா ஓனிஃம் மன்னசீறு அல்லாஹூம்மசல்லி உலாசெய்யிதினா முஹம்மதின்ஓஅலா ஆலிமுஹம்மது ஓபாரிக் ஓசல்லிம் அலைஹிவனல்லிம் அலாஜமீஇல் அன்தயாரு ஓள்முற்சலீன் ஓஅலாமலாயிக்கத்திக்கல் முகர் றபீன் ஓஅலா இபாதிக்கஸ்சாலிஹின் ஓஅலா அஹிலித்தா அத்திக்க அஜ்மயீன் ஓற்ஹிம்னா அஹூ பிறஹ்மத்திக்கயா அற்ஹமர்றாஹிமீன் என்று ஓதி ஆயத்துல்க் குறுசையும் ஓதி பின்பு இலாஹீ ஸூபுஹானல்லா என்று [33] விடுத்தம் ஹல்அலிய்பில் அலீம் அல் ஹம்துலில்லாஹி என்று [33] விடுத்தம் அலாநீனில் இசுலாம் அல்லாஹூ அக்பர் என்று [33] விடுத்தம் சொல்லி அலலாஹூ அக்பறுக்கபீறா வல்ஹம்துலில்லாக் கதிறா வஸூபுஹானல்லாஹி வபிஹம்திஹ் புக்றத்தன்வஅஸீலா லாஇயிலாஹ இல்லல்லாஹூ வஹ்தஹூலாஷரீக்கலஹூ லஹூமுல்க்கு வலகுல் அமது யுஹயீ வயூமீத்துவஹூவ அலாகுல்லிஷையின்கதிறு அல்லாகுமம லாமானி அலிமா அஃத்தைத்த வலாமுஃத்தியலிமாம னஃத்த வலாறத்த லிமாக்கலைத்தவலாமுபத்தில் லிமாஹக்கம்த வலாயன்பவுதல் ஜத்திமின் ஜித்துபஃலம அன்னஹூ அபுலலு திக்ரி.

லாஇலாஹ இல்லல்லாஹு என்று பத்துவிடுத்தம் சொல்லு கிறது பிறகு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்றசூ லுல் லாஹிஒஅலாஹாதிகிஸ்சகாத்திநக்பா அலைஹாநமுத்து ஒஅலைஹ நாப் அது எவுமல்கியாமத்தி இன்சா அல்லாஹுத்தஆலா அல்லாஹும்மசல்லி அலாசெய்யிதினா முஹம்மதின் செய்யிதில் அவ்வலீன் அல்லாஹும்மசல்லி அலாசெய்யிதினா முஹம்மதின் செய்யிதில் ஆக்ரீன் அல்லாஹும்மசல்லி அலாசெய்யிதினா முஹம்மதின் செய்யிதில் அஹலிஸ்சமாவாத்தி ஒல் அற்லி அஜ்மயீன் அல்லாஹும்மசல்லி அலாசெய்யிதினாமுஹம்மதின்ஒ அலா ஆலி முஹம்மது ஜஸல்லாஹு அன்னாநபிய்யினாமுஹம்மதின் சல்லல் லாகு அலைஹிவசல்லம் பிமாஹுவ அஹ்லுஹு அல்லாஹும்மற்ல அன்சாதாத்தினா அபீபக்ரினிஸ்சித்தீகித்தகிய்யி ஒஉமறுல்பாறூ கின்னகிப்யிஒ உதுமானதின்னூறைனிஸ்ரகிய்யி ஒஅலிய்யினில் முற்த்தலல்ஒபிய்யி ஒஅனிசித்தத்தில்பாகீன் ஒஅனில் அசனிஒல் ஹுசைனி ஒஅன்ஹம்ஸத்தஒல் ஒப்பாசுஒஅனில் முஹாஜிரீன் ஒல்அன்சாற் ஒஅசுஹாபி றசூலில்லாஹி அஜ்மயீன்.

## ஸலவாத்து

அல்லாஹும்மசல்லி அலல்மூஸ்த்தபா ஹபீபில்லாஹி முஹ ம்மதின் அப்திக்க ஒறசூலிக்கந்நபிய்யில் உம்மிய்யிஒ அலா ஆலிஹி ஒசஹ்பிஹிஒசல்லம் என்று பத்துவிடுத்தம் ஓதுகிறது.

ஒசல்லி அலாஜமீயில் அன்பியாயி ஒல்முற்சலீன் ஒஅலா மலாயிக்கத்தில் முகர்றபீன் ஒஅலாஇ பாதிக்கஸ்சாலிஹீன் ஒஅலாஅஹ்லித்தா அத்திக்க அஜ்மயீன் ஒற்ஹம்னா மஅஹும் பிறஹ்மத்திக்கயா அற்ஹமர்றாஹிமீன் என்று ஓதி பிறகுஇருகையு மேந்திலக்கல்ஹம்துயாறப்பியா அல்லாஹுயா அல்லாஹுயா றஹ்மானயாறஹ்மான் யாறஹீம் அல்அமான் அல்அமான் மிஅசாவில்ஈமான் யாதாயிமல்குறாபியாகதீமல் இக்ஸான்யாஹா தியல் முசல்லீன் இஹதினல இக்லாபிஹக்கி இய்யாக்கநஃபுது வஇய்யாக நஸ்த்தயீன் என்று இந்ததுவாவை மூன்றுவிடுத்தம் ஓதிமுகத்தில் தடவிக்கொண்டு (பாத்திஹாவு) மூன்று சூறத்தும் ஓதி துஆ ஓதுகிறது.

## சுபுஹுத் துஆ

அல்லாஹும்மசல்லிஒசல்லிம் அலாறசூலிக்கசெய்யிதினா முஹம் மதின் ஒஅலா ஆதிமுகம்மது அல்லாகும்மஜ் அல்சபா ஹனாஹா

தாசபாஹூன் முபாறக்கன் மினல்ஸகரிகரீபன்ஒ அனிஸ்சர்றிபகிதன் லாகாசிஅன் ஒலாமகுறாமா அல்லாஹும்மஜ அல் அவ்வல் எவு பணுஹூதாலணுசவாஹுன்ஒ அவுசத்தஹு பாலாஹ்றன் ஒஆகிற ஹுநஜா ஹுன்ஒறபாஹூ அல்லாகும்ம சப்பிஹ்றுமின்கசபாஹுர் றிலா ஒக்பிணுசர்றமாபில்கலா ஒலாத்து அத்திப்ணுபில்ஜரூயிமிபாக் கரீம் அல்லாஹும்மயாமன் அன்லஹ்ஸ்ஸாவிஹீன் அக்லிணுஒயா மன் அன்பகல்காபிலீன் அன்பிக்ணுஒயாமன்த்தாப அயுல்முதுனி பீன் துப்பஅலேரூதவுபத்தன் தற்லிக்க அன்ணுயாசெய்யிதிணு ஒயாமவுலாணுயாதல் ஜலாலிஒல் இக்றூம் அல்லாஹும்மஜ அல்ச பாஹுணுஹ்ரதாசபா ஹுஸ்ஹுாலிஹீன் ஒமசாஅணு ஒமசாஅததா தீரின் ஒகுலூபுணுஒகுலூ பல்கரசியீன் ஒஅப்தானணு ஒஇப்தான முத்யீன் ஒஅஃமாலணுஅஃமாலல் முத்தகீன் ஒஅல்சினத்தணு ஒஅல்சினத்ததாக் கீரின்ஒனப்பிக்ணுஅன்னவு மததில் காபிலீன் ஒசாரிக்ணு பீதுவாயிஸசாலிகீன்ஒற்சுக்னல் ஜென்னத்த யாறபபல் ஆலமீன் ஒசல்லல்லாஹு ஒசல்லம் அலாகைரிகல்க்கிஹி செய்யி திணுமுஹம்மதின் ஒஆலிஹி ஒசஹ்பிஹி அஜ்மயீன்.

## லுஹறுதுஆ

அல்லாஹும்ம யாமுகல்விபல்குலூபு தப்த்குலூபணு அலா தீனிக்க ஒத்தா அத்திக்க ஒசமானிக்க யாஅல்லா அல்லாஹுமக்த் துப்லிக்குல்லிவாஹி தின்மின்ணுபரூ அததன்மினன்றூற்ஒ அமா னன்மினல் அதாபி ஒஜவாசன் அலஸ்சிறூத்தி ஒனசீபஅமினல்ஜெ ன்னத்தி ஒனஜாத்பின் மின்னணுற் ஒல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் (ஒசல்லல்லாஹு) ஒடுக்கம்வரையில் ஒதிக்கொள்ளவும்.

## அசறுதுஆ

அல்லாஹும்மயின்ணு நஸ்அலுக்க சலாமத்தன் பித்தீனி ஒத் துன்யாஒஆபியத்தன்பில்ஜஸதி ஒசியாறத்தன்பில் இல்பிஒல் ஹுதா ஒபறக்கத்தன் கர்ரிஸ்கி ஒசிஹ்ஹத்தன் பில்அக்லி இலாஹீ தவுபத்தன் கப்லல்பவுத்து ஒரூஹத்தன் இன்னல்மவு த்தி ஒமகுபிறத்தன் பஃதல்மவுத்தியாசாமிஅக் குல்லிஸவுத்தின் ஹவ்வின அலேணுசத்ரூத்தில் மவுத்தி ஒசல்லல்லாஹு ஒசல்லம் முடிவுவரையில் ஓதுகிறது.

## மக்ரிபுதுஅ

அல்லாஹும்ம இன்ணு அம்கைணுமின்க்கபீ னிஅமத்தின் ஒஆபியத்தின் ஒசித்தின் பஅத்திம்ம ரிகுமந்தக்க அலேணுஒ ஆபி யத்தக்க ஒசித்றர்கபித் ஒத்துன்யாஒல் ஆகிறத்தி இன்னக்க அலால்குல்லிஷையின் கதிறு அல்லாஹும்ம அஜிர்ணுமினன்ணுற்

[7] விடுத்தம் சொல்லி ஸாலிமீனென்றோதி சலவாத்தில் முடிக்கவும்.

## இஷாதுஅ

அல்லாஹும் மஹபஹுனு பூஹுல் மதநல்லிலிகமா ஹபஹுத்தனுபீலெவ்ஹின்ன ண்ரற்ஜஸ்ரீப் அன்னுபலஹல்லிலிகமாஸறப்த்த அன்னுபலா அன்னஹாற் ஒவலிசுறுனுமஅல் அப்றூற்ஸல்லாஹு அலாசெய்யிதினு முஹம்மதியின் ஒஆலிஹ ஒளஸுபிஹீ அஜ்மயீன் ஆமீன்.

ஆனுல் இந்த துஆக்களில் சுபுஹுடைய துஆவை அதினமாக எழுதி மற்ற துஆக்களை மனிதர் யடைவார்களென்று சுருக்கப்பட்டது இன்னம் தெரிந்த துஆக்களைச் சேர்த்தோதிக் கொள்ளலாம்.

## கஸ்றுத்தொழுகையின் விபரம்

பறுலாகிய நாலுறக்அத்துத் தொழுகையை கசறு செய்து இரண்டு றக்அத்தாகத் தொழுவதற்கு இயைந்த சறுத்துகள் எட்டு அதில் [1] ஆவது சபறுபோறவன் தான் நாடிப்போகிற ஊர்புறப்படுகிற ஊரில் நின்றும் ஆசீப் மயில் நாற்பத்தெட்டு நாழிகைத்தூர மிருக்காவண்டும். [2] வது போகிற ஊரைப்புறப்பட முதலே குறித்துக்கொள்ளவேணும் [3] வது பாவம் ஏற்படாத சப்ருகப்போகவேணும் [4] வது சப்றிடத்தில் ரேப்பமாகத் தொழுகிறவனை துடர்ந்து தொழுகாலமாக வேணும் [5] வது முஸாபிறோ முகீமோவெனச் சந்தேகமா யிருப்பவனைத் தொடர்ந்து தொழாதிருக்கவேணும் [6] வது தொழுமிடத்தில் அவ்வல் தக்பீறில் கஸறென்று நிய்யத்து வைக்கவேணும் [7] வது நிய்யத்தை பேதமாக்குகிறதை விட்டும் பேணிக்கொள்ளவேணும் [8] வது கஸறுத்தொழ ஆகுமென்கிறதை அறிந்தவனுக இருக்கவேணும்.

## ஜெம் ஆகத்தொழுகிறவகை

சபரிடத்தில் ளுஹறையும் அஸ்றையும் ஜெர்வுசெய்து முந்தின ஒக்த்திலாவது பிந்தின ஒக்த்திலாவது இரண்டு ஒகுத்துத் தொழுகையை ஒரு ஒக்த்தில் தொழுகிறது அதில் முந்தின ஒக்த்தில் ஜெம்வு செய்கிறதற்கு சறுத்துக்கள் 3. [1] வது முந்தின ஒக்த்துத் தொழுகையை முற்படத் தொழுகிறது [2] வது அந்தத் தொழுகையை ரேப்பமாக முதலே பிந்தின ஒகுத்துத் தொழுகையை ஜெம்வு செய்கிறேன். என்று நிய்யத்து வைக்கிறது [3] வது பிந்தின தொழுகைக்கு இஹ்றாம தக்பீறகட்டி முடிகிறவரைக்கும் துடர்வு பற்றிக்கொள்ளுகிறது.

இனி பிந்தின ஒக்த்தில் ஜெம்வு செய்கிறதற்கு சறுத்துக்கள் இரண்டு [1] வது முந்தின நேரம் கலாவாக முதலே அந்த ஒக்த்துத் தொழுகையை தத்தின ஒக்த்தில் ஜெம்வு செய்துகொள்ளுகிறதாக நிய்யத்து செய்து கொள்ளுகிறது [2] வது இரண்டாம் தொழுகை தொழுது தீருமளவும் சபரில் தரிபாடாக யிருக்கிறது ஆகையால் சப்றுளருக்கு ஹனபியில் ஜெம்வு ஆகாது ஷாபியில் கசறும் ஜெவும் தொழ தருமானதாக விருக்கும்.

## சப்றுதரிபடுதலும் நீங்கலும்

ஒருவன் தானிருந்து எழுந்து ஊ எல்கையை கழித்ததின் பின்னாலே சப்றுதரிபாடாயிற்று மீண்டு தன்னுடைய ஊர் எல்கையில் வந்தாலும் போகுப்பொழுது ஒரி ஊரில் தரிபடுடுறதை நிய்யத்துசெய்தாலும் அல்லது ம்பானநாளும் புறப்படுகிற நாளும் தவிர நாலுநாள் ஒரு ஊரில் தரிபடுகிறதை நிய்யத்து செய்தாலும் சபர் நீங்கிற்று இனி தன்னுடைய ஹாஜத்துக்காகவேண்டி ஒரு ஊரில் குறைந்த நாளைக்கொண்டு தரிபட்டதில் நிறைவேறுமை யாய் வேளை அடங்கலிலு நிறைவேறும் என்கிறதை ஆதரவுவைத்தால் பதினெட்டு நாள் வரையும் கசறுமெ்ஜவு தொழுவான் இதற்கு தக்பீறு கட்டுகிறது.

உசல்லீபறுலல் லுஹிரிகசுறன் லில்லாஹ அல்லாஹு அக்பர் அஸ்றுக்கும் இஷாவுக்கும் இதுபோலவே அந்தந்த ஒகுத்தை சொல்லி கட்டுகிறது கசறுசெம்ஜ ஆக முந்தின ஒகுந்துக்கு உசல்லி பற்லல் லுஹரிகசுறன் ஒசெம் அன்மஅல் அஸ்ரிலில்லாஹி அல்லாஹு அக்கற் பிந்தின ஒகுத்துக்கும் மற்ற இரண்டு ஒகுத்துக்கும் அந்தந்த ஒகுத்தைச் சொல்லி கட்கிறதாக விருக்கும்.

## ஜும்ஆத் தொழுகையின் விபரம்

ஜும்ஆத் தொழுகை நிரப்பமாகிறதற்குரிய சறுத்துகள் ஆறு 1-வது பாலுகாய் ஆக்கிலாய் முஸ்லிமாய் நாட்டார் மகனும் செவிடில்லாதவனுய் ஜும்ஆத் தொழுகிற ஊரிலுள்ள ஆண்பிள்ளைகளாக நாற்பது பேர் கூடவேணும் 2-வது குப்தா ஒதுகிறதும் தொழுகிறதும் அந்த ஊர் எல்லைக்குள்ளாக வேணும் 3-வது ஒதலும் வணக்கமும் லுஹறு ஒகுத்திலாகவேணும் 4-வது இரண்டு குப்தா ஒதவேணும் 5-வது குப்தாக்கள ஒதித்தீர்ந்ததின் பின்னாலே தொழுகவேணும் 6-வது ஜெமாஅத்துடனே முந்தின றக்அத்தில் தொழுகிறதுமாம் இந்தத் தொழுகைக்கு நாற்பது பெயர் வேணுமென்று குறிப்பு கொண்டமையால் இவர்களுக்கு பின்னாலே எண்ணப்படலாகாதார் தக்பீர் கட்டவேண்டும்.

குத்பாவில் புலுறு ஐந்து 1-வது அவ்வலில் அல்ஹம்துலில்லாஹி என்று அல்லாஹுத்த ஆலாவைப் புகழுகிறதும் 2-வது

சல்லல்லாஹு அலாமுகம்மதின் என்று ஸலவாத்துச் சொல்கிறது 3-வது ஒசியத்து சொல்கிறதும் பறுலாகிய இந்த மூன்று மொழிகளும் இரண்டு குத்பாவிலும் மொழிகிறது பறுலுகளாம் 4-வது இரண்டாவொரு குத்பாவில் ஒரு ஆயத்து ஓதுகிறதும் 5-வது பிந்தின குத்பாவில் முவுமீன்களுக்கு ஆகிறதைக் கொண்டு துவாக்கேழ்க்கிறதுமாம் இனி குத்பாவுக்கு சறுத்துக்கள் [எட்டு] 1-வது பெருந்துகடக்கு சிறு துடக்கி இரண்டினையும் நீக்கிக் கொள்கிறதும் 2-வது நஜிசை விலகிக்கொள்கிறதும் 3-வது அபத்தை மறைத்துக்கொள்ளுகிறதும் 4-வது சக்தியுள்ளவரானல் நிலையில் நின்று ஒதுகிறதும் 5-வது அறபுப் பாஷையாலே ஓதுகிறதும் 6-வது இரண்டு குத்பாவுக்கிடையிலே சற்றே தரிப்பட்டிருக்கிறதும் 7-வது குப்பாவின் பறுலுகளை யெல்லாம் நிறைவேற அந்த நாற்பதும் கேட்டுக்கொண்டிருக்கிறது 8-வது இரண்டு குத்பாவுக்கும் அதன் பறுலுக்குந் தொழுகைக்கும் தாமதியாமல் துடர்பு பற்றிக் கொள்ளுகிறதுமாம் இதற்குத் தக்பீறு கட்டுகிறது.

உசல்லி பறுலல்ஜுமுஆ அத்திறக் அத்தைனிலில்லாஹி மவுமூமன் அல்லாஹு அக்பர்

திலாவத்துஸஜதா குறுஆன் ஓதுகிறபோது ஸஜதாவந்தால் அஸ்ஜுதுஸஜகத்தன் லித்திலாவத்தில் குறுஆனில்லாஹி அல்லாஹு அக்பர் என்று தக்பீறுகட்டி ஸுஜூதிற் போகிறபோதும் தொழுகையி னிலையில் ஓதுகிறபோதும் ஸஜதாவந்தால் நிலையை விட்டு ஸுஜூதிலாயி கிடக்கிறபோதும் ஓதுகிறதாகிறது.

அல்லாஹும்ம லகஸஜதத்து ஒபிக்க ஆமந்து ஒலக்கஅச்லம்து அந்த றப்பிஸஜதத்து ஒஜ்ஹியில்லதீ கலக்கஹு ஒஸவ்வறஹு ஒசக்கசம்அ ஹு ஒபசர்றஹு பீகவுலிஹீ ஒகுவ்வத்திஹீபத்கபாறக் கல்லாஹு அஹ்சனுல்காலிகீன் அல்லாஹு றப்பில் ஆலமீன்

## தருவீஹுத் தொழுகை தக்பீர் கட்டமுதலே

அஸ்சலாத்து ஜாமிஆ றஹமக்கு மூல்லாஅல்லா ஹும்ம சல்லி அலாசெய்யிதினா முஹம்மதின் ஒஅலா ஆலிமுஹம்மதினில் பதுறு அல்லாஹும்ம சல்லி அலாசெய்திஞ முஹம்மதின்ஒஅலா ஆலிமுஹம்மது சல்லல்லாஹு அலைக்கயாறசூலுல்லா அல்லாஹும்மசல்லி ஒசல்லிம் அலைஹிலாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்று சொல்லிவிட்டு (தக்பீற் கட்டுகிறது)

உசல்லிசுன்னத் தத்தருவீஹி றக்அதைனி லில்லாஹி அல்லாஹு அக்பர்

என்று தக்பீற்கட்டி முந்தின சலாத் தொழுது பிறகு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்று சொல்

லுகிறது இரண்டாம் சலாம் தொழுத பிறகு சல்னா அலன்ன பிப்
யில் முஸ்ஸத்தபா முஹம்மதின் ஒறுஸ்லி அல்லாஹும்ம சல்லி
அலா செய்யிதினா முஹம்மதின் ஒ அலா ஆலி முஹம்மது ஆமீரில்
முவுமனீன் அபீபக்ரினிஸ சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு சல்
லல்லாஹு அலைக்கயாறஸூலுல்லா அல்லாஹும்ம சல்லிஒசல்லிம்
அலைஹியென்றும் அவ்வல்கலிமாவுஞ் சொல்லிக்கொள்ளுகிறது.
மற்ற ஒவ்வொரு சலாம்தொழுக முடிவில் ஒன்றிற்குகலிமாவும்
ஒன்றிற்கு சலவாத்தும் அந்த சலவாத்துடனே ஒவ்வொரு திரு
நாமமாக அமீரில்முடிவுமின் அபூபக்ரினிஸ் சித்தீக்கென்றும் உமரி
புனில் கத்தாபென்றும் உதுமானிபுனு அப்பானென்றும் அலுல்யி
புனி அபீத்தாலிபென்றும் அங்ஙனம் அதன் முறைபோல ஒன்
பது சலா முடிவிலுஞ் சொல்லிக்கொள்ளுகிறது [பத்தாவதுஸ்லா
முடிவில் சுபுஹ்ஹானல்லாக்கலிமாமூன்றுவிடுத்தம் ஓதுகிறது.] இது
ஒரு இமாமைத்தொடர்ந்து தொழுதாலும் அவர் சொல்லும் சல
வாத்துக்கு பிறத்திபோலாகவும் மற்றவர்களும் சொல்லுகிறதாக
விருக்கும் இனி பதினாறும் இரவு முதலாய் சலவாத்துடனே
அல்லாஹும்ம இன்னக்க அபுவுன்துஹிப்புல் அபுவபகுபு அன்
னாயாக்கரீம் யாறஹீம்யா அல்லாபதுலன்மினல்லாஹி ஒங்குமாஒ
மகுபிறத்தன் ஒறஹ்மாஒஆபியத்தன் ஒசலாமா ஒனஸ்த்தக்பிறு
ஒல்லானஸ் அலிக்கல்ஜென்னா ஒனஊதுபிக்க மின்னனார் என்று
யிந்த (துவாவையும்) ஓதிக்கொள்ளுகிறது இதில். கலிமாவும்
ஸலவாத்துஞ் சொல்லுகிறது வழக்கத்தாலென்றறிக.

## வித்றுக்குதக்பீறு

உசல்லி சலாத்தன் வித்ரிறக் அத்தைனி லில்லாகித்தஆலா
அல்லாஹு அக்பற் என்று தக்பீறுகட்டி முந்தினறக் ஆத்தில்
பாத்திஹாவும் ஸப்பிஹிஸ்மறப்பிக்க யெங்குற சூறத்தும் இரண்
டாம் றக்ஆத்தில் பாத்திஹாவும் குல்யாஅய்யு ஹல்காபிறூன
யென்கிற சூறத்தும் ஓதித்தொழுத, பிறகு அவ்வற்கலிமா
சொல்லுகிறது உசல்லி கன்னத்தல் வித்ரி றக்ஆத்தன் லில்லா
ஹித்தஆல அல்லாஹு அக்பர்•என்று தக்பீர்கட்டி பாத்தியாவும்
ஓதி குல்ஹுவல்லாஹும்குல் அவூதுபிறப்பில் பலக்கும் பிறப்
பின்னாசும் ஓதி, ஒரு றக் ஆத்துமட்டுந் தொழுகிறதில் இஹத்தித்
தால் நிலையில் பதினாறும் இரவுமுதலாக சுபுக்கு ஓதிறகுனூத்வு
அதற்கு மின்னுள்ள துவாவுமாக ஓதித்தொழுது தீர்ந்தபிறகு சுபு
ஹானல் மலிக்கில் குத்தூஸ் என்று மூன்று விடுத்தம் வித்றுத்
தொழுகிற போதெல்லாம் சொல்லுகிறது. விதறுத்தொழுகை
குனூத்தல்லாமல் எல்லா நாளும் இஷாத்தொழுகைக்குப் பின்
னாலே தொழுகிறது-சுன்னத்தாம்.

## (பெருநாள் தொழுகை)

## நோன்புப்பெருநாளைக்குகட்டுகிறதக்பீறு

உஸல்லி சுன்னத்தல் ஈதில்பித் ரிறக் ஆத்தைனி லில்லாஹி அல்லாஹுஅக்பர் ஹச்சுப் பெருநாளைக்குத் தக்பீறு உசல்லி சுன்னத்தல் ஈதில் அலுஹா றத்ஆத்தைனி லில்லாஹி அல்லாகு அக்பர் என்று தக்பீற்கட்ட முதல் றக்ஆத்தில் ஐந்து விடுத்தம் கைவிட்டுவிட்டுத் தக்பீறுகட்டுகிறது ஒவ்வொரு விடுத்தமும் சுபுஹானல்லா கலிமா ஓதிக்கொண்டு பின்னுமேல முதற்றக் ஆத்தில் பாத்திஹாவும்காபுயென்கிற சூறத்தும் மதுறக்ஆத்தில்பாத்திஹாவும் இக்கறபத் என்கிற சூறத்தும் ஓதித்தொழுகிறது (சப்பிஹிஸ்மறப்பிக்கல் ஹல்அத்தாக்க யென்கிற இந்த இரண்டு சூறத்தாவது இரண்டு றக்ஆத்திலும் ஓதவும் ஆகும் இவ்விதம் இரண்டு பெருநாள் தொழுகைக்கு மென்றுகொள்க மற்றுமுள்ள சுன்னத்தாகிய தொழுகைகளும் அது அதற்கு ஓதலாகிய முறைகளும் எழுத்துகளாலுந் தெரிந்தவர்களாலும் படித்தறிந்து கொள்ள வேண்டுவதாம்.

## மய்யித்துக்குச் செய்யும்முறை

மய்யித்துக்கு செய்யவேண்டுங் கடனாகிய பறுலுகள் நாலு 1-வது பரிசுத்தமான தண்ணீர் கொண்டு குளிப்பாட்டுகிறது 2-வது தூயதாகிய பிடவைகொண்டு கபனிடுகிறது 3-வது அதற்காகத் தொழுகிறது 4-வது நிலத்தில் குழித்தோண்டி அடக்கஞ் செய்கிறது. இந்நான்கு பறுலாகிய செயற்களன்றி மற்றும் சடங்குகளெல்லாம் சுன்னத்துகளாம் மாய்த்துத் தொழுகைக்கு தக்பீறு உசல்லிபறுலாஹதல் மய்யித்தி அறுபஅ தக்பீறாத்தின் லில்லாஹி அல்லாஹுஅக்பர் மய்யித்துத் தொழுகையில் விதியாகிய பறுலுகள் ஏழு 1-வது நிய்யத்து வைக்கிறது 2-வதுநாலு விடுத்தம் கைவிட்டுவிட்டு தக்பீற்கட்டுகிறது 3-வது சக்தியுள்ளவன் நின்றுதொழுகிறது 4-வது அவ்வல் தக்பீற்கட்டினவுடனே பாத்திஹா ஓதுகிறது 5-வது இரண்டாம் தக்பீற் கட்டினவுடனே அல்லாஹும்ம சல்லி அலாமுஹம்மதின் என்று சொல்லிக்கொண்டு கமாசல்லைததவுமாய் ஓதுகிறது 6-வது மூன்றும் தக்பீறு கட்டினவுடனே அல்லாஹும் மக்பிர்லி ஹய்பினா ஓமய்யத்தினா ஓகாயிபினா ஓஸகீரினா ஓகபீரினா ஓதக்ரினா ஓஉனதானா அல்லாஹும்மன் அஹயைத் தஹுமின்னா பஅஹ்யிஹி அல்இசுலாமி ஓமன தவப்பைத்தஹுமி மின்னாபத்தவப்பஹு அல்ஈமான் நாலாவது தக்பீற் கட்டினவுடனே அல்லாஹும் மலாத்தஹாரிம்னா அஜ்றஹு ஓலாததபுத்தின்னாப குதஹு என்று ஓதுகிறது சுன்னத்து 7-வது பறுனுசலாம் கொடுக்கிறதுமாம்.

நஸீஹத்துல் இஸ்லாம் ஷாபியிய்யா முற்றிற்று.

பிஸ்மில்லாஹி

காயற்பட்டணம் காமிலொலி
சிஹாபுத்தீன் ஸாமுநயினா லெப்பை
அலிம்ஸாஹிபு அவர்கள் அருளிச்செய்த

# தக்கசூறாத்து.

என்றுவழங்கும் ஸலாத்துல் அற்கான்
மாலையாக விருக்கும்

காப்பு-வெண்பா

தக்கசூறாத்தின் ஸலாத்துல் அற்கானை
மிக்கதமிழ்நூலில் விளக்கவே-ஹக்காக
ஓதும்புறக்கானுரையை ஓதஎளியேன் மனதில்
நீதியுறவே யருள்வாய் நீ.

## சிறப்புப்பாயிரம்

ஆலம்தனையெல்லாம் படைத்தாளின்ற
அல்லாதனக்கெல்லாம் புகழ்ச்சியுமாம்
ஆலநபிக்கும் அவர்கிளைக்கும்
அவர்தன்தொழுமா ரனைவருக்கும்
ஆலநபியும்மத் தானவர்க்கும்
அல்லாகிருபை யுண்டாகுமே
சாலநபிதம்மை மிகப்போற்றினேன்
ஸலாத்துல் அற்கானைச்சாற்றுவேனே.

நிறுத்தவியனிலைக்கூறல்

அல்லாஹுசுபுஹான வுத்தஆலா
அருளின்படியன்பாய்த் தொழும்தொழுகை
எல்லாஅமலிலும் ஏற்றமுமாய்
இசுலாம்தனக்காணி வேருமாகும்
சொல்லும்தொழுகைதான் ஒழுவன்றியே
துரிஸ்தாகாதென்ற படியாலிமாம்
வல்லதொழுகைக்கு முன்துடக்கின்
வரலாறுரைத்திட்ட வகையைக்கேளீர்.

முழுக்கின்வரலாறுகூறல்

கூறுமுழுக்குத்தான் ஆறுவகை
கொண்டுவிதிக்குமென் றறியுமிந்த
ஆறிலொருமூன்று ஆண்பெண்ணுக்கும்
ஆகும்அபவரை அபத்துள்ளானல்
ஊறுபணிவிழல் தஞ்சிடிலும்
ஒருமூன்றுமின்னர்க் காதும்பிள்ளை

பேறும்ஹைறலாகில் ஈரமன்றி
பிள்ளைப்பெருகிலும் ஒக்குமென்றார்.

முழுக்கின் பறுலுகளைக்கூறல்

இந்தமுழுக்கினில் பறுலொருமூன்
றென்றேஇயம்பினர் இமாம்ருபிவு
தந்தன்மேனியில் நஜீசுண்டானால்
தன்னைத்துய்தாக நீக்குவதும்
இந்தப்பெரிதான துடக்குதன்னை
யாநீக்குறேனென்று நிய்யத்தெண்ணல்
அந்தநிய்யத்தோடேமேனியை
அடங்கலுமப்பால நனைப்பதுமே.

முழுக்கின்சுறுத்தும் ஸுன்னத்துங்கூறல்

சொல்லுந்துடக்கற சுறுத்துமூன்று
துய்யபுனல்தேடல் இஸ்லாமாதல்
நல்லமேனியில் புளல்விலக்கல்
நாடியதைநீக்கல் ஸுன்னத்தாறே
வெல்லும்பிஸ்மிமுன் கைகழுவல்
மேவிஒலுச்செய்தல் துடர்பிடியாய்
வல்லகரத்தாலே சரீரம்தேய்த்தல்
வலதுபுறமுந்திக் கொள்ளலுமே.

முழுக்காளர் செய்யலாகாதகருமம் கூறல்

ஜுனுபானோர்க்கைந்து செயல்ஹாறாமாம்
தொழுகுறுஆனைத முஸஹ்றைபத்தொட
வினிதாய்ப்பள்ளியில் தரிக்கமக்கத்
துயல்பாம்கவுபாவைத் தவாபுசெய்ய
வனிதைஹயலாகில் ஹாறுமோரெட்டு
வகைமுன்சொனவைந்தும் முழுந்தாள்தொப்புள்
தனதிற்கிடையேகை யிணக்கஞ்சேர்க்கை
தான்செய்யநோன்பு பிடிக்கவுமே.
ஒலுவின் சுறுத்துகளைக் கூறல்
விதியாகுமிந்த ஒலுவுக்குமுன்
மேவும்சுறுத்தாறு உண்டதுகேள்
அதபினிஸ்ஸாமும் புத்தியமுண்
டாதல்பின்னொலு பறுலென்றெண்ணல்
ஒலுவினடவெல்லாம் உற்றறிதல்
ஒலுவுக்காம்துய்ய தண்ணீர்தேடல்
ஒலுவின்பறுலான மேனியிடத்
தொன்றுமறைவின்றி நீக்கலுமே.

ஒலுவின் பறுலுகளைக் கூறல்

உறுதிஒலிவினில் பறுலாறென்றார்
உன்னுமுதநிய்யத் ததனடவும்
பறுலாம்தொழுகையை ஹலாலாக்குகிறேன்
என்றுள்பதிஒடு முகங்கழுவல்
செறியும்முழங்கையுள் படகழுவல்
சிரத்தின்மயிர்முன்னிற் சிலநனைத்தல்
குறிகால்பரண்டையுள் ளாய்கழுவல்
கொண்டமுறைபோலே யொழுகலுமே.

ஒலுவின் சுன்னத்துகளைக் கூறல்

பத்துசுன்னத்துண் டொலுச்செய்வதில்
பகர்தல்பிஸ்மிமுன் கைகழுவல்
சத்தவாய்நாசி நீர்செலுத்தல்
சொல்லுஞ்சிரத்தினி நாலத்தொன்று
சத்தமணுகாது மஸஹுசெய்தல்
தாடிகால்விரல் குடைந்திடுதல்
சித்திபெறவலப் பாகமுந்தல்
செறியுமூறுப்பைமுக் கால்கழுவல்.

ஒலுவு முறியுங்காரணங்கூறல்

சொன்னாரிமாமைந்து பிறகாரத்தால்
துய்யஒலுமெய்யாய் முறியுமென
பின்முன்துவாரத்தால் யாதொன்றாலும்
பிறப்பட்டாலுமாம் மனியொழிய
உன்னிச்சமைந்ததோர் இருப்பென்றியே
உறங்கல் அபர்தனி லகங்கைபடல்
தன்னைமறந்திடில் தனக்குக்கொள்ள
தக்கமாதரைத் தொடுகினுமே.

ஒலுவில்லார் செய்யலாகாத காரியமும் தொழுகையின்

சறுத்தின் துகையும்

செறியுப் ஒலுவில்லார் மூன்றுசெயல்
செய்யஹறாமாகு மெனச்செப்பினர்
மறையாம்புறுகானைத் தொடவேதொழ
மக்கம்கவுபாவைத் தவாபுசெய்ய
நெறியாமுழுக்குடன் ஒலுவடவும்
நிகழ்த்திமுடித்துபின் தொழுகைக்குமுன்
அறியவிதிபத்து சறுத்துண்டென
அருளினாரிமாமாமதனைக் கேளீர்.

### தொழுகையின் சறுத்துகளைக் கூறல்

முந்தமுஸ்லிமாய் புத்திமானாய்
மொழிந்த துடக்குடன் நஜிஸுநீக்கல்
சந்தாபமன்றி யுயர்கிபுலா
தன்னைமுகநோக்கல் அபமறைத்தல்
இந்தத்தொழுகையின் பரிசறிதல்
இதற்காம்பொழுதையு மத்தொழுகை
தந்தன்மேல் பறுலெனப்பறுலைத்
தக்கஸுன்னத்தென் றெண்ணெண்ணுமே.
தொழுகை யெண்ணமும் பறுலின்தொகையுங்கூறல்
வழுவாதே இந்த சறுத்தோர்பத்து
வகைமுற்றறிந்தே யியற்றியபின்
பழுதாம்கருமங்கள் வாராமலும்
பயத்தால்தவ்பாவும் செய்துமீதுண்டு
குழுவாமனிதர்மேல் பூண்டவிதி
கொண்டதொருநாளைக் கைந்துநேரம்
தொழுவார்தொழுகையுள் ளறியவிதி
தொகுத்தபறுலுபத் தொன்பதென்றார்.

### தொகுத்த பறுலை வகுத்துக்கூறல்

நிய்யத்தும் அவ்வல் தக்பீறும்
நிற்குநிலையும்பின் பாத்திஹாவும்
மெய்யாம்றுகூவுடன் அதன்தரிப்பும்
மீளும் இவுத்திதா லதன்தரிப்பும்
செய்யுமுன்ஸுஜூ ததன்தரிப்பும்
சேர்ந்த இடையிருப்பதன் தரிப்பும்
தொய்யும் பின்ஸுஜூ ததன்தரிப்பும்
சொல்லும் பறுலிகு பதினாலாமே
மற்றபருலைந்தும் ஒடுக்கத்தினில்
வரும் அத்தஹிய்யாத் ததனிலாகும்
உற்றவிரும்பும் அத்தஹிய்யாத்தும்
ஓதும் ஸலவாத்தும் ஓர்ஸலாமும்
பற்றிபறுலெல்லாம் அடவடவாய்
பாங்காய்முடித்திட லாகும்பின்னர்
முற்றும்பறுலுபத் தொன்பதிலும்
மொழியும் சறுத்தெடுத் தோதுவேனே.

### நிய்யத்தின் சறுத்துக்களைக் கூறல்

உன்னும்நிய்யத்தில் சறுத்தாறென்றார்
உலகில் யாவையும் காண்போன்திரு

முன்னேதொழுகிறேனெனும்நிய்யத்து
முதிரும்பறுலானால் பறுலெனவும்
இன்னம் அதாவானால் அதாவெனவும்
இயம்பும் கலாவானால் கலாவென்வும்
பன்னும்நிய்யத்தை கல்பால் உன்னி
பகரும் தக்பூறில் சேர்த்திடலே.

தக்பீறின் சறுத்துகளைக் கூறல்

தக்பீறதனில் சறுத்தீரைந்து
சாற்றக்கேளு முன்னம் அல்லாஹு
அக்பறென்னுஞ்சொல் அறபாலுரை
ஆனஎழுத்தொன்றும் விடாதேசத்தும்
மிக்க அலிபையும் ஹேயுபேயும்
மிகவும் நீட்டாதே சொல்லுறேய்க்கு
லாக்கூன்படச்சொல்லு செவிகேட்கச்சொல்
துடாடவாய்நிலை தனில்முடியே.

கியாமெனும் நிலையின் சறுத்துகளைக்கூறல்

நிற்கும்கியாமிலே சறுத்தெட்டென்றார்
நிலைதனிலுன்றன் முதுகென்பெல்லாம்
ஒக்கவேநேரே நிற்பதாகும்
ஒருகுறைவன்றி யொருவன்வல
பக்கம்வளையிலும் இடங்கோணிலும்
பணியினுமுன்பின் இறுமாக்கிலும்
சக்கன்றிகியாம் போதாதென்று
சாற்றினார்நல்ல உலமாக்களே.

பாத்திஹாவின் சறுத்து மதன்வழுவுங்கூறல்

பாத்திஹாதனில் சறுத்தெட்டென்றார்
பகரும் எழுத்தொன்றும் விடாதேசற்றும்
ஏற்றபயனைப் பேதகங்ளாக்கும்
இஃறுபுவரா தாகப்பேணி
சாற்றுந்துடராக அடவுமாக
தக்கசெவிகேழ்க்க ஓதுவதும்
வேற்றுப்பாஷையால் ஓதாமலே
மேவுநிலைதனில் முடித்திடலே.

றுகூவிலும் தரிப்பிலும் சறுத்துகளைக்கூறல்

உற்றறுகூவினில் சறுத்திரண்டாம்
உள்ளங்கைமுழங் காலிரண்டில்
பற்றுமளவினி லுயராத்தாழ்வாய்ப்

பணிதல்பணிதலால் மற்றொன்றினை
சற்றுங்கருத்தினில் நாடாததால்
தரிப்பிலொருசறுத் துண்டுணர்க
அற்றநிலையினில் முதுகுசிரம்
அசையாமலதை யொடுங்கலாமே.

இவுத்திதாலிலும் தரிப்பிலும் சறுத்துகளைக்கூறல்

சறுத்துமூன்றென்றார் இவுத்திதாலில்
சாற்றும்இவுத்திதால் தனக்கென்றுன்னி
குறித்ததலை யினையுயர்த்துதலும்
கோணமலந்த நிலையைநேரே
நிறுத்துதலுமிந்த யிவுத்திதாலில்
நீளாதுகொள்ள லதிற்றறிப்பில்
உறுத்தசறுத்துள தொன்றசையா
தொடுங்கிநிற்றலென் றறிந்துகொள்வாய்.

ஸுஜூதின் சறுத்துகளைக்கூறல்

உன்னும்ஸுஜூதிலே சறுத்தாறென்றார்
உரைக்கக்கேள்நெற்றி திரையில்வைத்தல்
அன்னவியல்போடே துறந்துவைத்தல்
அகங்கைமுழந்தாளும் பாதவிரல்
தன்னையகம்பற்றத் தரையில்வைத்தல்
தலைபிடா கனம் பொறுக்கவைத்தல்
பின்னுயர்ந்துமுன் பணியக்கொள்ளல்
பேணும்ஸுஜூதன்றிப் பணியாதுமே.

ஸுஜூதின் வழுக்களையும் தரிப்பின் சறுத்தினையுங்கூறல்

செய்யும்ஸுஜூதினில் நெற்றியன்றி
சிரம்மூக்குகன்னம் புயம் வைக்கினும்
கையுளகமன்றி விரலூன்றினும்
காலுளகமன்றி புறம்வைக்கினும்
மெய்யாம்ஸுஜூதுதான் போதாதென்று
விளம்பினார்ஸுஜூது தரிப்பில்

உய்யும் சறுத்தொன்றுண் டஃதசைவற்
ருெடுங்கலாகுமென் றறிந்துகொள்வாய்.

### இடையிருப்பின் சறுத்தும்பின் ஸஜூதிருப்பின் முறையும் கூறல்

இந்தஸுஜூதிரண் டாவதற்கும்
இடையினிருப்பினில் சறுத்துமூன்ரும்
அந்தவிருப்பினை செவ்வையாக்கல்
ஆதற்கன்றிச்சிரம் உயர்த்திடாதல்
சந்தி நிளாமலொருமட்டாகல்
தரிப்பில்சறுத்தொன்ரு மசைவொடுங்கல்
பிந்திவரும்ஸுஜூ தொடுதரிப்பும்
பேணுமூன் செய்தபோலாகுமே'

### பிற்பட்ட அத்தஹிய்யாத்திருப்பின் சறுத்துகளைக் கூறல்

பேசும்பதினைந்தாம் பறுலாகிய
பிற்பட்டஅத் ஹிய்யாத்திருப்பில்
ஓசைபெறவந்த சறுத்திரண்டாம்
உணர்த்தநன்ருக உணர்ந்துகொள்வீர்
வாசமுளவுந்தன் முதுகுதன்னை
வளையாமல் செவ்வையிருந்திடினும்
மோசமணுகாம லதர்க்கென்றுன்னி
முதிருந்தலையினை எடுப்பதாமே.

### அத்தஹிய்யாத்து சலவாத்து சறுத்துகளின் விவரங்களைக் கூறல்

அத்தஹிய்யாத்தில் சறுத்தேழென்ருர்
ஆனஎழுத்தொன்றும் விடாதேசத்தும்
உற்றபயனைப் பேதங்களாக்க
உரைக்குப் இஃறுபு வாரரதோதல்
சத்தம்செவிகேட்கத் துடர்படவே
தக்கவிருப்தனில் முகித்திடவே
வெற்றிபெறும்ஸலவாத்தினுக்கும்
மேவும்சறுத்தது போலாமென்ருர்

## சலாமின் சறுத்துகளைக் கூறல்

ஐந்துஷறுத்தென்றார் முன்சலாமில்
அமையுமெழுத்தோடு சத்துநன்றாய்
உயர்ந்ததுடர்பாக செவியில்கேட்க
ஓதவிருப்பினில் முகித்திடலே
வந்த அடவினில் சறுத்தொன்றுண்டு
மருவும்பறுலுகள் முன்பின்னாகா
தந்தமுறப்பேணிக் கொடுவருதல்
அணியுப்பறுலென வறிந்திடலே
தக்கதொழுகையுள் பறுலானவும்
சமைந்தசறுத்யும் பேசியபின்
மிக்கதொழுகையில் விடப்படாதா
மேவு அப்ஆலு ஸுன்னத்தையும்
ஒக்கஹஆத்து ஸுன்னத்தையும்
ஊறுபடுதலு மில்லாமையும்
புக்கிப்பொருத்தஞ்செய் ஸுஜூதினையும்
புகல்வாம்நல்லோர்கள் மகிழ்ந்திடவே.

## அப்ஆலு சுன்னத்துகளைக் கூறல்

அழிவில்லானேவல் வணக்கத்தினி
லப்ஆலுசுன்னத் தாறுண்டுகேள்
தொழுகைநடு அத்த ஹய்யாத்திடத்தில்
தூயநபிபேரால் ஸலவாத்தோதல்
பழுதில்ஸுப்ஹுக்கும் றமலானுக்கும்
வழுவாதீறத்த ஹிப்பாத்திடத்தில்
வள்ளல்கிளையார்க்கும் ஸலவாத்தோதல்
பகரும்றூத்தோத நிலைதானுமே.

## அலங்காரசுன்னத்துகளைக் கூறல்

நல்லபறுலான தொழுகைதன்னில்
நடைசேர்சுன்னத்தெண்ணான்குண்டென்றார்
சொல்லுமுதல்அவ்வல் தக்பீறுக்கு
தோழ்நேர்செவிமட்டாய்க் கரமெடுத்தல்
வல்லவயிற்றின்மே லிடக்கைவைத்து

வலக்கையால்பூணப் பிடத்திடலும்
சொல்லும்றுகூவுக்கும் இவுத்திதால்க்கும்
செப்புமுறையால்கை யுயர்த்தலுமே
ஓசைமயத்தி வஜ்ஜஹ்த்தோதலும்
ஒவ்வொருறக் ஆத்தில் ஆஹூதோதலும்
பாசையுறை பாத்திஹாமுடிவில்
பயனைப்பற்றி ஆமீன்கூறலும்
மூசுமுன்ரண்டு றக்ஆத்திலும்
முழுசூறத்தன்றேல் ஆயததோதல்
நேசறுகூவுக்கும் ஸுஜூதினுக்கும்
நிகழும்இருப்பிற்கும் தக்பீறோதல்
ஒக்கறுகூவினில் தரிபடலில்
உரைத்த இவுததிதால் நிலையதனில்
மிக்கஸுஜூதினில் தஸ்பீஹோதல்
மேவும்அத்த ஹிய்யாத்திருப்பில்
தக்கவலதுகை விரல்மடக்கி
ஷஹாதத்துவிரல் தனைநிமிர்த்தி
பக்கமிடதுகை விரலையெல்லாம்
பரப்பித்துடைகள்மேல் வைத்தலுமே
இல்லல்லாவெனும் சொல்வரும்போ
தியல்பாம்ஷஹாதத்து விரலுயர்த்தல்
எல்லாவிருப்பிலும் கால்மேலாகல
ஈற்றினிருப்பொன்றுங் தரணியாகல்
சொல்லுமிருப்பிடக் சால்விரல்கள்
தோன்றவலக்கனக் கீழேயாக்கி
நல்லவக்காலின் படிநிறுத்தல்
காட்டும் அச்சத்தால் தொழுதலுமே
ஐயமறஅத்த ஹிய்யாத்தோடும்
அடுத்தசொல்மூன்றும் தொடர்பாயோதல்
செய்யுஞ் ஈஜூ திரண்டுமுடிந்தால்
சிறிதுமிருப்பில்லை தரிப்பன்றியே
கைகளிரண்டையும் நிலத்திலூன்றி
கடிதிநிலைத்னி லாகுதலும்

துப்பவிழிபுறம் பேர்ந்திடாமல்
ஜுஜூதிடும்தலம் பார்ப்பதுமே
சொல்மூன்றுமாகிறது அத்தஹிய்யாத்
* தல்மூபாறக்காத் துஸ்ஸலாவாத்
* துத்தய்யிபாத் என்பதாம்
கத்தன் தனையுன்னி வணங்கும்போது
கவுலாதாருய்வாய் குறுஆனோதலும்
சித்தமறவாதுள் ளகபினைத்தல்
செப்பும்இமாம் ஆமீனெடுசெப்பலும்
உத்தமத்திமாம் ஒலித்தோதுங்கால்
ஒலித்தேயோதலும் ளுஹறஹ் அஸ்றில்
ஸத்தமமையாம லோதுதலும்
தணித்தேயோதலு மவுமூமுக்கே
தொழுகைமுடிவத்த ஹிய்யாத்தீற்றில்
சொல்லல்கமாஸல்லேத் தொடுதுஆவும்
பழுதுபகராம லிட துபக்கம்
பார்த்தேசலாம்சொல்ல லிமாமேயாகில்
வழியேதொழுமவு மூக்களுக்கும்
மலக்குஜினனுக்கு மெனக்கருதல்
தொழிவில் துடர்ந்தவ ரவர்க்கும்தரம்
சொன்னோமெனக்கரு திடலுந்தானே
தன் தன்தொழுகைதான் தீர்ந்தபின்னர்
தஸ்பீஹொடு திக்றோதுதலும்
மூந்தவிடம்சற்றே சருகிநின்று
முறையாம்ஸுன்னத்துத் தொழுதிடலும்
அந்தவகை யலங்காரஸுன்னத்
தவைகளாம்தெரிந் துணர்ந்து கொள்வீர்
இந்தசுன்னத்தில் யாதொன்றையும்
இழக்கினும்கூடுந் தொழுகைதானே.

மக்றூகுகளைக்கூறல்

சீரான்தொழுகையின் மக்றூஹான
செயல்களிருபதுண் டுணர்ந்துகொள்மின்
மாராயமுகக் திரும்புதலும்

மலர்க்கண்ணவானக மேனோக்கலும்
வாருங்குழலாடை வினைசெய்தலும்•
வாயின்முறையன்றிக்கை வைத்தலும்
பாரில்தாளொன்றி லூன்றிடலும்
பணிதன்மலஞ்சலங் கான்முட்டோடே
ஒதுக்கத்திடத்தினும் தெருவிடத்தும்
ஓட்டைத்துறையினும் ஆலயத்தும்
புதைக்குமிடத்தினும் குப்பையினும்
புகுந்துவணங்கலும் றுகூவதனில்
கதிக்கச்சிரத்தினை குனிந்திடலும்
கரத்தைதமருங்கினில் கொடுத்திடலும்
எதிர்ப்பில்வல தினிலுமிழ்ந்திடலும்
இச்சையுணாமுனர் தொழுதலுமே

வணக்கவழுவினைக்கூறல்

சொல்லும் பறுலிலொன் றினைவிட்டாலும்
சூழும்ஷறுத்திலொன் றினைவிட்டாலும்
புல்லும் செயல்கள்முன் பின்னாகிலும
பொருந்தும் அடவாகப்பேணாதாலும்
அல்லாச்செயலதி லுள்ளதேனும்
அப்பால்செயல் மிக்காய்வரினுமற்றும்
லல்லகாரண மிடையீறாயின்
வழுவியகன்றிடும் தொழுகைதானே.

வழுவாதியற்றலைக் கூறல்

மறந்தசெயல்பின்னர் நினைவில்வந்தால்
மருவிக்கொள்ளுவா னதனைமீண்டால்
இறந்தசெயலினுக் கீடாக்குவான்
எதிர்ந்தசெயலெல்லா மடவாக்குவான்
துறந்தபோதும் அப்ஆலாகில்
துடர்ந்தபறுலினைப் பேணிக்கொள்வான்
நிறைந்தறக்ஆத்தில் ஸுஜூதிலையும்
நினைவினுறுதியான் முடிப்பனென்றார்

### ஸஜதா சஹுவுண்டாகக் காரணம்கூறல்

மலியும்சியலினை மடக்கஓதல்
மறுபால்பெயர்த்திடல் மறந்தானாக
நிலையில்கிறுந்திடல் நிலையில்போதல்
நிகழ்த்தல்முறைமொழி ஸலாமைப்போத்தல்
நவிதல்குறுஞ்சியல் அய்யமீளல்
நப்லாம்ஸபறில்தன் திசையுமாறல்
வலிதாய்ஆப் ஆலை விடுத்தலெல்லாம்
வருத்தும்சஹுவுட ஸஜதாவெயே.

### இமாம்மவுமூமிவர்கள் ஹுஜதா சஹ்வுகூறல்

துடர்ந்தோன்மறப்பினால் ஸஜதாசெய்யான்
துடர்ந்தபின்னரே செய்திடினும்
துடந்தோன்மாதியே பின்னாராயில்
துடர்ப்பட்டோனதைச் சுமந்துகொள்ளான்
துடர்ந்தோன்சலாம் சொல்லிபின்தொழுதால்
துடர்பட்டோனதும் சுமந்துகொள்வான்
துடர்ந்தோன் துடர்பட்டோன் ஸஜதாலெயும்
துடர்வான்மூண்டித்தால் தொழுகைபோமே
பின் துடர்ந்தவன் மறந்தவனை
பேணியவனோடும் தொழுதுபின்னர்
அந்ததில்தானும் ஸஜதாச்செய்வான்
அதனை அவன்செய்யாவி டினுமன்றே
அந்தமறதிகள் மிகவாகினும்
அமையும்ஸஜதா ஓரிரண்டேயாகும்
இந்தஸஜதாவும் ஸவாமுக்குமுன
என்றேயுரைத்திட்டார் இமாமசாபியீ.

### அந்தஸுஜூதின் முடிப்புகூறல்

தெரிந்தும்செய்யாமல் ஸலாம்சொல்வானால்
சேராதன்றியும் மறதியாகிவ்
பிரிந்தபொழுதுமே நீளமாகில்
போந்துவ்வாராதா மஸ்ஸஜதா
வரைந்தபொழுது நீளாதிரிக்கில்

வருமேமுன்னே ஸலாமும்பின்னே
இருந்தமறதிக்கி ஸஜதாச்செய்து
இல்லையாகிலும் வருமேயென்றார்

### தீராவழுக்களைக்கூறல்

தொழுகைமுறிதரும் பிரகாரங்கள்
சொல்லும்வகையொரு பதினொன்றென்றார்
மொழிகள்விளங்கவே பகர்ந்திடினும்
மூன்றுசியல்தொடர் பாச்செய்கிலும்
தொழுகையுடத்தொலு முறிந்திடலும்
தொடக்கின்வகை யாதொன்றுத்திடிலும்
கழுவவிதியான நஜீஸானதனை
கலைமேனி யிடங்காண்கலுமே
மெய்யினுடைநீங்கி வெளிகண்டாலும்
மேலும்கிபுலாவை மாறிடிலும்
அய்யமறவெடி சிரிப்பானதோர்
அற்பமாகிலும் செவிகேள்கினும்
செய்யும்நிய்யத்தை ஸந்தாபித்தால்
தீங்கில்யாதொன்றை குடித்திடிலும்
பொய்யாகுபிர்தன்னில் நிலைபட்டாலும்
பொருந்தாதகன்றிடுந் தொழுகைதானே.

முற்றுப்பெற்றது

ஆமீன்பிரஹ்மத்திக்க யா அர்கமற்றாஹிமீன்

---


## இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| முஹ்யித்தீன் ஆண்டவர் சத்துருசங்காரம் | 1 | 0 | 0 |
| முஹ்யித்தீன்மாலை 5-முஃஜாத்து சேர்ந்தது | 0 | 12 | 0 |
| நசீகத்துல் இசுலாம்ஹனபியா | 0 | 10 | 0 |
| மேற்படி ஷாப்பியா | 0 | 10 | 0 |
| மெய்ஞ்ஞானரத்தின அலங்காரக் கீர்த்தனை | 1 | 0 | 0 |
| ராஜமணிமாலை | 2 | 0 | 0 |

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,
189, தங்கசாலைத்தெரு, மதராஸ்.


TAMIL NADU ARCHIVES EGMORE, MADRAS 111231

---

ஸ்ரீ மகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.
Q. H. M. S. No. 872. காபி 2000 12-8-47

7B
5-35